



# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com





CHENNAI | Volume- 3 | Issue:257 | 02-04-2026 | வியாழக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

02.04.2026 பங்குனி 19
வியாழக்கிழமை

சூரிய உதயம் 6.11

திதி:
இன்று காலை 7.57 வரை
பௌர்ணமி பின்பு பிரதமை.

நட்சத்திரம்:
இன்று மாலை 4.56 வரை
அஸ்தம் பின்பு சித்திரை.

யோகம் :
இன்று பிற்பகல் 2.24 வரை
துருவம் பின்பு வ்யாகாதம்.

கரணம்
இன்று காலை 7.57 வரை
பவம் பின்பு இரவு 8.24 வரை
பாலவம் பின்பு கௌலவம்

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.10 வரை
யோகம் சரியில்லை பின்பு
சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று மாலை 5.46 வரை
சதயம் பின்பு பூரட்டாதி.

நல்ல நேரம்
காலை 10.30 – 11.30.
மாலை 12.30 – 1.30

இராகு காலம்
பிற்பகல் 1.30 – 3.00.

எமகண்டம்
காலை 6.00 – 7.30.

குளிகை
காலை 9.00 – 10.30.

இன்று கரி நாள்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# ராகுல் காந்திக்கு தோல்விகளின் சதம் காத்திருக்கிறது:மோடி

கோகாமுக், ஏப்.2:

அசாமில் 3-வது முறையாக தேசிய ஜனநாயக் கூட்டணி ஆட்சி அமையும் என்று நம்பிக்கை தெரிவித்த பிரதமர் நரேந்திர மோடி, காங்கிரஸ் கட்சியின் சுய பிரகடன இளவரசருக்கு தோல்விகளின் சதம் காத்திருக்கிறது என்று விமர்சித்தார்.



அசாம் சட்டப்பேரவைத் தேர்தலை ஒட்டி கோகாமுக் பகுதியில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, "முதலில் சர்பானந்த சோனாவால் தலைமையிலும் பின்னர் ஹிமந்த பிஸ்வா சர்மா தலைமையிலும் அசாமில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்த 10 ஆண்டுகால ஆட்சியில், அசாம் ஒரு புதிய சேவை மற்றும் நல்லாட்சிக்கான சகாப்தத்தைக் கண்டுள்ளது. வளர்ந்த இந்தியாவை கட்டமைக்க வளர்ந்த அசாமை உருவாக்குவதற்கான தேர்தல் இது. இம்முறையும் தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்று மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்கும் என்பது உறுதி. அதேபோல், காங்கிரஸ் கட்சிக்கும் மூன்றாவது முறையாக தோல்வி கிடைப்பது உறுதி. காங்கிரஸ் கட்சியின் சுய பிரகடன இளவரசருக்கு 100-வது தோல்வி காத்திருப்பதும் உறுதியாகிவிட்டது.

அசாம் தேர்தல் அறிவிப்பு வெளியான பிறகு இதுவே எனது முதல் பொதுக்கூட்டம். இங்கு திரண்டுள்ள மக்கள் கடலே, நாங்கள் மூன்றாவது முறையாக வெற்றி பெற இருக்கிறோம் என்பதற்கான சான்று. உங்கள் ஆசியுடன் நான் மூன்றாவது முறையாக பிரதமரானேன். இந்த திடலுக்கு நான் வருகை தருவது இது மூன்றாவது முறை. உங்கள் ஆசியுடன் அசாமில் நாங்கள் மூன்றாவது முறை வெற்றி பெறுவோம்.

பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ஏற்கனவே 22 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் உறுதியான வீடுகளை பெற்றுள்ளன. இந்த திட்டத்தின் கீழ் வீடு கிடைக்காத குடும்பங்களுக்கு கண்டிப்பாக வீடு கட்டித்தரப்படும். பாஜக தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள வாக்குறுதிகளின்படி, இத்திட்டத்தின் கீழ் 15 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடையும். ஏழை குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு மழலையர் வகுப்பு முதல் பட்ட மேற்படிப்பு வரை இலவச கல்வி வழங்கப்படும்.

பெண் லட்சாதிபதிகள் திட்டத்தின் கீழ் அசாமில் ஏற்கனவே சுமார் 3 லட்சம் பெண்கள் லட்சாதிபதிகளாகி உள்ளனர். அடுத்த 5 ஆண்டுகளில் 40 லட்சம் பெண்களை லட்சாதிபதிகளாக ஆக்க நாங்கள் இலக்கு நிர்ணயித்துள்ளோம்" என தெரிவித்தார்.

# பெண்களோடு சேர்ந்து தேயிலை பறித்தார் பிரதமர் மோடி

திப்ருகர், ஏப்.2:

அசாம் மாநில சட்டமன்ற தேர்தல் ஒரே கட்டமாக ஏப்ரல் 9ம் தேதி நடைபெறவுள்ளது. பாஜக மற்றும் காங்கிரஸ் இடையே இருமுனைப் போட்டி நிலவும் நிலையில், இரு கட்சிகளின் தலைவர்களும் தீவிரப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



இந்த நிலையில் அசாமில் நடைபெறும் இரு பொதுக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்காக சென்றுள்ள மோடி, திப்ருகர் மாவட்டத்தில் உள்ள தேயிலைத் தோட்டத்துக்கு இன்று காலை சென்றார். அங்கு பெண் தொழிலாளர் களுடன் இணைந்து தேயிலைப் பறித்து அவர்களுடன் கலந்துரையாடினார்.

இயற்கை எழில் சூழ்ந்த தேயிலை தோட்டத்தில் பெண்களுடன் அவர் கலந்துரையாடும் படங்கள் இணையத்தில் வைரல் ஆகியுள்ளன. அந்த புகைப்படங்களை தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ள மோடி, தேயிலை என்பது அசாம் மாநிலத்தின் ஆன்மா. இங்கு உற்பத்தியாகும் தேயிலை, உலகம் முழுவதும் பயணிக்கிறது. இன்று காலை திப்ருகர் தேயிலை தோட்டத்தில் பணியாற்றும் பெண்களுடன் கலந்துரையாடினேன். அது ஒரு மறக்க முடியாத அனுபவம். ஒவ்வொரு தேயிலைத் தோட்டத் தொழிலாளிகளின் குடும்பத்தின் முயற்சிகளை நினைத்து பெருமைக் கொள்கிறோம். அவர்களின் கடின உழைப்பும் விடாமுயற்சியும் அசாமின் பெருமையை உயர்த்தியுள்ளன" எனக் குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியாவில் விமான எரிபொருள் விலை இரு மடங்கு அதிகரிப்பு

## 1000 லிட்டர் ரூ.2.07 லட்சமாக உயர்வு

புதுடெல்லி, ஏப்.2:

மேற்காசியாவில் நிலவும் பதற்றம் காரணமாக இந்தியாவில் விமான எரிபொருள் விலை இரு மடங்காக உயர்த்தப்பட்டு, ஒரு கிலோ லிட்டர் ரூ.2.07 லட்சத்துக்கு விற்கப்படுகிறது.

பொதுத்துறை நிறுவனங்களான இந்தியன் ஆயில் கார்பரேஷன், பாரத் பெட்ரோலியம், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகியவை சர்வதேச சந்தை நிலவரங்கள் மற்றும் அந்நிய செலாவணி மாற்று விகிதத்தின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியன்று எல்பிஜி மற்றும் ஏடிஎப் *(aviation turbine fuel)* விலைகளை மாற்றி அமைக்கின்றன.

இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா இணைந்து ஈரான் மீது கடந்த பிப். 28-ம் தேதி தாக்குதலை தொடுத்தன. இதற்கு ஈரான் பதிலடி கொடுக்கத் தொடங்கியது. ஈரானுக்கு எதிராக தொடங்கிய இந்த போர், வளைகுடா நாடுகளுக்கும் பரவியுள்ளது. மேலும், உலகுக்கு 4-ல் ஒரு பங்கு எரிபொருளை வழங்கும் ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கியுள்ளது. மோதல் ஒரு மாதத்தைக் கடந்து தொடர்ந்து நடைபெற்று வருவதால், சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது.

தற்போது, இந்தியாவில் விமான எரிபொருள் விலை இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. ஒரு கிலோ லிட்டருக்கு ரூ.1,10,703.08 உயர்த்தப்பட்டு, ரூ.2,07,341.22 ஆக விற்கப்படுகிறது. நேற்றைய விலையுடன் ஒப்பிடும்போது 114.5% உயர்த்தப்பட்டுள்ளது.

இதுவே முதல்முறை: விமான எரிபொருள் விலை ரூ.2 லட்சத்தைத் தாண்டி விற்கப்படுவது இதுவே முதல்முறை. இதற்கு முன் உக்ரைன் மீதான ரஷ்ய போர் காரணமாக கடந்த 2022-ல் விமான எரிபொருள் விலை கிலோ லிட்டருக்கு ரூ.1.1 லட்சம் உயர்த்தப்பட்டது. எரிபொருள் விலையில் ஏற்பட்டுள்ள இந்த கடும் உயர்வால், விமானப் பயணக் கட்டணம் உயர்த்தப்படுவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது.

வணிக கேஸ் விலை உயர்வு: இதேபோல், வணிகப் பயன்பாட்டிற்கான சமையல் காஸ் சிலிண்டர்களின் விலை இன்று உயர்த்தப்பட்டுள்ளது. பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, 19 கிலோ எடை கொண்ட வணிக சிலிண்டரின் விலை சுமார் ரூ.200 உயர்த்தப்பட்டுள்ளது. இது ஹோட்டல் உரிமையாளர்கள், உணவகங்கள் மற்றும் சிறு தொழில் செய்பவர்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இந்த விலை உயர்வு காரணமாக உணவகங்களில் உணவுகளின் விலை அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

# 8வது மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் தொடங்கியது

புதுடெல்லி, ஏப்.2:

இந்தியாவில் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பு கடைசியாக 2011-ம் ஆண்டு நடத்தப்பட்டது. சுதந்திரத்துக்கு பிறகு இதுவரை 7 முறை மக்கள் தொகை கணக்கெடுப்புகள் நடந்துள்ளன. 8-வது கணக்கெடுப்பு கடந்த 2021-ம் ஆண்டே நடத்தியிருக்க வேண்டும், ஆனால் கொரோனா காரணமாக தள்ளி வைக்கப்பட்டது.

அதன்படி இன்று (ஏப்ரல் 1-ந்தேதி) முதல் செப்டம்பர் 30-ந்தேதி வரை வீடுகளை பட்டியலிடுதல், வீடுகளை கணக்கெடுத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பில் முதல்முறையாக பொதுமக்களே தங்கள் பெயர்களை சேர்த்துக்கொள்ள முடியும்.

இதற்கான முறையான அறிவிப்புகளை மத்திய அரசு ஏற்கனவே வெளியிட்டிருந்தது.

இது தொடர்பாக மத்திய அரசு வெளியிட்டிருந்த அறிவிப்பில், 2027-ம் ஆண்டு இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின் வீட்டுப் பட்டியல் நடவடிக்கைகள் ஏப்ரல் 1-ந்தேதி முதல் செப்டம்பர் 30-ந்தேதி வரை அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், அந்தந்த மாநிலமும் யூனியன் பிரதேசமும் குறிப்பிடும் 30 நாட்களுக்குள் நடைபெறும் என்று மத்திய அரசு இதன்மூலம் அறிவிக்கிறது என குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அனைத்து ஏற்பாடுகளும் தயார் செய்யப்பட்டதை தொடர்ந்து மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி (01.04.2026) தொடங்கியது. வீட்டில் உள்ள அறைகளின் எண்ணிக்கை, டிவி, இருசக்கர வாகனம், கணினி உள்ளிட்ட பொருட்களின் எண்ணிக்கை எத்தனை உள்ளது என்பது உள்ளிட்ட 33 கேள்விகள் இதில் கேட்கப்படும்.

# பாஜகவுடன் திமுக கூட்டணி வைத்தது; இபிஎஸ் போல அடகு வைக்கவில்லை: மு.க. ஸ்டாலின்

திருச்சி, ஏப்.2:

திமுக தேர்தல் அறிக்கையால் எடப்பாடி பழனிசாமிக்கு பதற்றம் ஏற்பட்டுள்ளதாக முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று (ஏப். 1) தெரிவித்தார்.



தமிழ்நாட்டைக் காக்க வேண்டும் என்றால், வளர்ச்சிப் பாதையில் நடைபோட வேண்டும் என்றால் மீண்டும் திமுக ஆட்சியே அமைய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

கரூர், கிருஷ்ணராயபுரம், குளித்தலை, அரவக்குறிச்சி தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் இன்று (ஏப். 1) பிரசாரம் மேற்கொண்டார்.

பிரசாரத்தில் மு.க. ஸ்டாலின் பேசியதாவது:

"கரூருக்கு மட்டும் ரூ. 5 ஆயிரம் கோடி அளவுக்கு திட்டங்களை செய்துள்ளோம்.

இந்த வளர்ச்சியை சாத்தியப்படுத்திய தெம்போடு உங்களிடம் வாக்கு கேட்டு வந்திருக்கிறேன்.

மகளிருக்கு இலவச விடியல் பயணம், உரிமைத் தொகை திட்டங்களை அறிவித்தேன். அதனை செய்தேன். நான் கலைஞரின் மகன். கொடுத்த வாக்குறுதிகளை மறக்கவும் மாட்டேன். மறுக்கவும் மாட்டேன்.

10 ஆண்டுகால ஆட்சியில் அரசு ஊழியர்களுக்கு துரோகம் செய்தது அதிமுக. அவர்களின் கோரிக்கைகளை திமுக நிறைவேற்றியுள்ளது.

நம் தேர்தல் அறிக்கையில் உள்ள திட்டங்கள் குறித்துதான் தமிழ்நாடே பேசிக்கொண்டு இருக்கிறது. இல்லத்தரசி திட்டத்தில் ரூ.8,000 கூப்பன் மூலம் பிடித்த பொருள்களை பிடித்த கடையில் பெண்கள் வாங்கிக்கொள்ளலாம்.

நம் தேர்தல் அறிக்கை எடப்பாடி பழனிசாமியின் தூக்கத்தை கெடுத்துள்ளது. என்னோடு பக்கபலமாக மக்கள் இருக்கும் வரை தமிழ்நாட்டிற்கான வளர்ச்சி தொடரும்.

மக்கள் நிம்மதியாக இருப்பதைப்பார்த்து அதிமுக, பாஜகதான் பதற்றத்தில் உள்ளது.

வாஜ்பாய் அரசின் கடிவாளம் கருணாநிதி கையில் இருந்தது. தேசிய ஜனநாயகக் கூட்டணியின் குடுமி அமித் ஷாவின் கையில் உள்ளது. நாங்கள் பாஜகவுடன் கூட்டணி வைத்தோமே தவிர, எடப்பாடி பழனிசாமி போன்று அடகு வைக்கவில்லை.

ஓ.பன்னீர் செல்வம் முதல் சசிகலா வரை துரோகம் செய்தவர் எடப்பாடி பழனிசாமி. திமுகவில் இருந்து பிரிந்து உருவானதுதான் அதிமுக. தற்போது அக்கட்சியில் இருந்து தாய் கட்சிக்கே திரும்புகின்றனர்.

துரோகத்துக்கு துரோகமே துணை என்பதைப்போல, அதிமுகவுக்கு பாஜக துணையாக உள்ளது. தடம் மாறி கூட்டணி வைத்துள்ள எடப்பாடி பழனிசாமியின் துரோகங்களை எண்ணிப்பாருங்கள்.

தமிழ்நாட்டில் நேரடியாக மோத வலிமை இல்லாததால், அதிமுகவை பயன்படுத்திக்கொள்கிறது பாஜக. மத்தியில் பாஜக அரசு அமைந்ததில் இருந்து தமிழ்நாட்டிற்கு எந்தவொரு நன்மையும் நடந்தது இல்லை.

மதுரை எய்ம்ஸ், மெட்ரோ திட்டத்திற்கு நிதி, குடிநீர்த் திட்டத்திற்கு நிதி என எதையும் பாஜக தரவில்லை. ஹிந்தி திணிப்பை எதிர்த்ததால், தமிழ்நாட்டிற்கு நிதி தர பாஜக மறுத்துள்ளது.

தமிழ்நாட்டின் கோரிக்கைகளில் ஒன்றைக் கூட பாஜக நிறைவேற்றவில்லை.

தமிழ்நாட்டைக் காக்க வேண்டும் என்றால், வளர்ச்சிப் பாதையில் நடைபோட வேண்டும் என்றால் மீண்டும் திமுக ஆட்சியே அமைய வேண்டும்" என மு.க. ஸ்டாலின் பேசினார்.






## திருக்குறள் குறள்-577

**கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர்**
**கண்ணுடையார் கண்ணோட்டம் இன்மையும் இல்**



கண்ணோட்டம் இல்லாத மக்கள் கண் இல்லாதவரே ஆவர், கண் உடைய மக்கள் கண்ணோட்டம் இல்லா திருத்தலும் இல்லை.

## சிந்திக்க ஒரு நொடி



பணத்தால் வாங்கக்கூடிய விசயங்களுக்கு மட்டும் பணத்தை செலவிடுங்கள்...

பணத்தால் வாங்க முடியாத விஷயங்களுக்கு நேரத்தை செலவிடுங்கள்

**உஷா முத்துராமன்**

# தண்டலை நடுநிலைப் பள்ளியில் விளையாட்டு விழா



**புதுக்கோட்டை, ஏப்.02:** புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி ஒன்றியம் தண்டலை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 64 ஆம் ஆண்டு விழா கொண்டாடப்படுவதை முன்னிட்டு மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் விளையாட்டு விழா பள்ளி தலைமை ஆசிரியர் சந்திரசேகர் தலைமையில் கொண்டாடப்பட்டது.

ஆசிரியர்கள் சீனிவாசன், தேன்மொழி, மாலதி சரண்ராஜ், பிரதீபா ஆகியோர் விளையாட்டுப் போட்டிகளை நடத்தினர் மாணவர்களுக்கு கல் சேகரித்தல், கண்களை மூடி பலூன் உடைத்தல், ஊசி நூல் கோர்த்தல், பாட்டிலில் நீர் நிரப்புதல் போன்ற விளையாட்டுகளும் பெற்றோர்களுக்கு லக்கி கார்னர், லக்கி ஹேண்ட் போன்ற விளையாட்டுகள் நடத்தப்பட்டன

முன்னதாக அனைத்து மாணவர்களும் விளையாட்டுச் சீருடையில் பள்ளியில் பேரணியாக வலம் வந்தனர் பள்ளி மேலாண்மை குழு தலைவர் உஷாராணி உள்ளிட்ட பெற்றோர்கள்,முன்னாள் மாணவர்கள் சுமார் 50க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெற்ற அனைவருக்கும் ஏப்ரல் இரண்டாம் தேதி நடைபெற உள்ள ஆண்டு விழாவில் பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

## திமுக வேட்பாளர் சி.வெ.கணேசன் வாக்குச் சேகரிப்பு



**கடலூர், ஏப்.02:** திட்டக்குடி தொகுதி திமுக வேட்பாளர் சி.வெ.கணேசன் மலையனூர் கிராமத்தில் செவ்வாய் கிழமை தனது முதல் நாள் வாக்குச் சேகரிப்பு நடைபெற்றது.

திட்டக்குடி தொகுதி திமுக வேட்பாளர் சி.வெ.கணேசன் வாக்குச் சேகரிப்பு நடந்தது. திட்டக்குடி சட்டப்பேரவைத் தொகுதியில் மதசார்பற்ற திமுக சார்பில் போட்டியிடும், முன்னாள் தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை அமைச்சரும் மேற்கு மாவட்ட செயலாளர் சி.வெ.கணேசன் மீண்டும் உதயசூரியன் சின்னத்துக்கு போட்டியிடுகிறார். இந்நிலையில் மங்களூர் அடுத்த மலையனூர் கிராமத்தில் தனது முதல் நாள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அவருக்கு அந்த கிராம மக்கள் பால் கூடம் எடுத்து மேலதாலங்குடன் ஊர்வலமாக சென்று வரவேற்பு அளித்தனர். இதில் கட்சி நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சியினர் உடனிருந்தனர்.

# மண்டபம் அருகே 55-ம் ஆண்டு பங்குனி உத்திர திருவிழா



**மண்டபம், ஏப். 02:** மண்டபம் அருகே ஶ்ரீ சக்தி வடிவேல் முருகன் ஆலயத்தில் 55-ம் ஆண்டு பங்குனி உத்திர திருவிழாவில் நடைபெற்றது.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அருகே வேதாளை ஊராட்சிக்கு உட்பட்ட இடையர் வலசையில் அமர்ந்து அருள்பாலித்து வரும் ஏழு கிராமங்களுக்கு பாத்தியப்பட்ட ஸ்ரீசக்தி வடிவேல் முருகன் கோவிலில் கடந்த மார்ச் 23-ம் தேதி காப்பு கட்டுதலுடன் பங்குனி உத்திர திருவிழா தொடங்கியது. இதில் 600 -க்கும் மேற்பட்ட பக்தர்கள் காப்பு கட்டி விரதம் மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து கடந்த மார்ச் 29-ம் தேதி வேதாளை தென் கடற்கரை சென்று கோவில் சார்பில் பொது காவடி கட்டப்பட்டது. காவடி முருகன் விஷால், இடும்பன் செந்தில்குமார், தேர் முருகன் தனபால் ஆகியோர் பொது நேர்த்தி கடன் செலுத்தினர். பங்குனி உத்திர நாளன்று கூட்டச்சாலை நாகநாதர் ஆலயத்திலிருந்து பால்குடம், பறவைக் காவடி, இளநீர் காவடி, தேர் காவடி மற்றும் வேல்காவடி, எடுத்து பக்தர்கள் நேர்த்தி கடன் செலுத்தினர். ஶ்ரீசக்தி வடிவேல்முருகனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மதியம் பொதுமக்கள் சார்பாக அன்னதானம் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாலை 7 மணியளவில் பூக்குழி வளக்கப்பட்டு, அதிகாலையில் பக்தர்கள் பூக்குழி இறங்கும் நிகழ்ச்சியும், அதனைத் தொடர்ந்து பெண்கள் பூக்குளிக்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இந்த பங்குனி உத்திர விழாவில் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த சுமார் 7 ஆயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை ஆலய தர்மகர்த்தா ஆதிமூலம், கோவில் நிர்வாக கமிட்டி தலைவர் முனியசாமி, செயலாளர் முருகேசன், பொருளாளர் கோபாலகிருஷ்ணன் மற்றும் உறுப்பினர்கள் செய்திருந்தனர். விழாவிற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை மண்டபம் காவல் துறையினர் செய்திருந்தனர்.

## துரைமுருகன் காரில் அதிரடி சோதனை நடத்திய தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள்!



**வேலூர், ஏப். 02:** வேலூர் மாவட்டம், காட்பாடி அடுத்த பொன்னை பகுதியில் தேர்தல் பிரச்சாரத்திற்காக சென்ற திமுக பொதுச்செயலாளரும், காட்பாடி சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளருமான துரைமுருகனின் வாகனத்தை (கார்) நிறுத்தி சோதனை செய்தனர் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள். ஆனால் அந்த வாகனத்தில் எதுவும் கைப்பற்றப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தனது வாகனத்தில் சோதனை நடத்தப்பட்டுள்ளதால் துரைமுருகன் எரிச்சலுடன் காணப்பட்டார்.

## ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயம் 9-வது ஆண்டு வருஷாபிஷேகம் சிறப்பு வழிபாடு



**புதுக்கோட்டை ஏப்.02:** ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயம் வருஷாபிஷேகம் மற்றும் பங்குனி உத்திரம் முன்னிட்டு ஹோமம், அம்மன் திருவீதி உலா, வைஸ்யர்கள் ஆண்கள், பெண்கள் பால்குடம் ஊர்வலம் நம் வாசவி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், பால், தயிர், இளநீர், பன்னீர், சந்தனம், தேன்,பஞ்சாமிர்தம், வெட்டிவேர் வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள் அலங்காரம், தங்க ஆபரணங்களுடன், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகாதீபாராதனையும் நடைபெற்றது. பங்குனி உத்திரம் முன்னிட்டு முருகப் பெருமானுக்கு அபிஷேகம், அலங்காரங்கள் வாசவி மாதர் சங்கத்தினர் வாசவி காயத்ரி, அஷ்டோத்திரம், அம்மன் பாடல்கள், முருகன் பாடல்கள் பாடினார்கள். பிரசாதம் காலை உணவு வழங்கப்பட்டது. வெகு சிறப்பாக நடைபெற்றது. பொதுமக்களுக்கு வைசியர்களால் அன்னதானம் நடைபெற்றது. சுமார் 150 நபர்களுக்கு மேல் அன்னதானம் வழங்கப்பட்டது. இவ்விழா ஏற்பாடு செய்தவர்கள்: ஆர்ய வைஸ்யர் சங்க நிர்வாகிகள் புதுக்கோட்டை. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## காஞ்சிபுரம் கொடை வள்ளல் பச்சையப்பரின் 232வது நினைவேந்தல் வரலாற்று மலரும் வெளியிடப்பட்டது !



**காஞ்சிபுரம், ஏப். 03 :** காஞ்சிபுரம் வள்ளல் பச்சையப்பரின் 232வது நினைவேந்தல் நிகழ்ச்சி காஞ்சிபுரம் ஆடவர் கல்லூரியில் வெகு விமர்சியாக நடந்தது. கொடை வள்ளல் பச்சையப்பரின் வரலாறு மலரும் வெளியிடப்பட்டது.

கல்லூரி முதல்வர் முனைவர் வ.அண்ணாதுரை கொடை வள்ளல் பச்சையப்பரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி, கொடை வள்ளல் பச்சையப்பரின் வரலாற்று மலரும் வெளியிடப் பட்டது. கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் சங்க பொறுப்பாளர் வி.எஸ்.ராஜேந்திரன் தலைவர் கே.இ.எஸ்.சுந்தர் ராஜன், செயலாளர் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்களும் பங்கேற்றனர். பேராசிரியர்கள் அலுவலர்கள் மற்றும் மாணவர்கள், மாணவிகள் பங்கேற்றனர். பல்வேறு போட்டிகளில் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு நினைவுப் பரிசும் சான்றிதழும் வழங்கப்பட்டது. இறுதியில் கல்லூரியின் சார்பிலும் முன்னாள் மாணவர் சங்கத்தின் சார்பிலும் பொது மக்கள் 500 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

## அணைக்கட்டு தொகுதி திமுக வேட்பாளர் நந்தகுமார் வாக்கு சேகரிப்பு!




**வேலூர், ஏப்.02:** திமுக தலைவர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆசி பெற்ற அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி வேட்பாளர் திமுக வேலூர் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் (அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர்) அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி, வேலூர் ஒன்றியம், மேல்மேல்மொணவூர் ஊராட்சி பகுதியில் திராவிட மாடல் நல்லாட்சியின் சாதனைகளை எடுத்து கூறி உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் ஒன்றிய செயலாளர் ஞானசேகரன், திமுக மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் நிர்வாகிகள், கழக தோழர்கள் உடன் இருந்தனர்.

# தேர்தல் விழிப்புணர்வு நாடகம்



**திருவண்ணாமலை, ஏப்.02:** திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் நடைபெற்றதேர்தல் விழிப்புணர்வு நாடகத்தை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் தர்ப்பகராஜ் அவர்கள் துவக்கி வைத்தார்.

நாடக கலைஞர்கள் நாடக ஆசிரியர் குமணன் மற்றும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பொதுக்குழு உறுப்பினரும்,தென்னிந்திய நடிகர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினருமான நாடக கலைஞர் வி.கே.வாசுதேவன், சங்கர்,பட்டு ,ஜெயராஜ் ஆகியோர் ஆரணி சிவா அம்மு (எ) சத்தியா அவர்களின் கலை குழுவுடன் இணைந்து வாக்களிப்பது பற்றிய விழிப்புணர்வு நாடகங்களில் நடித்து பொதுமக்கள் வாகனங்களில் விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஒட்டியும் நோட்டிஸ் பொதுமக்களிடம் வழங்கி வாக்களிப்பது நம் கடமை மட்டுமல்ல நம் உரிமை என்பதை விளக்கி பொதுமக்களுக்கு மற்றும் வியாபாரிகளுக்கு நோட்டீஸ் வழங்கி விழிப்புணர்வு ஈடுபட்டனர்.

மற்றும் ஆரணி சட்டமன்ற தொகுதியில் 100% வாக்களிப்பதற்காக கோலம் பொட்டி நடத்தப்பட்டது மற்றும் கையெழுத்து போட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் ஆரணி தேர்தல் அதிகாரிகள்பெண்கள் பொதுமக்கள் இளைஞர்கள் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

# தாமனூர் ஜடா முனீஸ்வர ஆலய மண்டல பூஜை



**விழுப்புரம், ஏப்.02:** விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் தாமனூர் ஜடாமுனீஸ்வர ஆலய மஹா கும்பாபிஷேக விழா கடந்த தை மாதம் 29 வியாழக்கிழமை நடைப்பெற்றது அதனைத் தொடர்ந்து ஒரு மண்டலம் நிறைவுபூஜை புதன்கிழமை காலை வெகுவிமர்சையாக நடைபெற்றது .

கிராம பொதுமக்கள் குலதெய்வ வழிபாடு செய்வோர் மற்றும் உள்ளூர் வெளியூர் இருந்து கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். விழாவிற்கு வந்த அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

**அகரம் ராமதாஸ்**
**செய்தியாளர்**

# சீர்காழி சாய்பாபா ஆலயத்தில் ஸ்ரீ ராமநவமி விழா



**சீர்காழி, ஏப் , 02:** மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தென்பாதியில் அமைந்துள்ள ஸ்ரீ சீரடி சாய்பாபா தியான ஆலயத்தில் ஸ்ரீ ராம நவமி விழாவை முன்னிட்டு பாபாவிற்கு விசேஷ பூஜைகள், ஹோமங்கள்,சிறப்பு அபிஷேக ஆராதனைகள் வெகு விமரிசையாகக் நடைபெற்றது,

இந்நிகழ்வு தொடக்கமாக காலை 8.30 மணி அளவில் சீர்காழி ஆஞ்சநேயர் கோவில் அருகில் அமைந்துள்ள ஸ்ரீ சக்தி விநாயகர் ஆலயத்திலிருந்து மங்கல இசை முழக்கத்துடன் பால்குடம் புறப்பட்டு முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலமாக ஆலயத்திற்கு வந்தனர்.

பக்தர்கள் தங்கள் கரங்களாலேயே சாய்பாபாவிற்கு பால் அபிஷேகம் செய்து நேர்த்திக்கடன் செலுத்தினர். காலை 10.30 மணி முதல் உலக நன்மைக்காகவும், மக்கள் நல்வாழ்வு வேண்டி கணபதி ஹோமம் நவகிரஹ பிணிகள் நீங்கி ஆரோக்கியம் தரும் தன்வந்திரி ஹோமம், செல்வம் பெருக செய்யும் லட்சுமி ஹோமம் மற்றும் கண் திருஷ்டி ஹோமம் உள்ளிட்ட ஆகம விதிப்படி சிறப்பு ஹோமங்கள் நடத்தப்பட்டன.

யாக பூஜைகளை தொடர்ந்து கடம் புறப்பாடு செய்யப்பட்டு சாய்பாபாவிற்கு புனித நீர் ஊற்றப்பட்டு மகா அபிஷேகம் மற்றும் அலங்கார தீபாரதனை நடைபெற்றது, சாய்பாபா அலங்காரத்துடன் அருள் பாலித்தார். நண்பகல் 12 மணி அளவில் பாபாவிற்கு மதிய ஆர்த்தி காண்பிக்கப்பட்டது. சீர்காழி மற்றும் சுற்றுவட்டார பகுதி பக்தர்கள் திரளாக கலந்துகொண்டு சாய் தரிசனம் செய்தனர்.

தொடர்ந்து மகா அன்னதானம் வழங்கப்பட்டது.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை ஸ்ரீசீரடி சாய்பாபா டிரஸ்ட் நிர்வாகிகள், சீர்காழி மற்றும் தென்பாதி ஊர் மக்கள் மற்றும் சாய் அன்பர்கள் செய்திருந்தனர்.

# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## தேர்தல் களப்பணியில்...

### தவெக உதவியுடன் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும்: மத்திய மந்திரி பரபரப்பு பேட்டி



இந்திய குடியரசு கட்சியின் தேசிய தலைவரும், மத்திய மந்திரியுமான ராம்தாஸ் அத்வாலே நிருபர்களிடம் கூறியதாவது:- இந்திய தேர்தல் ஆணையம் 5 மாநிலங்களில் தேர்தல் அறிவித்துள்ளது. புதுச்சேரி, அசாமில் தேசிய கூட்டணி ஆட்சியில் இருக்கிறது. தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சிக்கு வராது. அங்கு த.வெ.க. தலைவர் நடிகர் விஜய்யும் போட்டியிடுகிறார். தேர்த லுக்கு பிறகு தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு பெரும்பான்மை பலம் கிடைக்காவிட்டால் த.வெ.க. தலைவர் விஜய்யுடன் பேசி ஆதரவு கேட்டு தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும். மேற்குவங்கத்தில் மம்தாபானர்ஜியை வீழ்த்திவிட்டு பா.ஜனதா கட்சி ஆட்சி அமைக்கும். கேரளத்தில் இப்போது ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு ஆட்சி மீது மக்கள் நம்பிக்கை இழந் துவிட்டனர். அங்கும் பா.ஜனதா கட்சி ஆட்சி அமைக்கும். அதனால் தேர்தலுக்கு பிறகு 5 மாநிலங்களிலும் தேசிய ஜன நாயகக் கூட்டணி ஆட்சி அமைக்கும்.நாகாலாந்து, மணிப்பூரில் இந்திய குடியரசு கட்சியை அங்கீகரிக்கப்பட்ட மாநில கட்சியாக இந்திய தேர்தல் ஆணையம் அங்கீகாரம் அளித்துள்ளது.

தேசிய அங்கீகாரம் கிடைக்க கட் சியை வலிமைப்படுத்தி வருகிறோம். நாட்டின் வலிமையான பிரதமராக மோடி 3-வது முறையாக பதவியில் இருக்கிறார். நாட்டின் வளர்ச்சியை குறிக்கோளாக கொண்டு செயல்படுகிறார். இவ்வாறு அவர் கூறினார்.

### விஜய் கட்சியை விமர்சிக்க நான் தயாராக இல்லை: சுந்தர் சி



மதுரை மத்திய தொகுதியில் அதிமுக கூட்டணியில் புதிய நீதிக்கட்சி சார்பில் திரைப்பட இயக்குநரும், நடிகருமான சுந்தர்.சி இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுகிறார். இத்தொகுதியில் போட்டியிடும் அமைச்சர் பழனிவேல் தியாகராஜனை எதிர்த்து சுந்தர் சி களமிறங்கியுள்ளார். சுந்தர் சி போட்டியிடுவதால் இந்த தொகுதி அதிக கவனம் பெற்ற தொகுதிகளில் ஒன்றாக மாறியுள்ளது. இந்த நிலையில், சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுடன் பேசிய சுந்தர்.சி கூறியதாவது:

“விஜய் என் மீது மதிப்பும் அன்பும் கொண்டவர். என் மனைவியும் விஜய்யும் அக்கா தம்பி போன்று பழகி வருகிறார்கள். அதனால் விஜய்யை எந்த வகையிலும் விமர்சிக்கவோ அவரது கட்சி பற்றி விமர்சிக்கவோ நான் தயாராக இல்லை. ஆனால் மதுரை மத்திய தொகுதியைப் பொருத்தவரை போட்டி உதயசூரியனுக்கும் இரட்டை இலைக்கும்தான். மதுரை மக்கள் எனக்கு வெற்றியைத் தருவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. அதேபோல மாதம் 15 நாள்கள் இனி மதுரையில்தான் இருப்பேன் என்று உறுதியாகச் சொல்லிக்கொள்கிறேன். தேர்தல் முடிவை வைத்துதான் சினிமாவின் அடுத்தகட்ட நகர்வு குறித்து முடிவெடுப்பேன்” என்றார்.

### கடைசி நாளில் வேட்புமனு தாக்கல் செய்யும் பிரேமலதா..!

தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க.வுக்கு 10 சட்டமன்ற தொகு திகள் ஒதுக்கப்பட்டிருந்தன. இந்த 10 சட்டமன்ற தொகுதிகள் எவை எவை என்பது குறித்த பேச்சுவார்த்தை நடைபெற்று வந்த நிலையில், தி.மு.க. சார்பில் தே.மு. தி.க.வுக்கு விருத்தாசலம், தர்மபுரி, சேலம் (மேற்கு), விருதுநகர், ஓமலூர், மயிலம், பல்லாவரம், திருத்தணி, குடியாத்தம் (தனி), போளூர் ஆகிய 10 சட்டமன்ற தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. இதனைதொடர்ந்து சட்டமன்ற தேர்தலில் போட்டியிட இருக்கும் தே.மு.தி.க. வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டது. இதில் விருத்தாசலத்தில் பிரேமலதாவும், விருதுநகரில் விஜயபிரபாகரனும் போட்டியிடுகிறார்கள். தர்மபுரியில் அவைத்தலைவர் வி.இளங்கோவன், சேலம் (மேற்கு) கொள்கைப்பரப்பு செயலாளர் அழகாபுரம் ஆர்.மோகன்ராஜ், மயிலம் தொகுதியில் விழுப்புரம் மாவட்ட செயலாளர் எல்.வெங்கடேசன் ஆகியோர் வேட்பாளர்களாக போட்டியிடுகின்றனர். இந்த நிலையில், தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கடைசி நாளில் (அதாவது 6-ந்தேதி) வேட்புமனு தாக்கல் செய்ய உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதைபோல தேமுதிக சார்பில் போட்டியிடும் 10 வேட்பாளர்களும் அன்றைய நாளில் வேட்புமனு தாக்கல் செய்வார்கள் என அக்கட்சியின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## திருச்சி கிழக்கு தொகுதியில் தவெக தலைவர் விஜய் இன்று வேட்புமனு தாக்கல்



திருச்சி கிழக்கு தொகுதியில் தவெக தலைவர் விஜய் இன்று (ஏப்.2) வேட்புமனு தாக்கல் செய்கிறார். இதற்கான ஏற்பாடுகளை தவெக மூத்த தலைவர் செங்கோட்டையன் செய்து வருகிறார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் சென்னை பெரம்பூர் தொகுதியிலும் திருச்சி கிழக்கு தொகுதியிலும் தவெக தலைவர் விஜய் போட்டியிடுகிறார். ஏற்கெனவே பெரம்பூரில் விஜய் வேட்புமனு தாக்கல் செய்துள்ள நிலையில், திருச்சி கிழக்கு தொகுதியில் வேட்புமனு தாக்கல் செய்வதற்காக நாளை (ஏப்.2) திருச்சி வருகிறார்.

அவரது வருகையையொட்டி உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளவும், பிரச்சாரத்துக்கு அனுமதி கேட்டும் தவெக நிர்வாகி செங்கோட்டையன் நேற்று திருச்சி மாநகர காவல் துறை ஆணையர் காமினியை சந்தித்து மனு அளித்தார்.

தொடர்ந்து திருச்சியில் முகாமிட்டுள்ள செங்கோட்டையன், விஜய்யின் பயணத் திட்டம் குறித்து நிர்வாகிகளிடம் ஆலோசித்து வருகிறார்.


இதுகுறித்து தவெக மாநில நிர்வாகி ஒருவர் கூறியதாவது: நண்பகல் 12 மணியளவில் தனி விமானம் மூலம் திருச்சி விமான நிலையத்துக்குவருகை தரும் விஜய், 12.30 மணிக்கு திருச்சி பாலக்கரை கால்நடை மருத்துவமனை அருகே உள்ள மாநகராட்சி 2-வது மண்டல அலுவலகத்தில் மாநகராட்சி உதவி ஆணையரும், தேர்தல் நடத்தும் அலுவலருமான முத்து முருகேசபாண்டியிடம் தனது வேட்புமனுவை தாக்கல் செய்கிறார்.

அங்கிருந்து ஊர்வலமாக வந்து மரக்கடை எம்ஜிஆர் சிலை முன்பு தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார். தொடர்ந்து இ.பி. ரோடு, அரியமங்கலம் பால்பண்ணை, கே.கே.நகர் பேருந்து நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் செய்யவும், இப்பகுதியில் ஊர்வலமாகச் சென்று திருச்சி விமான நிலையத்துக்கு செல்லவும் காவல்துறையிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

இதேபோல் தேர்தல் ஆணையத்திடமும் ஆன்லைன் மூலம் முறைப்படி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து திருச்சி மாநகர காவல்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, “தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகள் படி தவெக தலைவர் விஜய் வேட்புமனு தாக்கல் செய்வதற்கு எவ்வித கட்டுப்பாடும் இல்லை. அவர் மரக்கடை எம்ஜிஆர் சிலை பகுதியில் மட்டும் தேர்தல் பிரச்சாரம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. வேறு எங்கும் பிரச்சாரம் செய்ய அனுமதி அளிக்கப்படவில்லை. அதேபோல அவர் ரோடுஷோ செல்வதற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது” என்றனர்.

## ஓரிரு நாளில் பாஜக வேட்பாளர் பட்டியல்: பியூஷ் கோயல் தகவல்



மத்திய அமைச்சரும், தமிழக பாஜக தேர்தல் பொறுப்பாளருமான, பியூஷ் கோயல், நேற்று மாலை டெல்லியில் இருந்து விமானத்தில் சென்னைக்கு வந்தார். விமான நிலையத்தில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் பலமான என்டிஏ கூட்டணி, தேர்தல் பிரச்சாரத்தை, முழு எழுச்சியுடன் தொடங்கியுள்ளது.

திமுக அரசை முடிவுக்கு கொண்டுவர தொடங்கி இருக்கிறோம்.திமுக காங்கிரஸ் கூட்டணி, உயர் மட்ட அளவில் பல்வேறு ஊழல் முறைகேடுகள் செய்து, மக்களுக்கு மோசமான சட்டம் ஒழுங்கு இல்லாத ஆட்சியை கொடுத்துக் கொண்டு இருக்கிறது. என்டிஏ கூட்டணி, இந்த தேர்தலில் முழு வெற்றியை அடையும். இந்த வலுவான தேசிய ஜனநாயகக் கூட்டணி, திமுகவை வீழ்த்தும்.

தமிழகத்தில் பாஜக போட்டியிட இருக்கும் தொகுதிகளின் வேட்பாளர்கள் யார்? என்பது குறித்து, ஆலோசனை நடந்து கொண்டு இருக்கிறது. அடுத்த ஓரிரு தினங்களில், இறுதி முடிவு எடுத்து, தமிழக பாஜக வேட்பாளர் பட்டியலை அதிகாரபூர்வமாக, டெல்லியில் பாஜக தலைமை வெளியிடும். திமுக கூட்டணியில் பிரச்சனை இன்னும் ஓயவில்லை. ஆனால் எங்களுடைய என்டிஏ கூட்டணி, ஒரு குடும்பம் போல் ஒற்றுமையாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## இனி வீடியோ மூலம் பிரச்சாரம்: விஜய் திடீர் முடிவு



கொளத்தூர் பரப்புரையில் ஏற்பட்ட அனுபவங்களைத் தொடர்ந்து, தவெக தலைவர் விஜய் தனது தேர்தல் பிரச்சார வியூகத்தை மாற்றியமைக்க முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து தவெக வட்டாரங்கள் கூறியதாவது: விஜய் பெரம்பூர் தொகுதியில் தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்தார். அதனைத் தொடர்ந்து பெரம்பூர், கொளத்தூர் மற்றும் வில்லிவாக்கம் தொகுதிகளில் அவர் பிரச்சாரம் செய்யத் திட்டமிட்டிருந்தார். ஆனால், கொளத்தூர் தொகுதியில் அவர் பிரச்சாரத்தைத் தொடங்கியபோதே கூட்டம் கட்டுக்கடங்காமல் திரண்டதால் அப்பகுதியே ஸ்தம்பித்தது.

கடும் போக்குவரத்து நெரிசலில் வாகனம் ஊர்ந்து சென்றதால், அவரால் பிரச்சாரத்தை தொடர முடியவில்லை. பாதியிலேயே பிரச்சாரத்தை ரத்து செய்துவிட்டு வீடு திரும்பினார். காவல்துறை தரப்பில் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படாததே இதற்குக் காரணம்.

இனி வரும் நாட்களிலும் இது போன்ற சிக்கல்கள் வரலாம் என்பதால் இனிமேல், ‘வீடியோ வடிவிலான’ பிரச்சாரத்தை முன்னெடுக்க விஜய் ஆலோசனை நடத்தி வருகிறார். ஒவ்வொரு தொகுதியின் வேட்பாளர் குறித்தும், அங்கு நிலவும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் குறித்தும் விஜய் பேசிப் பதிவு செய்யப்பட்ட வீடியோக்கள் ஏற்கெனவே தயார் நிலையில் உள்ளன.

இதை அந்தந்த தொகுதிகளில் நடைபெறும் பொதுக்கூட்டங்களில் பெரிய திரைகளில் ஒளிபரப்பத் திட்டமிடப்பட்டுள்ளது. முக்கியமான தொகுதிகளுக்கு மட்டுமே நேரில் செல்லத் திட்டமிடும் விஜய், மற்ற இடங்களுக்கு வீடியோ பிரச்சாரமே போதும் என நினைக்கிறார். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## அண்ணாமலைக்கு தொகுதி ஒதுக்குவதில் சிக்கல்



அதிமுக-பாஜக தொகுதி பங்கீடு முடிந்துள்ள நிலையில், வேட்பாளர் பட்டியல் வெளியாவதில் இழுபறி நீடிக்கிறது.

கோவையில் சிங்காநல்லூர், கவுண்டம்பாளையம், கோவை வடக்கு, கிணத்துக்கடவு ஆகிய தொகுதிகளைக் குறிவைத்து அண்ணாமலை தரப்பு வேலை செய்து வந்தது. இதற்கிடையில், கோவை தெற்கு எம்எல்ஏ-வாக இருக்கும் வானதி சீனிவாசன், இந்த முறை வடக்கு தொகுதியைக் கைப்பற்றும் முனைப்பில் காய்களை நகர்த்தினார்.

இந்தசூழலில்தான், அதிமுக கூட்டணியில் பாஜகவுக்கு 27 தொகுதிகளை பழனிசாமி ஒதுக்கினார். இதில் மயிலாப்பூர், கோவை வடக்கு ஆகிய தொகுதிகள் மட்டுமே இடம்பெற்றன. மற்றபடி, வெற்றி வாய்ப்புள்ளதாகக் கருதப்பட்ட பல முக்கியத் தொகுதிகள் ஒதுக்கப்படாதது பாஜகவினரை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. குறிப்பாக, அண்ணாமலை போட்டியிட விரும்பிய தொகுதிகள் பட்டியலில் இல்லை.

இந்நிலையில் தான் பியூஷ் கோயல் சென்னை வந்து நேற்று நடத்திய மையக்குழு கூட்டத்தில், அண்ணாமலையை கட்டாயம் பங்கேற்க வேண்டும் என அறிவுறுத்தினார். இதையடுத்து, புதுச்சேரியில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் அண்ணாமலை சென்னை வந்து பங்கேற்றார். கூட்டத்தில் பங்கேற்ற அண்ணாமலை, தமிழக பாஜக தலைவர்கள் அதிமுக தலைமையிடம் உரிய முறையில் பேசி தொகுதிகளை பெறவில்லை.

கோவை மற்றும் சென்னை மாவட்டத்தில் கூடுதல் தொகுதிகளை நாம் பெற்றிருக்க வேண்டுமென்று கூறினார். இதையடுத்து பழனிசாமியிடம் பேசி, சென்னை, கோவையில் சில தொகுதிகளை மாற்றுவதாக பியூஷ் கோயல், அவரை சமாதானம் செய்ததாக கூறப்படுகிறது.

அதேநேரம் தொகுதிகளை மாற்றுவதற்கு அதிமுக தரப்பில் உடன்படவில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால் அண்ணாமலைக்கு தொகுதி ஒதுக்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

## புதிய தமிழகம், ராமதாஸ் 2-வது வேட்பாளர் பட்டியல்

புதிய தமிழகம், ராமதாஸ் அணி சார்பில் 2-வது வேட்பாளர் பட்டியல் நேற்று வெளியானது. தமிழகத்தில் நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் புதிய தமிழகம் கட்சியின் சார்பில் போட்டியிடும், இரண்டாம் கட்ட வேட்பாளர் பட்டியலை அக்கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமி கோவையில் நேற்று வெளியிட்டார்.

அதன் படி, ராஜபாளையம்-மு.ரமாதேவி, சிவகாசி - க.காளீஸ்வரி, அருப்புக் கோட்டை - கி.ரகுபதி, திருச்சுழி - கு.குணசேகரன், தூத்துக்குடி - ரா.ரமேஷ், முதுகுளத்தூர் - ச.மலைச்செல்வம், திருவாடனை - சிவ. பாலுச்சாமி, திருவையாறு - வ.வேணு, தாராபுரம் - மா.சின்னசாமி, திண்டுக்கல் - மா.பிரதீப் பாண்டியன், ஆலங்குளம் - அ.உதயக்குமார், பெரம்பலூர் - த.வெங்கடேசன், அந்தியூர் - தா.பெரியசாமி, பல்லாவரம் - அ.தங்கராஜ், ஆலந்தூர் - ஆ.வேலுச்சாமி, பழநி - கு.வாய்க்கால்துரை, லால்குடி - இளஞ்செழியன், மணச்சநல்லூர் - மு. பாலு, ஸ்ரீரங்கம் - ஆ.நியூட்டன், திருச்சி மேற்கு - கோ.சண்முகம், துறையூர் - த.ராஜமாணிக்கம், கே.வி.குப்பம் - கு.கந்தன், மடத்துக்குளம் - க.செந்தில்குமார் உள்ளிட்ட 27 பேர் போட்டியிடுகின்றனர்.

### ராமதாஸ் அணி

இதேபோல் பாமக (ராமதாஸ் அணி) வெளியிட்ட 2-வது பட்டியலில் திருப்போரூர்- ஏகாம்பரம், உத்திரமேரூர் - ஸ்ரீதர், கும்மிடிப் பூண்டி- சங்கர், திருவள்ளூர்- வெங்கடேசன், செஞ்சி- கனல் பெருமாள், தருமபுரி- சரவணன், ஜெயங்கொண்டம்- காடுவெட்டி ரவி, செய்யாறு -சீனிவாசன், அந்தியூர்- கோபால், புவனகிரி- பாலமுருகன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

## தேர்தல் பரப்புரையில்..... உதயநிதி ஸ்டாலின்



தருமபுரியில் தேர்தல் பரப்புரையில் திமுக இளைஞரணி தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஈடுபட்டு வருகிறார். முதலாவதாக அரூர் (தனி) தொகுதி திமுக வேட்பாளரான அ.சண்முகத்தை ஆதரித்து தமிழக துணை முதல்வரும்,திமுக இளைஞரணி தலைவருமான உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பரப்புரை மேற்கொண்டார்.

## கோவில்பட்டி கைலா சநாதர் கோவிலில் பங்குனி மாத பிரதோஷ விழா



**நத்தம், ஏப்.2:**

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் கோவில்பட்டி கைலா சநாதர் கோவிலில் பங்குனி மாத பிரதோஷ விழா நடந்தது. இதையொட்டி, நந்தி சிலைக்கு பால், பழம், பன்னீர், விபூதி, சந்தனம், இளநீர், தீர்த்தம் உள்ளிட்ட 16 வகையான அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது.

தொடர்ந்து மேளதாளம் முழங்க சுவாமி புறப்பாடும் நடந்தது. பின்னர் மூலவர் செண்பகவல்லி, சமேத கைலாசநாதருக்கு சிறப்பு அபிஷேகமும், அலங்காரமும், தீபாராத னைகளும் நடந்தது. இதில், சுற்று வட்டாரங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். அவர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. இதைப்போலவே, நத்தம் அருகே குட்டூரில் உள்ள உண்ணாமலை அம்பாள் உடனுறை அண்ணாமலையார் கோவிலிலும் பிரதோஷ விழா நடந்தது. இதில் மூலவருக்கும், நந்திக்கும் சிறப்பு அலங்காரமும், அபிஷேகமும், தீபாராதனை களும் நடந்தது. இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

## தென்னங்குடி ஸ்ரீ முத்து மாரியம்மன் கோவில் பங்குனித் தேர்த்திருவிழா

**புதுக்கோட்டை, ஏப்.2:**

புதுக்கோட்டை அருகே தென்னங்குடி ஸ்ரீ முத்துமாரியம்மன்கோவில் பங்குனித் தேர்த்திருவிழா, அதிவிமரிசையாக நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்ட திருக்கோவில்களைச் சார்ந்த தென்னங்குடி கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு முத்து மாரியம்மன் கோவில் பங்குனி பெருந்திருவிழா, கடந்த வாரம் 22 ஆம் தேதி காப்பு கட்டி, கொடியேற்றத்துடன் துவங்கியது. அதனைத் தொடர்ந்து 10 நாட்கள் தினமும் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், தீபாரதனை காண்பித்தனர். சுற்றுவட்டார பகுதியில் இருந்து ஏராளமான பக்தர்கள் பால்குடம் காவடி எடுத்து வந்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.

சிறப்பு அலங்காரத்தில் அலங்கரிக்கப்பட்ட முத்து மாரியம்மன், ஊர் முக்கியஸ்தர்கள், கோவில் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் ஊர்வலமாக எடுத்து வந்து தேரில் வைத்தனர். சிறப்பு தீபாரதனை காண்பித்த பிறகு, வான வேடிக்கையுடன் தேர் புறப்பட்டது. சுற்றுவட்டார பகுதியில் இருந்து ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு தேரை வடை பிடித்து இழுத்தனர். கோவில் வளாகத்தில் இருந்து புறப்பட்ட தேரில், முத்துமாரியம்மன் சிறப்பு அலங்காரத்துடன் தேரில் வீதி உலா சென்று பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

# பண்ணாரி மாரியம்மன் கோவில் குண்டம் திருவிழா: லட்சக்கணக்கான பக்தர்கள் தீ மிதித்து நேர்த்தி கடன்





**மேட்டுப்பாளையம், ஏப்.2:**

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அருகே உள்ள பண்ணாரி மாரியம்மன் கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் பங்குனி மாத குண்டம் திருவிழா இந்த ஆண்டும் சிறப்பாக நடைபெற்றது.

இந்த ஆண்டுக்கான திருவிழா கடந்த மார்ச் 17ஆம் தேதி பூச்சாற்றுடன் தொடங்கியது. தொடர்ந்து மார்ச் 24ஆம் தேதி கம்பம் நிகழ்ச்சியுடன் பல்வேறு வைபவங்கள் நடைபெற்றன.

திருவிழாவின் முக்கிய நிகழ்வான பக்தர்கள் குண்டம் இறங்கும் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை (மார்ச் 31) நடைபெற்றது. அதிகாலை 3 மணி அளவில் பண்ணாரி அம்மன் சப்பரத்தில் அழைத்து வரப்பட்டார். காலை 4 மணிக்கு குண்டம் இறங்கும் நிகழ்ச்சி தொடங்கியது.

முதலில் பூசாரி பார்த்திபன் குண்டத்தில் இறங்கி வழிபாடு செய்தார். பின்னர் பூசாரிகள் செந்தில்குமார், ராஜேந்திரன், ராஜசேகர் உள்ளிட்டோர் குண்டத்தில் இறங்கினர். தொடர்ந்து கோவில் துணை ஆணையர் மற்றும் செயல் அலுவலர் நந்தகுமார், பரம்பரை அறங்காவலர் குழுத் தலைவர் புருஷோத்தமன், அறங்காவலர்கள், பவானிசாகர் தொகுதி எம்.எல்.ஏ. பண்ணாரி உள்ளிட்டோர் மற்றும் ஏராளமான பக்தர்கள் குண்டத்தில் இறங்கி நேர்த்திக்கடன் செலுத்தினர்.

தமிழகம், கர்நாடகம், ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் திரளாக பங்கேற்றனர்.

திருவிழா இந்து சமய அறநிலையத் துறை, காவல்துறை, வருவாய்த் துறை மற்றும் தீயணைப்பு துறை அதிகாரிகளின் மேற்பார்வையில் நடைபெற்றது.

# திருப்பதி கோதண்டராமர் கோவிலில் ராமர் பட்டாபிஷேக விழா



**திருப்பதி, ஏப்.2:**

திருப்பதி கோதண்டராமர் கோவிலில் நேற்று முன்தினம் இரவு ராமர் பட்டாபிஷேக விழா நடந்தது. அதையொட்டி மூலவர்களான சீதா, ராமர், லட்சுமணரை சுப்ரபாதத்தில் துயிலெழுப்பி, அபிஷேகம் செய்யப்பட்டது. காலை 8 மணியளவில் உற்சவ மூர்த்திகளை ஊஞ்சல் மண்டபத்துக்கு எழுந்தருள செய்தனர்.

நரசிம்ம தீர்த்தத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீரை கொண்டு உற்சவர்களுக்கு அபிஷேகம் செய்யப்பட்டது. காலை 9 மணியில் இருந்து 11 மணி வரை யாகசாலையில் அக்னி பிரதிஷ்டை மற்றும் சதுர்தச கலச ஸ்நாபன திருமஞ்சனம் உள்ளிட்ட வைதீக சடங்குகள் நடத்தப்பட்டன.

இரவு 7 மணியளவில் ராமர் பட்டாபிஷேகம் முறைப்படி சம்பிரதாயபூர்வமாக நடத்தப்பட்டது. இரவு 8.30 மணியில் இருந்து 9.30 மணி வரை உற்சவர்களான சீதா, ராமர், லட்சுமணர் தங்கத்திருச்சி வாகனத்திலும், ஆஞ்சநேயர் மற்றொரு திருச்சி வாகனத்திலும் எழுந்தருளி கோவிலின் நான்கு மாடவீதி களில் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். ராமர் பட்டாபிஷேக விழாவில் முக்கிய அதிகாரிகள், திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# கோவில்களில் திருக்கல்யாண உற்சவம் கோலாகலம்

**சென்னை, ஏப்.1:**

இறை வழிபாட்டிற்கு உகந்த இந்த நன்னாளில் கோவில்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. சிறப்பு பூஜைகள், சிறப்பு அபிஷேகம், சிறப்பு அலங்காரம், திருக்கல்யாண உற்சவங்கள், சுவாமி வீதியுலா நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. குறிப்பாக தெய்வத் திருமணங்கள் நடைபெற்ற நாள், பங்குனி உத்திர திருநாள் என்பதால் இந்த நாளில் கோவில்களில் திருக்கல்யாண நிகழ்வுகள் விமரிசையாக நடைபெறுகின்றன.

பங்குனி உத்திரத்தை முன்னிட்டு கோவில்களில் இன்று பக்தர்கள் குவிந்தவண்ணம் உள்ளனர். பங்குனி உத்திர நாள் குலதெய்வ வழிபாட்டிற்கு உகந்த நாள் என்பதால் பலர் குல தெய்வ கோவிலுக்கு சென்றவண்ணம் உள்ளனர். குல தெய்வம் தெரியாதவர்கள் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலிலுக்கு சென்று வழிபடுவது வழக்கம். எனவே, திருச்செந்தூர் முருகன் கோவிலில் வழக்கத்தைவிட பக்தர்கள் வருகை அதிகமாக உள்ளது.

### ஆறுமுகநேரி சிவன் கோவில்

பங்குனி உத்திரத்தை முன்னிட்டு ஆறுமுகநேரி ஸ்ரீ சோமசுந்தரி அம்பாள் சமேத சோமநாத சுவாமி கோவிலில் நேற்று மாலையில் யாக பூஜை , சிறப்பு அபிஷேக ஆராதனை நடந்தன. பின்னர் ஸ்ரீ சுப்பிரமணியர் வள்ளி அம்பாள் திருக்கல்யாண வைபவம் நடைபெற்றது. தொடர்ந்து சிறப்பு அலங்கார தீபாராதனை நடைபெற்றது. திருக்கல்யாணம் மற்றும் சிறப்பு பூஜைகளில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர். அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

### பாணாவரம் முருகன் கோவில்

ராணிப்பேட்டை மாவட்டம், காவேரிப்பாக்கம் ஒன்றியம், பாணாவரத்தில் வள்ளி, தெய்வானை சமேத சக்திவேல் முருகன் கோவில் அமைந்துள்ளது. இக்கோவிலில் பங்குனி உத்திர விழாவை முன்னிட்டு, நேற்று காலையில் திரளான பக்தர்கள் பால்குடம் எடுத்து ஊர்வலமாக வந்து சுவாமிக்கு அபிஷேகம் செய்தனர்.

இதையடுத்து சுவாமிக்கு சிறப்பு அபிஷேகமும், தீபாராதனையும் நடைபெற்றது. தொடர்ந்து சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். பின்னர் மாலையில், பங்குனி உத்திர விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சுப்ரமணியசுவாமி-வள்ளி, தெய்வானை திருக்கல்யாண வைபவம் நடைபெற்றது. அப்போது அங்கு திரண்டிருந்த பக்தர்கள் "வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா" என சரண கோஷங்களை எழுப்பி வழிபட்டனர்.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!

தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

## ஆரோக்கியம் தரும் சிவப்புப் பழங்கள்! (2)

**நேற்றைய தொடர்ச்சி...**

**ராஸ்பெர்ரி:** இந்த பழமும் இதய ஆரோக்கியத்திற்கு சிறந்தது. இயற்கையின் இனிப்புகள் என்று அழைக்கப்படும் இவை ரத்த அழுத்தத்தை கட்டுக்குள் வைக்கவும், கெட்ட கொழுப்பை குறைக்கவும் துணை புரியும். இதில் உள்ள அதிகப்படியான ஆன்டிஆக்ஸிடன்ட்கள், நார்ச்சத்து (FIBER) மற்றும் பொட்டாசியம் ஆகியவை இதய நோய்களைத் தடுக்க உதவுகின்றன. மேலும், இது தமனிகளில் பிளேக் (PLAQUE) உருவாவதைத் தடுத்து, இதயச் செயல்பாட்டை மேம்படுத்துகிறது.

**ஆப்பிள் :** ஒரு நாளைக்கு ஒரு ஆப்பிள் சாப்பிடுவது எல்.டி.எல். எனப்படும் கெட்ட கொழுப்பை 40 சதவீதம் வரை குறைக்கும் என்று அமெரிக்காவில் உள்ள ஓஹியோ மாநில பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி முடிவு கூறுகிறது. ஆப்பிள் சாப்பிடுவது இதய நோயால் இறக்கும் அபாயத்தை குறைப்பதோடு தொடர்புடையது என்று அமெரிக்காவின் லோவா மகளிர் சுகாதார ஆய்வகம் தெரிவிக்கிறது. 18 ஆண்டுகளாக, மாதவிடாய் நின்ற 34 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்களை கொண்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டிருக்கிறது. ஆப்பிள் பழத்தின் தோலில் அதிக ஆன்டி ஆக்சிடென்டுகள் உள்ளன.

**தர்பூசணி:** இதய ஆரோக்கியத்திற்குத் தேவையான லைகோபீன் மற்றும் சிட்ருலின் சத்து நிறைந்தது. இதில் உள்ள லைகோபீன், சிட்ருலின் (CITRULLINE) மற்றும் பொட்டாசியம் ஆகியவை இரத்த அழுத்தத்தைக் குறைக்கவும், இரத்த ஓட்டத்தை மேம்படுத்தவும், கொலஸ்ட்ராலைக் கட்டுப்படுத்தவும் உதவுகின்றன, இதனால் இதய நோய் அபாயம் குறைகிறது. இது குறைந்த கலோரி மற்றும் அதிக நீர்ச்சத்து கொண்டதால், ஒட்டுமொத்த இதய செயல்பாட்டிற்கும் சிறந்த பழமாகும். மிதமான அளவில் சாப்பிடுவது நல்லது.

**ஸ்ட்ராபெர்ரி :** ஸ்ட்ராபெர்ரி பழத்தை தினமும் சாப்பிடுவது இதயத்தை பலப்படுத்தும். அதில் காணப்படும் கரையக்கூடிய நார்ச்சத்து மற்றும் பெக்டின் நொதி போன்றவை கெட்ட கொழுப்பை குறைக்கும். மேலும் இதில் உள்ள அதிகப்படியான ஆன்டிஆக்ஸிடன்ட்டுகள், வைட்டமின் C, பொட்டாசியம் மற்றும் நார்ச்சத்து ரத்த அழுத்தத்தைக் குறைத்து, இதய பாதிப்பிலிருந்து காக்கிறது. தினசரி ஸ்ட்ராபெர்ரி சாப்பிடுவது கெட்ட கொழுப்பைக் (LDL) குறைத்து, இரத்த நாளங்களின் செயல்பாட்டை மேம்படுத்துகிறது. வாரத்திற்கு மூன்று முறைக்கு மேல் ஸ்ட்ராபெர்ரி சாப்பிடும் பெண்களுக்கு மாரடைப்பு அபாயம் 32% வரை குறைவு என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

# நாடு முழுவதும் எத்தனால் கலந்த இ20 பெட்ரோல் விற்பனை: உண்டாகும் நன்மை - தீமை என்ன?

கச்சா எண்ணெய் நுகர்வு மற்றும் இறக்குமதியை குறைப்பதை நோக்கமாகக் கொண்டு, மத்திய அரசு எத்தனால் கலந்த இ20 பெட்ரோல் விற்பனையை நாடு முழுவதும் கட்டாயமாக்கியுள்ளது. இந்த பெட்ரோலால், பிஎஸ்6 அல்லாத பழைய வாகனங்களுக்கு சிக்கல்கள் ஏற்படும் என்று கூறப்படுகிறது.






2026 ஏப்ரல் 1-ம் தேதி முதல், நாடு முழுவதும் உள்ள பெட்ரோல் நிலையங்களில், 20 சதவிகித எத்தனால் கலந்த இ20 பெட்ரோலை விற்பனை செய்ய வேண்டும் என மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த முடிவு, கச்சா எண்ணெய் இறக்குமதியை குறைத்தல், விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல் மற்றும் மாசுபாட்டை குறைத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டது.

இந்தியா தனது கச்சா எண்ணெய் தேவைகளில் சுமார் 85 சதவீதத்தை இறக்குமதி செய்கிறது. அதே சமயம், எத்தனாலை கலப்பது, அந்நியச் செலாவணியை சேமிப்பதுடன், மாசுபாடு மற்றும் கார்பன் வெளியேற்றத்தை குறைத்து, சுற்றுச்சூழலுக்கு நன்மை பயப்பதாகவும் கருதப்படுகிறது. மேலும், எத்தனால் உற்பத்தி விவசாயிகளுக்கும் பயனளிக்கிறது. இதனால் தான், மத்திய அரசு இத்தகைய முடிவை எடுத்துள்ளது.

### இ20 பெட்ரோல் என்றால் என்ன.?

இ20 பெட்ரோலில் 20 சதவீதம் எத்தனால் மற்றும் 80 சதவீதம் பெட்ரோல் உள்ளது. எத்தனால் என்பது கரும்பு, மக்காச்சோளம் மற்றும் பிற விவசாயப் பொருட்களில் இருந்து தயாரிக்கப்படும் ஒரு வகை ஆல்கஹால் ஆகும். இந்த கலவை, பெட்ரோலின் தரத்தை சுமார் 95 சதவீதம் வரை அதிகரித்து, அதன் விளைவாக வாகனத்தின் என்ஜின் சீராக இயங்குவதோடு, நாக் சத்தமும் குறைகிறது.

### பழைய வாகனங்களுக்கு என்ன பாதிப்பு?

மேலும், ஏப்ரல் 2023-க்குப் பிறகு தயாரிக்கப்படும் பிஎஸ்6 இரண்டாம் கட்ட வாகனங்கள் இ20 பெட்ரோல் எரிபொருளுக்காகவே வடிவமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனவே, இந்த புதிய பெட்ரோலை பயன்படுத்தும்போது, இந்த வாகனங்களுக்கு எந்த பிரச்னையும் ஏற்படாது. இந்நிலையில், 2023-க்கு முன்பு தயாரிக்கப்பட்ட வாகனங்களில், இ20 பெட்ரோலின் தாக்கம் சற்றே வித்தியாசமாக இருக்கலாம். பழைய வாகனங்களின் மைலேஜ் 3 முதல் 7 சதவீதம் வரை குறையலாம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.







இந்த எத்தனால், பழைய ரப்பர் பாகங்களையும், எரிபொருள் குழாய்களையும் சேதப்படுத்தலாம் என்று கூறப்படுகிறது. எத்தனால், காற்றில் ஈரப்பதத்தை கசியச் செய்து, பெட்ரோல் டேங்க்கில் நீர் உருவாகும் அபாயத்தை அதிகரிக்கிறது.

இது என்ஜினை ஸ்டார்ட் செய்வதில் சிரமங்களை ஏற்படுத்துவதோடு, அரிப்பு ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கும். இருப்பினும், வாகனத் துறை அமைப்புகளின்படி, இ20 பயன்பாட்டினால் பெரிய என்ஜின் கோளாறுகள் எதுவும் பதிக்கப்படாது.

# காதல் அழிவதில்லை!



காவியத்தில்.. ஓவியத்தில்.. கவிதைகளில் கதையில் காதல் என்றால் இரசிக்கின்ற சமுதாயம்.. வீட்டினில் காதல் நுழைந்தது என்றால் வெறுப்பது ஏனோ? அவன் ஒரு மதம்.. அவள் வேறு மதம்..! அவர்களின் காதலை அந்த கிராம மக்களும் இரு வீட்டாரும்.. ஏற்றுக் கொண்டார்களா? அறிய ஆவலாக இருக்கிறீர்களா..? இதோ அந்த காதல் கதை!.

செல்வம் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன்.. ஸ்டெல்லா ஒரு பணக்கார குடும்பத்தில் பிறந்தவள்..!

என் வாழ்வின் வசந்தம் நீதான் என்று அவனோ மயங்கினான்.. என் உயிரின் ஜீவன் நீதான் என்று அவளும் மயங்கினாள்..! இந்த காதல் மயக்கம் இங்கே யாருக்கு தெரியும்.?

அவன் ஒரு தனியார் தொழிற்சாலையில் உதவியாளராக வேலை செய்தான். எப்போதும் இயந்திரங்களோடு பழகியவன்.. ஒருநாள் அன்பு இதயத்தோடு பழகத் துடித்தான்.!

ஆனால் அவளோ அவனது முதலாளியின் மகள்.. செல்வச் சீமாட்டி. இந்த செல்வனோ பரம ஏழை..

அவளும் நோக்கினாள்.. அவனும் நோக்கினான்.. காதல் தீ பற்றிக் கொண்டது. சாதி மதம் அந்தஸ்த்து இடையிலே புகுந்தது. காதலைச் சிதைத்தது.. உலகுக்குத் தெரியாமல் தொடர்ந்த காதல் ஒருநாள் உலகத்திற்கேத் தெரிந்தது.

இருவரின் வீட்டிலும் பூகம்பம்.. காதல் ஒரு பூ.. ஆனால் அது பூத்த இடம்.. பாலை நிலம்.! நீரூற்ற ஆளில்லை.. நெருப்பூற்ற எத்தனை பேர்?

அவளை வீட்டில் சிறை வைத்தார்.. அவனை ஊர் நடுவே கட்டி வைத்தார்..! அது ஒரு கிராமம்.. கட்டுப்பாடுகள் அதிகம். சகிப்புத்தன்மை குறைவு..!

அந்த இரவு வேளையில்.. அவன் தன் கட்டுகளை விட்டு வந்தான்.. இரவில் அவள் வீட்டருகே வந்தான்! அவளோ அவன் மீது கொண்ட காதலால்.. வீட்டை விட்டு வந்தாள்.!

எதிர்த்த வீடு.. சமூகம் ஆகியவற்றை எதிர்த்து கிராமத்து எல்லைகளைத் தாண்டி அவர்கள் ஓடிக் கொண்டிருக்கின்றனர்..

எதிர் வந்த பேருந்தில் ஏறி.. நகரத்தில் சரணடைந்து.. காதல் வாழ்வில்.. ஒரு கோவிலில் மாலை மாற்றிக் கொண்டனர்.. பதிவுத் திருமணம் செய்து கொண்டனர்.!

காலம் கடந்தது.. காதல் வென்றது.. இதோ அவன் நகரத்தில் ஒரு தொழிலகத்தில் வேலைக்குப் போகிறான்.. அவள் அந்த வாடகை வீட்டில் அவனுடன் வாழ்க்கையைத் தொடர்கின்றாள்.. எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் தேடிப் பார்த்தனர்.. மெல்ல மெல்ல மறந்து போயினர்.. ஆனால் உண்மைக் காதல் வாழ்ந்து கொண்டிருக்கிறது.! நீங்களும் காதலை வாழ்த்துவீர்களா..?

- வே.கல்யாண்குமார்.

# "மணமகன் மாடல்"



"ஆதவா ஆண்கள் ஆடையகம்"

“குமார் மாப்பிள்ளை வேஷ்டி சட்டையோட வாப்பா" சூப்பர்வைஸர் ஆணையிட,

“அடுத்த ஐந்தாவது நிமிடம் பட்டு வேஷ்டி சட்டையோடு வந்து நின்று காட்டினான். அவன் வேலையே அதுதான். நல்ல நிறம், உயரம், கட்டுடல் கொண்டவனாய் இருப்பதால் மாடல் பொம்மைகளுக்கு ஆடை அணிவித்துக் காட்டுவதற்கு பதில் குமாருக்கே அணிவித்துக் காட்டுவார் மேனேஜர்.

வேஷ்டி, புது மாடல் சட்டை, கோட்டு சூட், மணமகன் அலங்காரம், ஷெர்வாணி, எல்லாம் அவன் மேனியில் உயிர் பெறும்.

அவனது அணிவித்துக் காட்டும் போது வாடிக்கையாளர்கள், "வாவ்... ரொம்ப அழகா இருக்கு!” .... "மாப்பிள்ளை கெட் அப்... செம்ம க்யூட்!”என்று மனமகிழ்ந்து பாராட்டி பர்ச்சேஸ் செய்வர்.

ஒருநாள்... ஒரு குடும்பம் வந்தது மணமகனுக்கான டிரஸ் வாங்க. குமார் அவர்களுக்கு பல வகை உடைகளை அணிந்து காட்டினான்.

அவர்கள் இறுதியாக ஒன்றை செலக்ட் செய்தனர்.

“எவ்வளவு?”என்று கேட்டார் அப்பா. குமார் விலையைச் சொன்னான்.

"சரி... வாங்கிக்கலாம்.”

பில்லிங் முடிந்தது. போகும் முன் அந்த பெண் ஒரு நிமிடம் குமாரை பார்த்தாள்.

“நீங்கதான் இங்க மாடல் பொம்மையா?”கேட்டு விட்டுச் சென்றாள்.

மாலை வாக்கில் மொபைல் வைப்ரேட் ஆக எடுத்துப் பார்த்தான். அம்மா அழைத்திருந்தாள்.

“குமார்... பொண்ணு வீட்டிலிருந்து போன் வந்தது...”

"என்ன சொன்னாங்க?”

சில விநாடி அமைதிக்குப் பின், "அவங்க பொண்ணு மேலே படிக்கப் போறாளாம்.. அதனால இப்போதைக்குக் கல்யாணம் இல்லையாம்!"

குமார் எழுந்து ஆளுயரக் கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்தான். "நான் அணிவித்துக் காட்டும் ஆடையால் இங்கே பலர் வாழ்க்கையில் கல்யாணம் ஏற்பாடாகிறது... ஆனால்... எனக்கு ஒரு கல்யாணம் அமைய மாட்டேங்குது...!... இப்படி மாடல் மாப்பிள்ளையாவே என் வாழ்க்கை முடிஞ்சிடுமா?"

எச்சில் விழுங்கித் தன் சோகத்தை ஜீரணித்துக் கொண்டான்




-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# Boomer to Gen Z

பாகம் 24



வி.பிரபாவதி
மடிப்பாக்கம்.



மாலு வாசலில் நாற்காலியைப் போட்டுக் கொண்டு யூடியூபில் பாகவதம் கேட்டுக் கொண்டிருந்தாள். ஸ்ரீரங்கம் கீதா எளிய தமிழில் எழுதினத பிரபாங்கறவா வாசிக்கறா. ஒரு பகுதி விடாம கேட்டுடுவா. கேட்டுக்கொண்டே குட்டிக் கிருஷ்ணர்களின் படங்களை ரசித்துக் கொண்டிருந்தாள்.

பேத்தி போன் செய்தாள். "அம்மம்மா எப்படி இருக்கேள்? இங்க குளிரு ஜாஸ்தியா இருக்கு. நீயும் தாத்தாவும் எப்ப வருவேள்?" ஸ்பூர்த்தி கேட்டது.

"நான் நன்னாருக்கேன். நீ எப்டி இருக்க?கோமுப் பாட்டிக்கு ரொம்ப முடில. வரது தாத்தா உம்மாச்சிக்கிட்ட போனதிலேந்தே பாட்டிக்கு முடீலம்மா. கொஞ்சம் பாத்துண்டு நாங்க வறோம். நீ தம்பிய நன்னா பாத்துக்கறியா? சமத்தா இருக்கியா?" எட்டு வயது பேத்தியிடம் பேசிக் கொண்டிருந்தாள் மாலு. ஆம் ஸ்ரவந்திக்கு இரண்டு குழந்தைகள். மாலுவும், வாசுவும் ஸ்ரவந்தியின் டெலிவரிக்கு போய் வந்தார்கள். நன்கு செட்டிலாகிவிட்டாள் மகள் என்பதில் சந்தோஷம் தான்.

நல்லது பொல்லாததிற்கு உடன் வந்து போக முடியாது. அப்போதெல்லாம் கஷ்டமாகத்தான் இருக்கும்.

வேலை நிமித்தம் வெளிநாடு சென்ற அபிஷேக் ஒரு வெள்ளைக்காரியை அழைத்து வந்து திருமணம் செய்து வைக்கச் சொல்லிக் கேட்டான்.

எத்தனை வாதங்கள், ஏச்சுக்கள், பேச்சுக்கள், அப்பப்பா, கடைசியில் மடிசாரைக் கட்டி கோவிலில் கல்யாணம் பண்ணி வைத்தார்கள்.

மாலு தனிக்குடித்தனம் வைத்து விட்டாள். சென்னையில்தான் இருக்கிறார்கள்.

நல்ல பொண்ணுதான். சொன்னதக் கேட்டுண்டு சொந்தமா ஒரு கம்பெனிய நிர்வாகம் செய்து கொண்டு இருக்கிறாள். அபி எம்என்சி கம்பெனியில் பெரிய பதவியில் இருக்கிறான்.

மருமகள் சித்ரா (இவர்கள் வைத்த பெயர்) வீட்டிற்கு வரும்போதெல்லாம் தங்கிலிஷில் பேசுவது எல்லோருக்கும் பிடிக்கும். சமையல் எல்லாம் ஒவ்வொன்றாய் கற்றுக்கொள்கிறாள். தங்க விக்ரகம் மாதிரி ஒரு புள்ளைக்கொழந்தை. பகலில் மாலுவிடம்தான் இருக்கும். கட்டிச் சமத்து.

கல்யாணியின் மரணத்திற்குப் பிறகு வாசு மிகவும் தனிமையாக உணர்ந்தான். மாலுதான் தேற்றினாள்.

தொழில்நுட்பம் வளர வளர எல்லாம் அதிசயமாக இருந்தது. கைபேசி, கணினியின் செயல்பாடுகள் ஆச்சர்யமாக இருந்தது.

ஹரியின் குழந்தைகள், சுந்தரியின் குழந்தைகள் எல்லோர் திருமணமும் ஒவ்வொன்றாய் நடந்து வருகிறது. எல்லாம் கான்ட்ராக்ட்தான்.

லட்டு மாதிரி லம்ப்பா பணத்தைக் கொடுத்துடனும்.

கல்யாணம் தானா நடக்கும். பெரிய மெனக்கிடல் இல்லை. ஹரியும் மாலுவும் பேசிக் கொள்வார்கள். தங்கள் வயதை ஒத்தவர்கள் தாத்தா பாட்டி வாழ்க்கை முறை, அம்மா அப்பா வாழ்ந்த விதம், தங்களது வாழ்வியல், தற்போதைய அவசர உலகம் எல்லாவற்றையும் பார்த்திருப்பதாக சொல்லிக்கொள்வார்கள். கொஞ்சம் பெருமையாகக் கூட இருக்கும்.

பொதுவாக கான்வென்ட்டில் படிக்கும் குழந்தைகள் ஆறு மணிக்கு மேல் எழுந்து ஏழரைக்குள் காலைக் கடன்கள், குளியல், சீருடை, சிற்றுண்டி என்ற பெயரில் ஒரு ரொட்டித் துண்டு, அரை இட்லி அழுகையோடு உண்டு ஏழரைக்கெல்லாம் பள்ளி வாகனத்தில் ஏறிச் செல்கிறார்கள். இரண்டு வயதில் ஒரு பள்ளிக்கூடம், மூன்று வயதில் கேஜியில் சேர்ந்தால் பிஜி முடிக்கும் வரை போராட்டம்தான் குழந்தைகளுக்கு.

பாடத்திட்டங்கள் மிகவும் அதிகமாக இருப்பதாகத் தோன்றும் மாலுவிற்கு. பாவம் பிஞ்சுக் குழந்தைகள்.

ஏதேதோ நினைவுகளில் மூழ்கியிருந்தவள் மெல்ல எழுந்து இரவு டின்னர் செய்ய நினைத்தாள். அம்மாவை நினைத்துக் கொண்டாள். கடின உழைப்பாளி. நொடிப்பொழுது நிற்காமல் வேலை செய்வாள். சிறந்த நிர்வாகி. கூட்டு குடும்பமாய் இருந்தவள் தனிமையில் இருக்கிறாள். ஸ்ரீஹரியின் மச்சினன் பக்கத்து கிராமத்தில் தாசில்தாராய் இருக்கிறான். குடும்பத்தோடு இவர்கள் வீட்டிற்கு எதிர் வீட்டில் இருப்பதால் அவன் பார்த்துக் கொள்கிறான். மலர்ந்த நினைவுகள் சுகந்தமானவை. காலம் வேகமாகப் போகிறது.

ரவையை வறுத்துக் கொண்டிருக்கும் போதே போன் மணி அடித்தது. ஸ்டவ்வை ஸிம்மில் வைத்துவிட்டு போனை எடுத்தாள்.

தொடரும்...

# அதிசய ஆலயங்கள்...

திருவண்ணாமலை சுவாமி எப்போதுமே ராஜகோபுரம் வழியாக வராமல் பக்கத்து வாசல் வழியாகத்தான் வெளியே வருவார்.

மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் மொத்தம் 14 கோபுரங்கள் உள்ளன. வேறு எந்த கோவிலிலும் இவ்வளவு அதிகமான கோபுரங்கள் இல்லை.

கும்பகோணம் அருகே உள்ள திருநாகேஸ்வரம் ஒப்பிலியப்பன் கோவிலில் தயாராகும் எந்த நைவேத்தியப் பண்டங்களுக்கும் உப்பு சேர்ப்பதில்லை.

ராமேஸ்வரம் ராமநாத சுவாமி கோவிலில் பெருமாள் கோவில்களில் கொடுப்பதுபோல் தீர்த்தம் கொடுக்கிறார்கள்.வேறு எந்த சிவன் கோவிலிலும் இது போன்று தீர்த்தம் கொடுப்பது கிடையாது.

மூலவரே வீதிவலம் வருவது,சிதம்பரம் நடராஜர் மட்டுமே.

மதுரை அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள பொற்றாமரைக் குளத்தில் மீன்கள் வளராது.

கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை அருகிலுள்ள கேரளபுரத்தில் சிவபெருமானுக்கு கோவில் உள்ளது. இங்கு அரச மரத்தடியில் நிறம் மாறும் அதிசய விநாயகர் இருக்கிறார். ஆவணி மாதத்திலிருந்து ஆறு மாதங்கள் வெள்ளை நிறமாகவும்,மாசி மாதத்திலிருந்து ஆறு மாதங்கள் கறுப்பாகவும் மாறி விடுகிறார்.சந்திர காந்தக் கல்லால் உருவாக்கப்பட்ட இந்தச் சிலைக்கு இப்படி ஒரு சக்தி இருக்கிறது.

சிதம்பரம் ஆலயத்தில் ஒரே இடத்தில் நின்றபடி,ஸ்ரீகோவிந்தராஜப் பெருமாளையும்,ஸ்ரீ நடராஜரையும் தரிசிக்கலாம்.

சைவர்களுக்குரிய திருவாதிரையும்,வைணவர்களுக்குரிய வைகுண்ட ஏகாதசியும் ஒரே மாதத்தில் ஒரே திருக்கோவிலில் நடைபெறுவது சிதம்பரத்தில்.

எல்லாத் திருத்தலங்களிலும் பெருமாளின் இடது கையில் தான் சங்கு காணப்பெறும்,திருக்கோவிலூரில் மட்டும் வலது கையில் சங்கு வைத்துள்ளார்.

இமயமலைச் சாரலில் இருக்கும் திருத்தலங்களில் ஒன்று பத்ரிநாத். மே மாதம் முதல் வாரம் நடைதிறப்பார்கள்.நவம்பர் மாதம் முதல் வாரத்தில் மூடுவார்கள். நவம்பரில் கோவிலை மூடும் போது ஒரு தீபம் ஏற்றுவார்கள்.அந்த தீபம் மீண்டும் கோவில் திறக்கப்படும்வரை அதாவது,ஆறு மாதம் எரிந்து கொண்டே இருக்கும்.

காசியில் பல்லிகள் இருந்தாலும் ஒலிப்பதில்லை.காசி நகரைச் சுற்றி 45 கல் எல்லை வரை கருடன் பறப்பதில்லை.

குளித்தலை, மணப்பாறை வழியில் இருப்பது ஐவர் மலை என்ற ரத்தினகிரி மலை உள்ளது.இம்மலை மேல் காகங்கள் பறப்பதில்லை.

நவக்கிரகப் பிரதிஷ்டை கோவிலில் வடகிழக்குப் பகுதியில் தான் அமைய வேண்டும் என்று சிற்ப சாஸ்திரம் கூறுகிறது.

ஆழ்வார்குறிச்சியில் நடராஜர் சிலை ஒரே கல்லினால் ஆனது.தட்டினால் வெண்கல ஓசை வரும்.

சமயபுரம் ஸ்ரீமாரியம்மன் உட்கார்ந்த கோலத்தில் மிகப் பெரிய திருமேனி. இவ்வளவு பெரிய ரூபமுள்ள அம்பிகை வேறு எந்த கர்பகிரகத்திலும் இல்லை. இத்திருமேனி சில மூலிகைகளால் ஆக்கப்பட்டது.

தேனி மாவட்டம் கம்பம் அருகில் உள்ள சுருளிமலையில்,குகையில் விபூதி அள்ள அள்ள வந்து கொண்டே இருக்கும்.இந்தக் குகைக்குப் பெயர் திருநீர்குகை.திருநீறு தானாகவே விளையும்.மற்ற திருத்தலங்கள் ,கதிர்காமம்,மருதமலை,திருநீற்று மலை,கங்கை கரையில் உள்ள திருவருணை.



ரத்னகிரி மலையில் உள்ள முருகனுக்கு அபிஷேகம் செய்யும் பால் சிறிது நேரத்தில் தயிராக மாறும் அதிசயம் நடக்கிறது.

சென்னிமலை முருகனுக்கு அபிஷேகம் செய்யும் தயிர் புளிப்பதில்லை.

தேனி மாவட்டம் தெப்பம்பட்டியில் உள்ள வேலப்பர் கோவிலில் உள்ள மூலவர் சுயம்பு மூர்த்தி.இந்தக் கோவில் அருகில் உள்ள மாமரத்தின் அடியில் இருந்து ஊற்று நீர் பொங்கி வந்து கொண்டேயிருக்கிறது.

அம்மன் சந்நிதி இல்லாத கோவில் காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில்.

கிருஷ்ணகிரி மாவட்டம்,தேன்கனிக்கோட்டை அருகே உள்ளது கோட்டையூர். இங்குள்ள நூற்று ஒன்று சாமி மலை மீது உள்ள குகையில் ஒரு அடி உயரம் கொண்ட கல்லால் ஆன அகல் விளக்கு இருக்கிறது.இதில் இளநீர் விட்டு தீபமேற்றினால் அது பிரகாசமாக எரியும் அதிசயத்தைக் காணலாம்.

ஜெயங்கொண்டத்தில் உள்ள கங்கை கொண்ட சோழபுரம் கோவிலில் உள்ள கிணற்றிற்கு அருகில் ஒரு சிங்கத்தின் சிற்பம் இருக்கும். சிங்கத்தின் வாய் பகுதியில் ஒரு கதவு தென்படும்.அதன் வழியாக கீழே இறங்கினால் கிணற்றில் குளிக்கலாம். ஆனால் மேலேயிருந்து பார்த்தால் நாம் குளிப்பது தெரியாது.

திருநல்லூர் கல்யாணசுந்தரேஸ்வரர் (பஞ்சவர்ணேஸ்வரர்) திருக்கோவிலில்,6 நாழிகைக்கு ஒரு முறை சிவலிங்கம் வர்ணம் மாறுகிறது.

திருக்கழுக்குன்றத்தின் தெப்பக்குளத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை சங்கு தோன்றுகிறது. சிவனுக்கு படைக்கப்பட்ட பிரசாதத்தை கழுகு உண்ணும் அதிசயத்தையும் இங்கே பார்க்கலாம்.

திருச்செந்தூரில் சூரனை வதம் செய்ததும்,தாமரை மலரைக் கொண்டு சிவபூஜை செய்தார்,முருகப்பெருமான். அதை உணர்த்தும் வகையில் மூலவர் சிலையின் வலது கையில் தாமரை மலர் உள்ளது.




-கோ.சுரேஷ்குமார்
கோவில்பட்டி

# தினம் ஒரு தலைவர்கள்

# ராஷ் பிஹாரி லால் மண்டல் வரலாறு

மிதிலாவின் யாதவ மன்னரும் சிங்கமுமான மறைந்த ராஷ் பிஹாரி லால் மண்டல் - 1908 ஏப்ரல் 27 ஆம் தேதி கல்கத்தாவிலிருந்து வெளியிடப்பட்ட இந்தியாவின் புகழ்பெற்ற நாளிதழான அமிர்த பஜார் பத்திரிகாவின் தலையங்கம், மதேபுராவின் முர்ஹோ எஸ்டேட்டின் ஜமீன்தாரான ராஷ் பிஹாரி லால் மண்டல், பாகல்பூரின் திமிர்பிடித்த மாவட்ட நீதிபதி திரு. எஃப்.எஃப். லியால் மீது தலையிட்டு நடவடிக்கை எடுத்ததற்காக அவரைப் பாராட்டியது.
மேலும், லயாலின் பாரபட்சமான அணுகுமுறையின் அடிப்படையில் தனது வழக்குகளை பாகல்பூரிலிருந்து தர்பங்காவிற்கு மாற்றக் கோரி கல்கத்தா உயர் நீதிமன்றத்தில் மண்டல் தாக்கல் செய்த மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த உத்தரவின் பேரில் கல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு எதிராக அவதூறான கருத்துக்களைத் தெரிவித்து லியால் மீண்டும் பிரச்சினையை கிளப்பினார், மேலும் அதற்காக மீண்டும் அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது. அதற்கு முன்னர், 1908 பிப்ரவரி 22 ஆம் தேதி அமிர்த பஜார் பத்திரிகா இதழில் இந்தப் பிரச்சினை குறித்து செய்தி வெளியானது. அதன்படி, ராஷ்பிஹாரி லால் மண்டலின் வழக்கறிஞர் திரு. ஜாக்சன், நீதிபதி கீட் முன் வாதிட்டார். 1902 ஆம் ஆண்டு முதல், மண்டல், அப்போதைய மாவட்ட நீதிபதி திரு. ஷிர்ரெஸின் உத்தரவின் பேரில் மாதேபுராவின் மையத்தில் (இப்போது ராஷ்பிஹாரி வித்யாலயா உள்ளது) ஒரு குறிப்பிட்ட நிலத்தை விட்டுக்கொடுக்க மறுத்ததால், நிர்வாகம் மற்றும் காவல்துறையின் கோபத்திற்கு ஆளானார்.
அப்போதிருந்து, திரு. மண்டல் மீது தொடர்ச்சியான குற்றவியல் வழக்குகள் தொடரப்பட்டன, மேலும் அவர் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஒரு டஜன் முறைக்கு மேல் உயர் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது. கல்கத்தா உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் கைது செய்யப்படுவதற்கு முன்பு ஜாமீன் வழங்கப்பட்ட முதல் நபர் (இப்போதெல்லாம் முன்ஜாமீன் போன்ற பொதுவானது) மறைந்த ராஷ்பிஹாரி லால் மண்டல் என்பது வெறும் தற்செயல் நிகழ்வு அல்ல. பாகல்பூர் மாவட்டத்தின் வர்த்தமானி, ராஷ்பிஹாரி லால் மண்டலின் அசாதாரண வழக்கையும் குறிப்பிட்டுள்ளது. மறைந்த ராஷ்பிஹாரி லால் மண்டல் பல சிறப்புகளைக் கொண்டிருந்தார். 1866 ஆம் ஆண்டு முர்ஹோவின் ஜமீன்தாரான ரகுபர் தயாள் மண்டலுக்குப் பிறந்த இவர், ராணிப்பட்டியில் கணிசமான சொத்துக்களைப் பெற்றார். ராஷ்பிஹாரி லாலின் பெற்றோர் அவர் மிகவும் இளமையாக இருந்தபோதே இறந்துவிட்டனர், மேலும் அவர் இளம் பருவத்திலிருந்தே தனது தோட்டத்தை கவனித்துக் கொள்ள வேண்டியிருந்தது. அவர் பதினொன்றாம் வகுப்பு வரை கல்வி பயின்றார், மேலும் சமஸ்கிருதம், இந்தி, மைதிலி, ஆங்கிலம், உருது, பாரசீகம் மற்றும் பிரெஞ்சு உள்ளிட்ட பல மொழிகளை அறிந்திருந்தார். பல்வேறு மொழிகளில் தினசரி செய்தித்தாள்கள் முர்ஹோவில் அவரது படுக்கைக்கு அருகில் இருந்தன. 1908 வாக்கில் ராஷ்பிஹாரி லால் மண்டல் தேசிய இயக்கத்தின் முன்னணிக்கு வந்தார், சமூக நீதி இயக்கத்தில் தனது பங்களிப்பைத் தொடங்கினார் மற்றும் பிரிட்டிஷ்



ஆட்சியாளர்களுக்கு எதிராக தனது சட்டப் போராட்டத்தைத் தொடர்ந்தார். இருப்பினும், மறைந்த ராஷ்பிஹாரி லால் மண்டல் டெல்லியில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டு விழாவில் கலந்து கொண்டு, யாதவர்களின் உரிமைகளைக் கோருவதற்காக மொன்டேகு-செல்ம்ஸ்ஃபோர்டு குழுவிற்கு யாதவத் தலைவர்களின் குழுவை வழிநடத்தி வரலாறு படைத்தார், மேலும் இராணுவத்தில் அஹிர் படைப்பிரிவை நிறுவினார். இங்கு அவர் வைஸ்ராய்க்கு பாரம்பரிய 'சலாமி' வழங்குவதற்குப் பதிலாக லார்ட் செல்ம்ஸ்ஃபோர்டுடன் கைகுலுக்கினார். பீகாரில் இருந்து மாகாண காங்கிரஸ் குழு மற்றும் அகில இந்திய காங்கிரஸ் குழுவில் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட யாதவ சமூகத்தின் முதல் தலைவர், பின்தங்கிய வகுப்புகள் அல்ல, ராஷ்பிஹாரி லால் மண்டல் ஆவார். அவர் கல்கத்தாவில் சுரேந்திர நாத் பானர்ஜியா, பிபின் சந்திர பால், சச்சிதானந்த் சின்ஹா மற்றும் பிற காங்கிரஸ் தலைவர்களுடன் தொடர்பு கொண்டார், மேலும் 1918 இல் அவர் இறக்கும் வரை பீகார் காங்கிரஸ் தலைமையில் முன்னணியில் இருந்தார். டாக்டர் ராஜேந்திர பிரசாத் 1952 ஆம் ஆண்டு விதான் சபாவிற்கு காங்கிரஸ் டிக்கெட் பெற சென்றபோது, மறைந்த ராஷ்பிஹாரி லால் மண்டலின் இளைய மகன் மறைந்த பி.பி. மம்தாலுடன், நாங்கள் மாணவர்களாக இருந்தபோது ராஷ்பிஹாரி பாபு கல்கத்தாவில் எங்களுக்கு உத்வேகமாகவும் வழிகாட்டியாகவும் இருந்தார் என்று நம்பிக்கை தெரிவித்தார். ராஷ்பிஹாரி லால் மண்டல் 1911 டிசம்பரில் முர்ஹோ, மாதேபுராவில் முதல் கோபேஜாதி மகாசபையை (பின்னர் யாதவ் மகாசபை என்று பெயரிடப்பட்டது) ஏற்பாடு செய்தார்.
இந்த முயற்சியில் அவருடன் இணைந்த மற்ற யாதவ் தலைவர்களில் கேசவ் லால், தேவ்குமார் பிரசாத், சாந்த் தாஸ் (மதவியாளர்), சீதா ராம், மேவ லாவ் லால் நாராயண் ரவுத் (கோரக்பூர்), ஷிவ் நந்தன் பிரசாத் (மனுதாரர்), ஜமுனா பிரசாத் (சாப்ரா), ஃபெகு ராம் (ஜான்பூர்), நந்த்லால் ராய் (தசரா, தர்பங்கா), ராம் தானி கோபே, ராம் தியான் பிரசாத் (முசாபர்பூர்), சியாம்பர்தாஸ் (ஹசாரிபாக்), ரகுநந்தன் மன், ஷிவ்ல் பிரசாத் (சாலிகிராம்), ரகுநந்தன் லான் பிரசாத் பிரசாத் மண்டல் (மாதேபுரா). யாதவர்களிடையே கல்வியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள், பள்ளிகள், கல்லூரிகள், தங்கும் விடுதிகள் மற்றும் உதவித்தொகை வழங்குதல், குழந்தை திருமணத்தை நிறுத்துதல், வரதட்சணை முறையை முடிவுக்குக் கொண்டுவருதல், மது அருந்துவதைத் தவிர்ப்பது, விவசாய நடைமுறைகளை மேம்படுத்துதல், பசுக்களைப் பாதுகாத்தல், வணிகத்தில் பங்கேற்பது, தங்களுக்குள் சண்டையிடுவதைத் தவிர்ப்பது, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு செயலாளருடன் கோபே ஜாதி கட்டிடங்கள் மற்றும் அமைப்பை நிறுவுதல், "கோபால் மித்ர்" என்ற மாத இதழை வெளியிடுதல் மற்றும் ஆண்டுதோறும் வெவ்வேறு இடங்களில் மகாசபாவின் அமர்வை நடத்துதல் ஆகியவை மகாசபாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் அடங்கும். மகாசபா எடுத்த மிக முக்கியமான நடவடிக்கை, பின்னர் சமூகவியலாளர்களால் "சமஸ்கிருதமயமாக்கல்" என்று அழைக்கப்பட்டது அல்லது 'ஜனயு தரன்' விழாவை நடத்தியது. இது உயர் சாதியினரால் கடுமையாக எதிர்க்கப்பட்டது, அதே நேரத்தில் முங்கரில் புனித நூலை அணிந்த யாதவர்கள் தீக்குளிக்கப்பட்டனர். மறைந்த ராஷ் பிஹாரி லால் மண்டல் 25-26 தேதிகளில் பனாரஸில் 51 வயதில் தனது இறுதி மூச்சை விட்டபோது அது ஒரு தனித்துவமான தற்செயல் நிகழ்வு.

ஆகஸ்ட் 1918, பீகாரின் முன்னாள் முதல்வரும் அவரது இளைய மகனுமான பி.பி. மண்டல் இங்குதான் பிறந்தார்.

# உமாபதி ராமையா இயக்கத்தில் டிஎன் 2026! டீசர் அறிவிப்பு!




நடிகர் தம்பி ராமையாவின் மகன் உமாபதி ராமையா இயக்கும் டிஎன் 2026 படத்தின் டீசர் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

'ராஜா கிளி' திரைப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானவர், உமாபதி ராமையா. நடிகர் தம்பி ராமையா கதை மற்றும் வசனம் எழுதி, அரசியல் கலந்த நகைச்சுவை பாணியில் எடுக்கப்பட்டுள்ள புதிய படத்தை உமாபதி ராமையா இயக்குகிறார்.

இந்தப் படத்தில், நடிகர்கள் நட்டி, எம்.எஸ். பாஸ்கர், இளவரசு ஆகியோர் முதன்மைக் கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர்.

மேலும், சாந்தினி தமிழரசன், யாஷிகா ஆனந்த், ஸ்ரீத்தா ராவ், விஜி சந்திரசேகர், கிங்காங், தேவி மகேஷ், ஜான் விஜய், ஆடுகளம் நரேன், கிங்ஸ்லி உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

கண்ணன் ரவி குழு மற்றும் கந்தரா ஸ்டுடியோஸ் இணைந்து தயாரித்துள்ள இந்தப் படத்துக்கு, தர்புகா சிவா இசையமைத்துள்ளார்.

சிறப்புத் தோற்றத்தில் சாண்டி நடித்துள்ளார். இப்படத்தின் வெளியீட்டுப் பணிகள் முழுமையாக நிறைவடைந்துள்ள நிலையில், வரும் ஏப். 10 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது.

இந்த நிலையில், டிஎன் 2026 திரைப்படத்தின் டீசர் நாளை வெளியாகும் என்று படக்குழு அறிவித்துள்ளது.

தமிழக அரசியலை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்டுள்ள இந்தப் படம், சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன்னதாக வெளியாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



செல்லமா சீரியலில் கதாநாயகியாக நடித்து பிரபலமானவர் நடிகை அன்ஷிதா. இதன்பின், பிக் பாஸ் நிகழ்ச்சியில் போட்டியாளராக களமிறங்கினார். இதில் நல்ல வரவேற்பை பெற்றார். மேலும், தற்போது அழகே அழகு சீரியலில் கதாநாயகியாக நடித்து வருகிறார். இன்ஸ்டாகிராமில் நடிகை அன்ஷிதா வெளியிடும் புகைப்படங்கள் உடனடியாக ரசிகர்கள் மத்தியில் வைரலாகும். அப்படி, வைரலான அன்ஷிதாவின் அழகிய புகைப்படங்கள் இதோ பாருங்க..

# சூரிக்கு ஜோடியாக மமிதா பைஜு?





நடிகர் சூரிக்கு ஜோடியாக இளம் நடிகை மமிதா பைஜூ நடிக்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வெண்ணிலாக் கபடி குழு படத்தின் மூலம் பிரபலமான சூரி, நகைச்சுவை நடிகராக இருந்து, வெற்றிமாறனின் விடுதலை திரைப்படத்துக்குப் பின்னர் பெரிய நடிகராக உயர்ந்திருக்கிறார்.

இவரின் நடிப்பில் மாமன், கருடன், கொட்டுக்காளி உள்ளிட்ட படங்களில் வெளியாகி வெற்றி பெற்றன.

செல்ஃபி படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமான மதிமாறன் புகழேந்தி இயக்கத்தில் 'மண்டாடி' என்ற படத்தில் தற்போது சூரி நடித்து வருகிறார். இது கடலில் நடக்கும் படகுப் போட்டியை மையப்படுத்தி உருவாகும் படம் என்று கூறப்படுகிறது.

இந்தியாவின் பல மொழிகளில் பிரமாண்டமான மற்றும் வித்தியாசமான படங்களைத் தயாரித்து வரும் முன்னணி தயாரிப்பு நிறுவனமான மைத்ரி மூவி மேக்கர்ஸ் தனது 3-வது தமிழ் திரைப்படத்தை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இந்தப் படத்தில் நடிகர் சூரி கதாநாயகனாக நடிக்கிறார். படத்தை 'இன்று நேற்று நாளை', 'அயலான்' உள்ளிட்ட படங்களை இயக்கிய ரவிக்குமார் இயக்குகிறார். நவீன் யெர்னேனி மற்றும் ஒய். ரவிசங்கர் ஆகியோர் இணைந்து தயாரிக்கின்றனர். 2015 ஆம் ஆண்டு சென்னை செம்பரம்பாக்கத்தால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கை மையமாக வைத்து வைத்து உருவாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

மலையாள திரைப்படவுலகில் பிரேமலு திரைப்படத்துக்குப் பின்னர் பெரிதும் புகழ்பெற்ற மமிதா பைஜூ, சூரிக்கு ஜோடியாக நடிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

மலையாளத்தில் கலக்கி, தமிழில் டியூட் திரைப்படத்தின் மூலம் அறிமுகமான மமிதா பைஜூ, திரைக்கு வராத விஜய்யின் ஜனநாயகன், சூரியாவின் விஸ்வநாத் அண்ட் சன்ஸ், தனுஷின் கர, இரண்டு வானம் உள்ளிட்டப் படங்களிலும் நடித்து வருகிறார்.

இதுவரை பெயரிடப்படாமல் சூரி 7 எனப் பெயரிடப்பட்டுள்ள தயாரிப்பு பணிகள் நடைபெற்று வரும் நிலையில், தமிழ், தெலுங்கு என இரண்டு மொழிகள் இந்தப் படம் வெளியாகவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ராவடி படத்தின் படப்பிடிப்பு நிறைவு!



சிறை திரைப்படத்தின் மூலம் கதாநாயகனாக கவனம் ஈர்த்த அக்ஷய் குமார் நடித்துள்ள ராவடி படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்தது.

செவன் ஸ்கிரீன் ஸ்டுடியோ நிறுவனத்தின் எஸ். எஸ். லலித் குமார் தயாரிப்பில், நடிகர்கள் பாசில் ஜோசப், அக்ஷய் குமார் நடிக்கும் 'ராவடி' படத்தின் படப்பிடிப்பு முழுமையாக நிறைவடைந்தது.

சென்னை மற்றும் ஒகேனக்கலில் படப்பிடிப்பு நடந்து முடிந்து, தற்போது போஸ்ட் புரொடக்சன் பணிகள் நடைபெற்று வருகிறது.

நடிகர்கள் பாசில் ஜோசப் மற்றும் அக்ஷய் குமார் ஆகியோர் இணைந்து நடிக்கும் தமிழ் மற்றும் மலையாளம் ஆகிய இரு மொழிகளில் உருவாகி வரும் 'ராவடி' திரைப்படத்தின் படப்பிடிப்பு பணிகள் தற்போது முழுமையாக நிறைவடைந்துள்ளதாக படக்குழு அறிவித்து ள்ளது.

அறிமுக இயக்குநர் விக்னேஷ் வடிவேல் இயக்கத்தில் உருவாகியுள்ள இந்தப் படத்தில், ஜான் விஜய், சத்யன், ஜாபர் சாதிக், நோபல் கே. ஜேம்ஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

இந்தத் திரைப்படத்திற்கு லியோன் பிரிட்டோ ஒளிப்பதிவு செய்திருக்கிறார். ஜென் மார்ட்டின் இசையமைக்க, படத்தொகுப்பை பரத் விக்ரமன் மேற்கொண்டுள்ளார்.

இந்தப் படத்தை கோடை காலத்தில் வெளியிட படக்குழு திட்டமிட்டுள்ளது.

நடிகை நிதி அகர்வால் தெலுங்கில் தற்போது முன்னணி ஹீரோயினாக இருக்கிறார். தமிழிலும் சில படங்கள் நடித்து இருந்தாலும் அடுத்தடுத்து அவருக்கு வாய்ப்புகள் அதிகம் தமிழில் வரவில்லை.

நிதி அகர்வால் எந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டாலும் அவர் தாராள கிளாமர் ஆன உடையில் வந்து எல்லோரது கவனத்தையும் ஈர்த்து வருகிறார். தற்போது பேஷன் ஷோவில் கலந்துகொள்ள அவர் உச்சக்கட்ட கவர்ச்சி உடையில் வந்திருக்கும் புகைபடங்களை பாருங்க.



# செல்வராகவன் படத்தில் நடிக்க மாட்டேன்: ஆண்ட்ரியா

நடிகை ஆண்ட்ரியா இயக்குநர் செல்வராகவன் இயக்கத்தில் நடிக்க மாட்டேன் எனத் தெரிவித்துள்ளார்.

நடிகை ஆண்ட்ரியா நடிப்புடன் இசைக் கச்சேரிகளிலும் கவனம் செலுத்தி வருகிறார். இறுதியாக, இவர் நடிப்பில் வெளியான மாஸ்க் கவனம் பெற்றது. பிசாசு - 2 திரைப்படம் வெளியீட்டிற்குக் காத்திருக்கிறது.

கோபி நயினாரின் மனுசி படத்தில் நடித்து முடித்துள்ளார். சென்சார் பிரச்னைகளால் திரைக்கு வராமல் இருக்கிறது. தற்போது, வெற்றி மாறனின் அரசன் திரைப்படத்தில் நடித்து வருகிறார்.



இந்த நிலையில், நிகழ்வொன்றில் கலந்துகொண்ட ஆண்ட்ரியாவிடம், "ஆயிரத்தில் ஒருவன் - 2 திரைப்படம் வருமா?" எனக் கேட்கப்பட்டது.

அதற்கு ஆண்ட்ரியா, "அப்படம் வருமா என என்னிடம் எதிர்பார்க்காதீர்கள். அந்தப் படம் உருவாகட்டும். ஆனால், நான் அதில் நடிக்க மாட்டேன். காரணம், செல்வராகவனுடன் பணியாற்றுவது மிகவும் கடினம். ஆயிரத்தில் ஒருவன் திரைப்படத்திற்காக 200 நாள்கள் படப்பிடிப்பு நடத்தினார். ஆனால், அப்படத்திற்கு பின் வந்த படங்களும் கதாபாத்திரங்களும் எனக்கு சுலபமாகவே இருந்தது." எனக் கூறினார்.

செல்வராகவன் இயக்கிய ஆயிரத்தில் ஒருவன் முதல் பாகத்தில் ஆண்ட்ரியா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து பாராட்டுகளைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.


அருள்தரும் தெய்வம்
விளம்பர முகவர்கள் &
விற்பனை பிரதிநிதிகள் தேவை
• அருள்தரும் தெய்வம் மாதம் இருமுறை பக்தி இதழுக்காக
• பகுதிநேர / முழு நேர வாய்ப்புகள்
• கமிஷன் அல்லது மாத ஊதிய அடிப்படையில்
• மாதம் Rs. 20000 முதல் Rs. 50000/- வரை ஈட்ட சிறந்த வாய்ப்பு
CALL / WHATSAPP: 7789941009
இன்றே இணையுங்கள்!


Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale
Dealers In: Designer
Sarees, Chudidhar,
Laganga, Choli &
Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple)
Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai
Real Choice Chennai
Real Choice Chennai


WANTED
Needed female staff
to look after
children, patients.
Contact
9150989424


Any Website
Rs.10,000/-
Professional Websites at Affordable Price!
Call: 7789941009


WANTED
Retd, VRS, Home Makers,
NRIs, Business Person
Contact
8248951872


WANTED
Site Supervisor required
for construction work in Ambattur
Contact:
8428872887


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
அனைவருக்கும்
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்!
அஜந்தா
பாக்குடன்
உங்கள்
தீபாவளியை
கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


TAMIL
TELECALLER
JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
PRESS
பேப்பர்பாய்
8122664699


தனியார் வாகன உதிரிபாகங்கள்
உற்பத்தி செய்யும் நிறுவனத்தில்
பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை /
மணப்பெண்ணைப்
பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில்
ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம்
இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com




## நட்பில் நான்- ஒரு பிழை

தோற்றுப்போன போதெல்லாம் என் தோள் தொட்ட ஆறுதல் நீ!
ஆனால்... இன்று நம் நட்பின் மீதான நம்பிக்கையிலேயே
உன்னிடமே தோற்றுப் போய்விட்டேன்!

நான் நிம்மதியாக, நல்ல பணியில் இருக்கிறேன் என
என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாமென நினைத்தாயோ?

வேலைப்பளுவில் இருக்கும் நண்பனை
வற்புறுத்த வேண்டாமென விலகி நின்றாயோ?

நானாக உன்னை அழைத்திருக்க வேண்டும் என
நினைக்கிறாய்... ஆனால், நான் அழைத்த பல நேரங்களில்
நீ என் அழைப்பை ஏற்கவில்லை என்பதை நீயும் அறிவாயே!
நீ வருவாய் எனத் தெரிந்தால் – என் நிழலும் உன்னோடு
வந்திருக்கும் என்பது நீயும் அறிந்த ஒன்றல்லவா?
அறிந்தும் உன் வருகையை எனக்கு அறிவிக்காதது ஏனோ?
உன் வருகையும், அன்பும், பேச்சும் இருந்திருந்தால்...
பிணமாக வாழ்ந்து கொண்டிருக்கும் என் உயிரற்ற உடலுக்கு
கொஞ்சம் ஜீவன் வந்திருக்கும்! நண்பா, நீ அறிவாயா?
உன்னோடு நான் சேர்ந்திருந்த நாட்கள் மட்டும் தான்
நான் உயிரோடு இருந்த நாட்கள்! இப்போதும் இதற்கும் நீ
பதில் சொல்ல மாட்டாய்... மௌனத்தோடு என்னைக் கடந்து
போவாய்! உன் நண்பன் பிணமாகவே நடமாடிக் கொண்டிருப்பது
உனக்கு மகிழ்ச்சியா? ஒரு நாள்...
நிச்சயமாக, உண்மையாக, மெய்யாகவே
நான் பிணமாகக் கிடக்கும் போது நீ வருவாய்!
அன்று நீ எவ்வளவு அழுதாலும் எனக்குக் கேட்காது,
உனக்கு ஆறுதல் சொல்ல என்னால் முடியாது!
காரணமே இல்லாமல் காலப்போக்கில் பிரிந்து போகும்



மிக மலிவான நட்பில் – நம் நட்பு
மக்கிப் போக வேண்டாமே நண்பா! நான்
இன்னும் வாழ்கிறேன்! சந்திப்போம்
நம் நட்பில் நான் பிழையாகி போனதில்
வருந்துகிறேன்.

**ஜனனி அந்தோணி ராஜ்** , திருச்சிராப்பள்ளி

சிரித்து தொலைக்காதே
சிதைந்து போகிறேன்!

அந்த செல்போன்
என்ன புண்ணியம்
செய்ததோ?
உன்னை செல்பி எடுக்க!

**லி.நௌஷாத் கான்**

## "துரோகம்"

நம்பிக்கை விதைத்த
நிலத்தில் நஞ்சாய்
முளைக்கும் களை துரோகம்!

நெருக்கத்தின் நிழலில்
நின்று நெஞ்சைத்
துளைக்கும் வாள்
துரோகம்!

சிரிப்பின் பின்னால்
மறைந்து கழுத்தைக் கவ்வும்
சிறுத்தை துரோகம்!

சிலிர்க்கும் குளிர்காற்றாய்
வந்து சித்தம் கலங்கடிக்கும்
நஞ்சு துரோகம்!

கையைப் பிடித்த கைதான்
கைவிடும் காலம் நின்று
வேடிக்கை பார்க்கும்!


துரோகமோர் காயமல்ல,
மீண்டும் மீண்டும் வடியும்
நினைவுக் கண்ணீர்!

அக்கண்ணீரில்தான்



புது மனிதன்
பிறக்கிறான்!
நம்பிக்கையை
அல்ல...
நினைவுகளை
நம்பக்
கற்றுக்
கொள்கிறான்!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



## எங்கே எனது இதயம்

வலை வீசத் துடிக்கும்
எனக்கு உன் வாள்வீச்சு
மயக்கம் தரும்

புன்னகைக்கும் உன் கண்
விளிம்பில் என்னை மறந்து
போனேன் என்பேன்

கண் அசைவிற்கு
காத்திருக்கும் எனக்கு

எண்ண மெல்லாம்
நிறைந்து என்னுள்
வண்ணமயமாய் வந்து
விடு நீயும்
வழியில் விழி வைத்து
பார்த்திருக்கிறேன்

இமைக்க மறந்து இதயம்
தொலைத்து

இளகிப் போகிறேன்
இன்றே வந்துவிடு

**வி.பிரபாவதி** மடிப்பாக்கம்



## துளிப்பாக்கள்.

இருளில் கரைகிறாள்
விஸ்கி குவளையில்
கண்ணீர்த்துளி
********
பூக்களைப் பறித்திட
கனக்கின்றன
போர்ச் செயதிகள்
*********
இறுதி மிடறு –
இறங்கி விட்டது
சிக்கிய சோகம்
*********
கலைந்த உறக்கம்
தள்ளி வையுங்கள்
சன்னல் பிறையை
********
மழைக்காலம்
நனைகின்றன
இரவும் பகலும்
********
புத்தாண்டு வைகறை
ஆடையின்றி ஒளிந்திடும்
இறுதி இருள்
*********
சத்தமிட்டு பறக்கும்
வண்டுக்குச் சொல்லுங்கள்
மரணவீடு இது
********
பழுதானப் படிகள்
தடங்கல் ஏற்படலாம்
தாரகை நோட்டமிட
**********
கண்ணுறங்குங்கள்
காலையில் சந்திப்போம்
பூகம்பம் நிகழாத பட்சத்தில்
********
மணலில் நடக்கிறேன்
கால் நனைத்த அலைகளை
கடலுக்குள் தள்ளி
********
கொட்டிய மழையில்
எட்டாம் நிறமிழந்து
எட்டிப் பார்க்கும் வானவில்
********
உடனெடுத்துச்
செல்வதில்லை நிழல்களை
நடு வான் பறவைகள்
*********
மழையுடன் அழையா
விருந்தினராய்
ஆலங்கட்டிகள்
*********
மலையுச்சி –
நனைக்காமல் நகரும்
மழை சுமந்த முகில்கள்
**********
மகளூதும் நீர்க்குமிழி –
பறந்துச் செல்கின்றன
பலவித ஹைக்கூகள்
**********
மரங்கொத்தி
மெதுவாய்க் கொத்துகிறது
பச்சோந்தியின் நிழலை
**********
'சர்ச்'சைத் திறக்கிறேன்
வெளியேறுகிறது
ஆறுநாள் தனிமை
*****
காண்கிறேன்
ஒவ்வொரு கண்விழிப்பிலும்
முப்படைந்த இரவை
*********
எங்கேச் சென்றது
நின்ற மழை?
தொடரும் என் தேடல்
**********
தேயப்பிறை நிலவை
வழியனுப்பி பொழிகிறது
பின்னிரவு மழை

**முனைவர் வே.புகழேந்தி**

## ஐயத்தைப் போக்கல் அழகு!

நேரிசை வெண்பா!

மனத்தடையை மாண்பாக
நீக்கியே வாழ்தல்
கனிவன்றோ!
கண்ணியமாய் என்றும்..
வினவியே பையவே
நின்றிட பாங்கின்றித்
தோன்றிடும் ஐயத்தைப்
போக்கல் அழகு!

இல்லத்தில் எந்தவித
ஐயமும் ஏற்படின்
உள்ளத்தால் நீக்கிடுவோம்
உன்னதமாய்... மெல்லத்தான்
வையகத்தில் எவ்வகையில்
வண்ணமாய்த் தோன்றிடும்
ஐயத்தைப்போக்கல்
அழகு!

## நெல் தூற்றல்

நேரிசை வெண்பா!

உழைத்துப் பயிரிட்டு
உன்னத மாகப்பிழைத்திட
மங்கையர் பீடு..தழைத்திட
வல்லமுறை நாளும்
வயலில் விளைவித்தார்
நெல்லினைத் தூற்றி
நெகிழ்ந்து!

நெற்றி வியர்வையை
நேர்ந்தேதான் சிந்திட
பற்றுடன் நல்வயலில்
பாங்காக..உற்றாரே
நெல்மணியைக் கண்டேதான்

நெஞ்சுருக மங்கையர்
நெல்லினைத் தூற்றி
நெகிழ்ந்து!

## சூடாகும் பூமி!

(பொது)

பூமித் தாயைக் காப்போம்
பொலிவாய்ச் சேயாய்க்
கொள்வோம்!ஆமாம் சூடாய்
ஆகும்அறிந்து நன்றே
செய்வோம்!

வேகா வெய்யில் கொளுத்தும்
வீடு கண்டே துரத்தும்!
ஆகா சூடாய் ஆகும்
அறிந்தே நன்றே செய்வோம்!

பருவ மாற்றத் தாலே
பாங்காய் சூடாய் ஆகும்!
திருவாய் மரத்தை
வளர்ப்போம் தெரிந்து
தெளிந்தே நடப்போம்!

**முனைவர் இராம.வேதநாயகம்.**



## எல்லாம் நீயே

சோகத்தின் சுந்தரி நீ
சொர்க்கத்தின் புகலிடம் நீ
கட்டி இழுக்கும் காந்தம் நீ
அருவியாய்
கொட்டும் காதல் நீ

வெட்கம் முட்ட விருந்து
கொடுத்தாய்...
வேர்வை சிந்த உழைப்பை
கொடுத்தாய்...
சில நொடியில் நீ மயங்க
கண்டேன்..
சிதைந்த உணர்வை அதிகம்
கண்டேன்...
சிதரியதை எண்ணி
பெருமைக்கொண்டேன்..

உணவை தேடாத
பசியை கண்டேன்...
உண்ட பெருமையில்
மயக்கம் கொண்டேன்...



விடுதலை
கண்டதும்
கோபம்
கொண்டேன்....!!

**பொன். கருணா**
நவி மும்பை

சுடும் நிஜங்களை விட
சுகமான கற்பனைக்
காதல் அழகானது தான்!

நீ உம்முன்னு இருந்தாலும்




கம்முன்னு
இருப்பதில்லை
பாழாய்
போன என்
மனசு!

**லி.நௌஷாத் கான்**

# நூல் விமர்சனம்

கணினி யுகத்திற்குத் திருவள்ளுவர்
நூல் ஆசிரியர் : தமிழ்த் தேனீ முனைவர் இரா. மோகன்.
நூல் விமர்சனம் : கவிஞர் இரா. இரவி !
வானதி பதிப்பகம், 23, தீன தயாளு தெரு, தியாகராய நகர், சென்னை 600 017.
போன் : 044 24342810
விலை : ரூ. 150







கணினி யுகத்திற்குக் கம்பர் என்ற நூல் படைத்து தமிழ் இலக்கிய நேயர்களின் பெரும் பாராட்டைப் பெற்ற தமிழ்த்தேனீ முனைவர் இரா. மோகன் அவர்கள், கணினி யுகத்திற்குத் திருவள்ளுவர் என்ற நூல் படைத்துள்ளார். இந்நூல் நூலாசிரியரின் 125வது நூல் என்ற பெருமை பெற்றுள்ளது.

வானதி பதிப்பகம் தமிழ்த்தேனீ இரா. மோகன் வெற்றி கூட்டணியாகி விட்டது. தொடர்ந்து தரமான நூல்கள் வந்து கொண்டே இருக்கின்றன. மிக நேர்த்தியாக அச்சிட்டுள்ள வானதி பதிப்பகத்திற்கு பாராட்டுக்கள். முன் அட்டையில் திருவள்ளுவரும், பின் அட்டையில் நூலாசிரியரும், பதிப்பாளரும் உள்ளனர். நல்ல வடிவமைப்பு.

125 நூல்கள் எழுதியவர், முதல்முறையாக இந்நூலை செல்ல மகள் அரசிக்கும், அவரது வாழ்க்கைத் துணைவர் பாலாஜிக்கும் பரிசாக்கி உள்ளார். காரணம், அமெரிக்காவில் மகள் இல்லத்தில் தங்கி இருந்த காலத்தில் உருவானவை என்பதால். அமெரிக்கா சென்றாலும் நூல் எழுதுவதை விடுவதில்லை என்ற நூலாசிரியரின் குறிக்கோளுக்கு பாராட்டுக்கள். மு.வ. அவர்களின் செல்லப் பிள்ளை தமிழ்த்தேனீ இரா. மோகன் அவர்கள், மு.வ. அவர்களைப் போல திருக்குறள் உரை எழுதவில்லையே என்ற ஏக்கம் எனக்குண்டு. அந்த ஏக்கத்தை பூர்த்தி செய்யும் விதமாக, திருக்குறளை ஆய்வு செய்து நவீன யுகத்திற்கு நவீன யுத்திகளுக்கு மேலாண்மைக்கு திருக்குறள் எவ்வாறெல்லாம் பொருந்தி வருகின்றன என்பதை ஆய்ந்து ஆராய்ந்து மிக நுட்பமாக வடித்திட்ட நூல் இது.

பேச்சுத்துறை, எழுத்துத்துறை இரண்டு தேரிலும் ஒரே நேரத்தில் வெற்றி பவனி வரும் ஆற்றல்சார் பேராசிரியர் தமிழ்த்தேனீ முனைவர் இரா. மோகன் அவர்களின் ஆற்றல் மிக்க படைப்பு இந்நூல். 12 வருடங்களுக்கு ஒருமுறை மலரும் குறிஞ்சி போல நூலில் 12 கட்டுரைகள் உள்ளன. கணினி யுகத்திற்குத் திருக்குறள், ஆளுமை வளர்ச்சி, மனித வள மேம்பாடு, விழுமியக் கல்வி, அறிவார்ந்த உணர்ச்சி ஆளுகை, எண்களின் ஆட்சி, தொடர்பியல் திறன், உணவியல் நெறிமுறைகள், அழகிய தமிழ் நூல், பொருளியல் சிந்தனைகள், புலப்பாட்டு நெறி, பன்முக நோக்கு. தலைப்புகளை வாசித்தாலே திருக்குறளில் இவ்வளவு உள்ளனவா! இவ்வளவு நாட்களாக திருக்குறளை இந்தக் கோணங்களில் படிக்கவில்லையே என்ற ஏக்கத்தை வரவழைத்து வெற்றி பெறுகின்றார் நூல் ஆசிரியர்.திருக்குறள் குறித்து ஒரு கட்டுரை எழுதுவதற்கு பல நாட்கள் ஆகும் எனக்கு. ஆனால் ஒருவரே 12 கட்டுரைகள் 12 விதமாக வடித்து இருப்பது வியப்பு. உலக இலக்கியங்களில் தலைசிறந்த நூல் திருக்குறள். உலக அரங்கில் திருக்குறளின் மதிப்பை இன்னும் இன்னும் உயர்த்தும் விதமாக உள்ளது இந்நூல். இந்நூலை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிட வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கின்றேன்.

திருக்குறள் பற்றி எத்தனையோ நூல்கள் வந்துள்ளன, வருகின்றன, இன்னும் வரலாம். இந்நூல் புதிய கோணத்தில் புதிய பார்வையில் வந்துள்ளது. 12 கட்டுரைகளிலும் திருக்குறள் பற்றி அறிஞர்கள் எழுதிய கருத்துக்களை தலைப்பு தகவலாக வைத்து கட்டுரையைத் தொடங்கி இருப்பது சிறப்பு. திரு. ப. மருதநாயகம், திரு. எஸ். சீனிவாசன், திரு. வா.செ. குழந்தைசாமி, திரு. சோ. ந. கந்தசாமி, திரு. வ.சுப. மாணிக்கம், திரு. ச.வே. சுப்பிரமணியன், திரு. ரா.பி. சேதுப்பிள்ளை, திரு. ஜி. சுப்பிரமணிய பிள்ளை, திரு. எஸ். வையாபுரி பிள்ளை, திரு. கா. செல்லப்பன், திரு. எஸ். இராமகிருஷ்ணன், திரு. அ.கி. பரந்தாமனார் திருக்குறள் ஜாம்பவான்கள், அறிஞர்கள் தொடங்கி இன்றைய பேராசிரியர் எஸ். இராமகிருஷ்ணன் வரை திருக்குறள் பற்றி அவர்கள் சொன்ன விளக்கத்தை மேற்கோளாக கட்டுரையின் தலைப்பு வரிகளாக எழுதி கட்டமைத்த யுத்தி மிக நன்று. 12 அறிஞர்கள் கருத்தையும் ஒரே நூலில் அறிய வாய்ப்பாக உள்ளது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக இரண்டாம் நூற்றாண்டிலேயே இப்படி ஒரு மனிதன் சிந்தித்து எழுதி உள்ளார் என்பதை எண்ணிப் பார்க்கும் போது பிரமிப்பாக இருக்கும். அறநெறியாளர்கள் காந்தியடிகள் தொடங்கி கலாம் வரை நேசித்த, வாசித்த, கடைபிடித்த நூல் திருக்குறள்.

திருக்குறளின் பல்வேறு பரிமாணங்களை நூல் ஆசிரியர் தமிழ்த்தேனீ முனைவர் இரா. மோகன் அவர்கள் காட்சிப்படுத்தி வெற்றி பெறுகின்றார். ஆங்கிலத்தில் எத்தனையோ தன்னம்பிக்கை நூல்கள் வருகின்றன. ஆனால் அவை அனைத்தும் நமது திருக்குறளுக்கு ஈடாகாது. திருக்குறளில் பாடாத பொருள் இல்லை எனும் அளவிற்கு எல்லாம் உள்ளன. திருக்குறளில் என்ன இல்லை? என்று ஆய்வு செய்தால் தோற்று விடுவார்கள். நூலில் இருந்து பதச் சோறாக சில வரிகள், உங்கள் பார்வைக்கு : ஆளுமை வளர்ச்சி; இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு இடும்பை படாஅ தவர் (623) என்னும் குறட்பா இவ்வகையில் குறிப்பிடத்தக்கது ஆகும். இடும்பை படாஅதவர் அளபெடை இலக்கணம் கூறினால் மட்டும் போதாது. சிலர் இடும்பையை அரைவாசி, முக்கால்வாசி எதிர்த்து நிற்பர். முழுவதும் கடைசி வரை எதிர்த்து நில்லார். இவ்வாறு சிறு இடைவெளி விட்டாலும் இடும்பை வந்து தாக்கி விடும் என்பதற்காக இடும்பை 'படாஅதவர்' என்று நீட்டினார் திருவள்ளுவர். கடைசி வரை உறுதியுடன் இருப்பவர் என்பது பொருள்.

கடைசி வரை துன்பம் கண்டு துவண்டு விடாமல் உறுதியோடு எதிர்த்து நிற்க வேண்டும் என்ற தன்னம்பிக்கையையும் ஆளுமைத் திறனையும் நூலில் நன்கு எடுத்தியம்பி உள்ளார்.

திருக்குறளில் எண்கள், எந்தெந்த குறளில் வருகின்றன என்பதை ஆராய்ந்து அவற்றை விளக்கி இருப்பது சிறப்பு. ஒன்று என்று தொடங்கி ஆயிரம் கோடி வரை எண்கள் திருக்குறளில் இருப்பதை ஆராய்ந்து எழுதியது சிறப்பு. திருக்குறளில் உணவு பற்றியும், உணர்வு பற்றியும் உள்ளதை உள்ளபடியே மிக நுட்பமாக எடுத்தியம்பி உள்ளார்.

திருக்குறளின் சிறப்பாக சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், நவின்றோர்க்கு இனிமை, நன்மொழி உரைத்தல், ஓசையுடைமை, ஆழம் உடைத்தாதல், முறையின் வைப்பு, உலக மலைமாமை, விழுமியது பயத்தல், விளங்கு உதாரணத்து ஆகுதல் இப்படி பத்து கூறுகளுக்கும் பொருத்தமான திருக்குறளை மேற்கோள் காட்டி விளக்கிய விதம் ஆளுமை. திருக்குறளின் பெருமை என்பது இமயமலையை விட பெரியது என்பதை சான்றுகளோடு நிறுவிடும் நூல்.'திருக்குறளும் மனிதவள மேம்பாடும்' என்ற தலைப்பில் ஆய்வு செய்து முதல் முனைவர் பட்டம் பெற்ற சிறந்த எழுத்தாளர், சிறந்த பேச்சாளர், திரு வெ. இறையன்பு இ.ஆ.ப. அவர்கள், 'ஓடும் நதியின் ஓசை' நூலில் எழுதிய நேற்று அவன் கல்லாக இருந்திருக்கலாம் ; இன்று சிற்பமாக மாறியிருக்கலாம் கவிதையை மேற்கோள் காட்டி உள்ளார் . மெய்யியல் நோக்கு பகுதியில். முதுபெரும் அறிஞர்கள் வ.சுப. மாணிக்கனார் தொடங்கி இன்றைய இளைய தலைமுறை எழுத்தாளர் வெ. இறையன்பு வரை மேற்கோள் காட்டி எழுதியுள்ள நூலாசிரியர் தமிழ்த்தேனீ முனைவர் இரா. மோகன் அவர்களுக்கு பாராட்டுக்கள். அய்யா அவர்கள் எழுதிய 'கணினி யுகத்திற்குக் கம்பன்' நூல் படித்த போதே, 'கணினி யுகத்திற்குத் திருவள்ளுவர்' என்னும் நூலையும் எழுத வேண்டும் என்று ஆசைப்பட்டேன். என் ஆசை பூர்த்தியானது. நன்றி.



வெள்ளை நிலவே...
இட்லியே!
அதிகாலை அடுப்படியில்
ஆவி பறக்கும் அற்புதமே!

அரிசியும் உளுந்தும்
அன்பால் இணைந்த
சங்கமமே!

வெள்ளை நிறப் பூக்களாய்
தட்டில் வந்து விழுகையில்...

பசியெனும் தீயை
அணைக்கும்
பனித்துளி நீயன்றோ!

சுடச் சுடச் சாம்பாரும்
சுண்டியிழுக்கும் சட்னியும்
உன் மேனியில்
படர்கையில்...

உண்ணும் நாவிற்கு
உயிரே வந்துவிடும்!

நோயுற்ற உடலுக்கும்
நுண்ணிய மருந்தாவாய்!

குழந்தையின் கைக்கும்
குதூகலம் தருவாய்!

உலகமே வியக்கும்
உன்னதமான உணவே...

எத்தனை பலகாரம்
வந்தாலும்
உனக்கு ஈடு இணையேது?

என்றும் நீயே...
எங்கள் வீட்டு உணவின்
தலைவன்!

**லால்குடி வெ நாராயணன்**




### "ஒரு கிராமத்தானின் நகர விஜயம்"

மண்ணின் மணம் தாங்கி
வந்தேன் மனித மனம்
காணலாம் என்றே...

நகரம் வந்து நின்றபோது
நாடகம்தான் நடக்குதிங்கே!

புன்னகை கூட பணத்துக்கு
வாங்கும் பொருளாய் இங்கே!

பொய்யான முகமூடிகள்தான்
பொதுவான ஆடையாய்!

"வணக்கம்" சொல்லும்
குரலில் கூட வாய்ப்புக்கான
வணிகத் தொனி!

கண்ணீர் கூட கணக்குப்
பார்த்துத்தான் விழுகிறது...

உறவுகள் என்ற சொல்
யூஸ் அண்ட் த்ரோ ஆகி
விட்டது!

சிரிப்பின் பின்னே
சர்ப்பங்களின்
சத்தம் சந்தர்ப்பவாதமாய்!

நேரம் துரத்திக்கொண்டிருக்க
நிம்மதி மட்டும் தொலைவில்!

அம்மா சமைத்த
சோற்றுச் சுவை
அடிநாக்கில்
அரிச்சுவடியாய்!

அப்பா சொல்லும்
அறிவுரை ராகங்கள்
அபஸ்வரத்தின் அடி
நாதங்களாய்!

பாட்டி சொன்ன பழமொழிகள்
புளித்துப் போன
பீஸாக்களாய்!

பண்பாடு பேசினால்
காலாவதியன் கலாச்சாரம்
சொன்னால் கருங்காலி!

காதலில் கூட விழாக்காலத்
தள்ளுபடி? கல்யாணத்தில்
கரண்ஸி வாசனை!

கைப்பேசி போதும் காலைச்
சூரியன் தேவையில்லை?

ஆன்லைனில் நண்பருண்டு
ஆஃப்லைனில் அநாதையாய்!

நாகரிகமெனும் பெயரில்
நாணங்கள் கழற்றப்படும்!

அழகென்றால் உடம்புதான்
அறிவென்றால் பணந்தான்!

மீண்டும் வேண்டும்
எந்தன் கிராமம்!

மண்ணில் மண்ணாய்க்
கலந்து வாழ்ந்திட!



அங்கே
ஏழ்மையிருந்தாலும்
மனசு மட்டும்
பணக்காரமாய்....

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



### *ராஜ..ராஜ..ராஜ..ராஜ ராஜராஜ சோழன்.!

ராஜ ராஜ ராஜ ராஜ
ராஜராஜ சோழனே.!
ராஜனாகக் கடல்கடந்து
தமிழ்க் கொடி ஏற்றினாய்

தஞ்சையாண்டு தமிழர்
வாழ்வை கேபுரத்தில்
ஏற்றினாய்.. நஞ்சை புஞ்சை
விளைய் செய்த காவிரியைப்
போற்றினாய்.!

காலம் வென்று
கோபுரத்தை.. தஞ்சையில்
உருவாக்கினாய்.. ஞாலம்
வென்று இதயமெல்லாம்
புலிக்கொடியை ஏற்றினாய்.!

கல்லின் மீது கலைவண்ணம்..
பெருவுடையார் அருளிலே..
காலம் வெல்ல பெரியகோவில்
காவிரிக்கரைக் கட்டினாய்.!

பெரிய நந்தி.. பெரி ய சிவன்..
பெரிய கோவில் உயர்ந்திட..
பெரிய மனம் வேண்டுமய்யா..
பெருமையை நிலை
நாட்டினாய்.!

புன்னை நல்லூர் மாரியம்மன்
அருளில் பொழுது விடிந்தது..
புதிய தொரு சமுதாயம் உனது
தலைமை ஏற்றது!

எல்லையில்லா தேவாரப்
பாடல்களைத் திரட்டியே..
தெய்வத்தமிழ் காவலனாய்
சரித்திரத்தை எழுதினாய். !
ராஜ ராஜ சோழனே உன்
புலிக் கொடிதான் பறக்குதே..
உலகம் வாழும் தமிழருக்கே
பெருமை என்றும் கூட்டுதே.!

வாழி..வாழி.. என்று வாழ்த்த
தமிழர்களே வாருங்கள்.. ராஜ
ராஜ சோழன் புகழை எங்கும்
நிலைநாட்டுங்கள்!

**வே.கல்யாண்குமார்.**

### இன்மை

நீள்நெடிய கனவொன்றை
தணலாக்கியபின்தான்
மீந்துகிடக்கிறது உன்
பேரொளி..

சிறகுகள் வற்றிய
கடலலை ஒன்றில்
ஒட்டிக்கொண்டிருக்கின்றன
என்மேலான உன் பிரியங்கள்
எப்போதும் இலைமறை
காயாய்..

தவிர்க்கவியலா சந்தர்ப்பங்கள்
சிலவற்றில்கூட புதையுண்டு
மறைந்துகொள்கிறது
எதிர்ப்படல் இம்சையாய்
உன் காட்சிமையும்
மீட்சிமையும்..

நீ விட்டெறிந்த சில பட்டங்கள்
என் இலக்குகளை
மறுதலிக்கின்றன..

தவிர்க்கவே முடியாத சில
பிரிவின் ரணங்கள் குறித்து
உன்னிடமேதும்
விளக்கங்களில்லை அல்லது
அவற்றை விருப்பமில்லை..

இருகூறாய் பிளந்து
விட்டால்தான் என்ன
நீ அருகற்ற ரணங்களை
சாம்பல் செய்தால் என்ன..

வெட்டுப்பட்டுவிட்ட
ஆட்டுக்குட்டிகளுக்கு
தெரிவிக்கவேண்டிய
அவசியங்கள் இல்லாதிருந்தது
நேர்ந்துகொண்ட சாமி
எதுவென்று..

சில பலிபீடங்களில்
என் ஆன்மா
துடித்துக்கொண்டிருக்கிறது
உன் இன்மைக்கு நன்றி..!

**ம.முத்துக்குமார்**
வே.காளியாபுரம்

### அந்த சத்தம் !

சமையலறையில்
பாத்திரம் கழுவி –. அடுக்கும்
சத்தம் மிக உச்சஸ்தாயில்
கேட்கிறதென்றால்...
மனைவிக்கு பிடிக்காத ஏதோ
ஒரு விஷயம்
வீட்டில் அரங்கேறி இருப்பதன்
அடையாளமே !

**எம்.பி.தினேஷ்.**
கோவை

1. சரி பதியாக வாழ்வதில்
இல்லை வாழ்க்கை
சரியும் நேரத்தில் சாய்ந்து
கொள்ள தோள் தருவதே
வாழ்க்கை

2. ஒவ்வொரு அப்பாவின்
பாத வெடிப்பு தான்
தன் மகனின் ஆயுள் ரேகை

3. வெற்றி என்பது உன்னை
உலகிற்கு அறிமுகம் செய்வது
தோல்வி என்பது உன்னை
உனக்கே அறிமுகம் செய்வது

4. நிழல்களும் மரமாக
இருந்து பாருங்கள்
பாசம் என்னும் வேர்கள்
உங்களை சுற்றிக்
கொண்டாடும்

5. மனைவியின்
குரலை அடக்கும் ஆண்
வலிமையானவன் அல்ல
அவளின் குரலை மதிக்கும்
ஆண் தான் உயர்ந்தவன்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



### நீர்க் கிழிசல்

தையல் போட்ட தடம்
தெரியவில்லை...
படகு கிழித்துச் சென்ற நீரில்!

### இசைப்படகு

இசைப்படகாகிறது
நீரைக் கிழித்துச் செல்லும்
விசைப்படகு!

### மரணப் பரிசு

கடலில் பிறந்த மீனுக்கு
மலையுச்சியைக் காட்டியது
கழுகு... மரணப் பரிசாக!


### கவ்வியதை விடேல்

என் இதழ்களால்
உன் இதழ் கவ்வும்
இந்நேரத்திலா
நினைவுக்கு வர வேண்டும்...



'கவ்வியதை
விடேல்' எனும்
பாரதியின்
புதிய
ஆத்திச்சூடி!

**சு.அருண் பிரகாஷ்**
இராமச்சந்திரபுரம்



### தீர்ப்புகள் திருத்தப்படலாம்

பெண்களே! கூந்தலில்
மலர் சூடுவதை மறந்து
விடுங்கள்... கனவு சுமந்த
வசந்தங்கள் எங்களை விட்டு
நீங்குகையில் கூந்தலை
விட்டு தூக்கி எறியும்போது
நாங்களும் பெண்ணினம்
என்பதை மறந்து
விடுகிறீர்கள்... கார் குழலில்
பூக்களைச் சூடினால்தான்
சுமங்கலியா! எவன் எழுதியத்
தீர்ப்புக்கு எங்களுக்குத்
தண்டனை வழங்குகிறீர்கள்...



தீர்ப்புகள்
திருத்தப்படலாம்
எங்கள்
தீர்மானத்தின்
முகவரிகள்
இன்னும்
ஏட்டிலியே
இருக்கின்றன....

**மீனாட்சி பாண்டியன்**
திருவண்ணாமலை.

1. அடுத்தவனை முந்த
வேண்டும் என்று ஓடினால்
அது பந்தயம்
உன்னை நீயே முந்த
வேண்டும் என்று ஓடினால்
அதுதான் வரலாறு

2 எப்படி வேண்டுமானாலும்
வாழ்ந்து விட்டு போங்கள்
நான் உங்களால் ஒருவர்
அழவோ அழியவோ கூடாது

3. ஒரு கோமாளி
ராஜாவாகும்போது
அரண்மனை சர்க்கஸ்
கூடாரம் ஆகிறது

4. மாற்றத்திற்கு ஏற்ப
தன்னை மாற்றிக்
கொள்ளும் திறனை
உண்மையான
புத்திசாலித்தனம்

5. உலகத்தில் மிகவும்
விலை உயர்ந்த
விஷயம் நம்பிக்கை
அதை அடைய சில
வருடங்களாகலாம்
ஆனால் உடைய சில
நொடிகள் போதும்

1. சரி பதியாக வாழ்வதில்
இல்லை வாழ்க்கை
சரியும் நேரத்தில் சாய்ந்து
கொள்ள தோள் தருவதே
வாழ்க்கை

2. ஒவ்வொரு அப்பாவின்
பாத வெடிப்பு தான்
தன் மகனின் ஆயுள் ரேகை

3. வெற்றி என்பது உன்னை
உலகிற்கு அறிமுகம்
செய்வது தோல்வி
என்பது உன்னைஉனக்கே
அறிமுகம் செய்வது

4. நிழல்களும் மரமாக
இருந்து பாருங்கள்
பாசம் என்னும் வேர்கள்
உங்களை சுற்றிக்
கொண்டாடும்

5. மனைவியின்
குரலை அடக்கும் ஆண்
வலிமையானவன் அல்ல
அவளின் குரலை மதிக்கும்
ஆண் தான் உயர்ந்தவன்

1. கைகளுக்கும் காலுக்கும்
எவ்வளவு வலிமை உண்டு
என்பதை வறுமை ஒன்றே
தீர்மானிக்கிறது

2. அன்பும் அடமானமும்
ஒன்றுதான் ஏண்டா
வச்சோம் என்று ஒருநாள்
வருத்தப்படுவோம்

3. பெண்களிடம் வயது
ஆண்களிடம் சம்பளம்
அரசியல்வாதிகளிடம்
கொள்கை இவற்றைப் பற்றி
கேட்கக் கூடாது

4.போராடுவது வெற்றி
தருமா அல்லது தோல்வி
தருமா என்று தெரியாது
ஆனால் நிச்சயம்
அனுபவத்தை தரும்



5. அடுத்த
நிலையை
அடைய
முயற்சி செய்
அடுத்தவன்
நிலையை
அடைய
முயற்சி செய்யாதே

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

### ஆண்டவன்

இறைவனை அடைந்திட
தியானி என்று கூறினர்
அனுபவஸ்தர்கள்
ஏழைகளுக்கு உதவுவதே
தெய்வத்தொண்டு பகன்றனர்
பக்திமான்கள்
ஒழுக்கமான இல்லறமே
மேன்மை என்றனர்
மனோதத்துவ அறிஞர்கள்
மந்திர தந்திரத்தால்
எட்டலாமென ஆசை
காட்டினர் அற்பப் பதர்கள்
உனக்கெதற்கு இந்த
வீண்வேலை பகுத்தறிவை
நோண்டி எடுத்தனர்
உனக்கு தோன்றியதைச்
செய்திடு பிறர் கருத்துக்கு
செவிசாய்க்காதே



லட்சியத்தை
நோக்கி
நகர்ந்திடு
உச்சியை
அடைந்து
கோலோச்ச

**பி. பழனி,**
சென்னை.

### எழுத்து !

மனிதகுலம் அறிவு பெற்றவுடன் வடித்தது
மகத்தான எழுத்து மறக்க முடியாதது !

உலகப் பொது மறையை அழியாமல் நமக்கு
உருப்படியாகத் தந்தது ஓலைச் சுவடி எழுத்து !

கம்ப இராமாயணம் சிலப்பதிகாரம் உள்ளிட்ட
கற்கண்டு இலக்கியம் உணர்த்தியது எழுத்து!

வாசிக்கும் பழக்கம் பலருக்கு வந்ததற்கும்
வானளாவ புகழ் கிடைக்கக் காரணம் எழுத்து !

காதல் கடிதம் எழுதுவதற்கு அன்றும் இன்றும்
காதலர்களுக்கு துணை நின்றது எழுத்து!

ஒரு எழுத்து மாறி அன்று பொருள்
கொண்டதால்
உலகப் போர் நிகழ்ந்த வரலாறும் உண்டு !

எழுத்தை அறிவித்தவன் இறைவன் என்று
இயம்பிடும் அளவிற்கு உயர்ந்தது எழுத்து !

எழுத்து அறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை
என்பது முக்கியமான புள்ளி விபரம் இன்று !

எழுத படிக்கத் தெரிந்தவர்கள் எண்ணிக்கை
இன்று உயர்ந்திடக் காரணம் எழுத்து !

குழந்தைகள் முதன் முதலில் நெல்லில்
குதூகலமாக எழுதி பார்ப்பதும் எழுத்து !

ஆசிரியர் கரும்பலகையில் எழுதுவதை
ஆர்வமாகப் பார்க்க வைத்தது எழுத்து !

அடிமை விலங்கை முறித்துப் போட்டு
அனைவருக்கும் விடுதலை தந்தது எழுத்து !

மக்களாட்சியின் நான்காவது தூணாக
மக்களைக் காக்கும் அரண் எழுத்து !

வாகன இயக்குபவர்களுக்கு சரியான
வழியினை சாலையில் காட்டுவது எழுத்து !

கணினி வந்த பிறகும் அனைவருக்கும்
கணினியில் துணை நிற்பதும் எழுத்து !

பார்வையற்றவர்கள் விரலால் தடவி
படிப்பதற்குத் துணை நிற்பதும் எழுத்து !

காட்டுமிராண்டியாக இருந்த மனிதனை
கல்வி கற்ற மனிதனாக மாற்றியது எழுத்து !

தலைஎழுத்து என்ற ஒன்று இல்லவே இல்லை
தவறான கற்பனைக் கற்பிதம் தலை எழுத்து !

**கவிஞர் இரா .இரவி !**



### நிழலும் கனியும்

மாங்கன்று ஒன்று முன்
வாசலில் நட்டேன்; நான்.

ஆசையாய் நீர் வார்த்து
ஆர்வமாய் காத்திருந்தேன்.

நிழல் தரும்; கனி தரும்;
காலம் கனியும்
என்று இருந்தேன்.

சிறிது சிறிதாய் உயர்ந்து
வந்தது. பெரிது பெரிதாய்
கிளைகளும் இலைகளும்.

கிளைத்து வளர்ந்தது.
படர்ந்து கிளர்ந்தது.

பரவும் நிழலும் கனியும்
கனியும் உனதாகுமா;
அன்னையின் வினாவை
ஒதுக்கினேன்.

கிளை கொள்ளா
மாம்பூக்கள்
தேனீக்களின் கூட்டம்

மாலைக் காற்றில்
காணாமல் போச்சு

"மா பூத்தது என மயங்காதே
மக்களைப் பெற்றோம் என
நினையாதே"

சொலவடை தான் என்றே
அன்னை சொன்னாள்

இந்த வருடம் உறுதியாய்
காய்க்கும் திடமாய் நம்பு
என்றாள்

எனக்கு ஆறுதலாய்: என்
முகத்தை பார்க்காமல் தான்!

தேர்வில் தேர்ச்சி
சென்னை வாசம்
விடுதியில் வாழ்க்கை

கோடை மழையில்
மாம்பிஞ்சுகள் உதிர;
என் நெஞ்சில் உதிரம்.

வருடங்கள் உருண்டன
அமெரிக்க வாழ்வு

அலைகடலுக்கு அப்பால்
அலைபேசி பேசியது
காணொளியாய்

மாமர நிழலில்
கயிற்றுக் கட்டில்
ஐயனின் படுக்கை

மாங்கிளையில் ஊஞ்சல்
ஆடும் அன்னை

பொன்னிற மாம்பழ
துண்டுகளால்நிரம்பிய தாலம்

நிழலும் கனியும்



தரு
வைத்தவனுக்கு
இல்லை.
கொடுத்து
வைத்தவருக்கே

**சசிகலா விஸ்வநாதன்**


### பூச்சூட்டு விழா

வானத்திற்கும் பூமிக்கும்
மகரந்தச் சேர்க்கை...
மேக பூக்கள் சிந்தும்
மழை மகரந்தங்கள்
மணல் மகரந்தங்களோடு
இணையும்போது



பூபாள
சிரிப்பில்
மண்
வாசனையால்
நில மகளுக்கு
வானவில்
மாலைத்
தொடுக்கிறது...

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** ரஞ்சிக்கோட்டை



### அழகும் அவசியம்

விழிகளில் காண்பது
மட்டும் அழகல்ல மனதை
நோக்குவதும் அழகு...
பேசும் வார்த்தை அன்பு
இருந்தால் அதுவே அழகு
வீசும் தென்றலில்
மலர்களின் வாசம்
இருந்தால் அதுவும் அழகு
கண்களில் பாசத்தைக்
காட்டத் தெரிந்தால் அதுவும்
அழகு இருப்பதை பலருக்கு
பகிர்ந்து கொடுத்தால்
அதுவும் அழகு...
தேவை என்றால் மட்டும்
பேசாமல் எப்போதும்
பேசுவதும் அழகு..
செயல்களில் துணிவு
இருந்தால் அதுவும் அழகு ..
செல்வத்தை சேமித்து
வைத்தால் அதுவும் அழகு



அழகு எங்கும்
இல்லை நம்
செயலிலும்
சொல்லிலும்
தான்
உள்ளது என
உணர்ந்து
கொள் ..

**உஷா முத்து ராமன்**

சாவுறதுக்குள்ள பார்க்காத
உன் கண்களை
ஒருமுறையாவது
பார்த்திட வேண்டும்
இதுவரை கேட்காத
உன் இன்னிசை குரலை
இந்த ஜென்மம் முடியும்
முன்பாவது ஒரு முறையாவது
கேட்டிட வேண்டும்!

கல்லூரி காலம்
திரும்ப வேண்டும்?

நினைவுகளில் மட்டும்
காதலித்து கொண்டிருப்பவன்
மீண்டொருமுறை
நிஜத்தில் காதலிக்க!

**லி.நௌஷாத் கான்**

### ஈர முத்தம்

அழுகை நின்ற
நொடியில் அமைதி
தந்த மருந்தாய்...

கன்னம் நனைத்த
அன்பின் அடையாளமாய்
அம்மா தந்த முத்தம்


சிறு விரல் பிடித்து
சிரிப்பை விதைக்கும்
வார்த்தைகள் இல்லாமல்
மென்மையாக விழும்
மழைத்துளிகளாய் அன்பின்
துளிகள்

அதில்...

குழந்தை நெஞ்சத்தில்
நிலையான நினைவாய்
உயிர் செல்வமாய்
வாழ்க்கை முழுவதும்...

அன்பை இணைக்கும்
உறவின் மொழி
பேசுமொரு பாசம்...
அம்மாவின் ஈர முத்தம்

**நா.பத்மாவதி**
கொரட்டூர்



தீண்டி விடும் பார்வைத்
தீயில் தினம்,தினம்
வெந்து சாகிறது
காதல் மனது!

காதலை தொலைத்த பிறகு
வெள்ளைக் காகிதங்கள்
எதற்கு? வெற்றுக்
கவிதைகள் எதற்கு?

பாழாய் போன நெஞ்சில்
தொலையாமல் இருக்கிறது?
தொலைத்து விட்ட காதல்!

நனவு நெருடலென்றால்
கனவு காண கற்றுக் கொள்!

கஷ்டமான வாழ்க்கையிலும்
இஷ்டப் பட்டு
சிரிக்க கற்றுக்கொள்!

கானல் கனவு வாழ்க்கை
கல்லறை வரை சொர்க்கம்
சுகமான சுமைகள்!

வாழ்க்கைல ஒருவேளை
சந்தோசமா இருந்திருந்தா,
உன்னை நினைக்காம
மறந்திட்டு
இருந்திருப்பேனோ? எல்லா
பைத்தியக்காரத்தனங்களும்
எல்லா நேரங்களிலும்
வெற்றியடைவதில்லை.
–இப்படிக்கு–
மானம்னு ஒண்ணு



இருக்கிறதை
நம்பி
உண்மையான
ஆசைகளை
துறந்து
வாழ்கிற
மிஸ்டர்
மிடில்கிளாஸ்

**லி.நௌஷாத் கான்**


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வாங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889



ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


Vilambaram
We
provide
Targeted Leads
to grow your
buisness
Boost
your
business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
We Build Perfection
IATA
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com



We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package
Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager - Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
பாஸ்கர்
பேப்பர்பாய்
தெய்வம்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
If you are interested
Do send your resume and portfollo to
padmamediapublications@gmail.com
Call: 9337501889


Bhoopathy Bakery
BAKED EVERYDAY
BISCUIT, CAKE, BUN VARIETIES
WHOLESALE & RETAIL
98845 15409
No:11/16, Gandhi Nagar, E.H Road,
Tondiarpet, Chennai - 600 081
NOW AVAILABLE IN
100Kgs.com


Supreme
Car Wash & Detailing
REDEFINING CAR CARE
PREMIUM SERVICE
638364389 9840882711


உங்களின் ஒளிமயமான
எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
D.சக்திவேல்
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்
கைரேகை ஜோதிடம்
முகக் குறிப்பு
கண் பார்வை கணிப்பு
வீடு மனை
வாங்க விற்க
அணுகவும்
நல்ல நேரங்கள்
கணிப்பு
ராகு காலங்கள்
பற்றிய தெளிவு
இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962
கவனத்தில் கொள்க:
• குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
• இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
• எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367


WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Cl.: 98410 38488 / 93848 17349


ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு
லேபர் வேலைக்கு
ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்
OMR பெருங்குடி
சென்னை
Contact
9790979539


PLOT SALE
ORAGADAM 11L to 23L
TAMBARAM 51L to 69L
OMR 26L to 51L
ECR 52L to 75L
9626777627


முனிஸ்வர் துணை
கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI
ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005


Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009
WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER
DISCOUNT
90 DAYS
MONEY BACK GUARANTEE


just499
REAL ESTATE
SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009

ஸ்ரீ கிருஷ்ணர் உபாசகர் பரிகார புகழ்
ஆன்மிக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US 9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY · LOVE
HEALTH · FAMILY
BUSINESS · CAREER
MARRIAGE

ARG CONSTRUCTIONS
We Build Your DREAM HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us 9710348377

VINAYGA ENTERPRISES
WANTED
COMPUTER OPERATOR
(FEMALE)
ONIDA AUTHORISED SERVICE CENTRE
CONTACT: 9962116238
ADDRESS: BHEEMANNA PETTAI, BHEEMANNA 1ST STREET, ALWARPET CHENNAI

PREMIUM LAND SALE
NEAR PARANDUR AIRPORT
YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!
Location: Just 6 KM Near Parandur New Airport
Price Details
₹700 to ₹2200 per Sq.Ft
Affordable & High Return Investment
Why Invest Here?
Fast Developing Area
Near Upcoming Airport
Excellent Appreciation Value
Suitable for Residential & Investment
Easy Road Access
PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847
LIMITED PLOTS - BOOK NOW!

FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO BUY OR SELL PROPERTY OR LAND?
+91 9884417843

Get Free Jobs Alert on Your WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs

ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601

Launch Your Own Secure Crypto MLM Software Today!
@4999/- onwards
CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com

WANTED
வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும்.7845904395/ 8668107106

ADVERTISE WITH US
CONTACT US
9438610756

S.R Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49, E.H.Road, Cornation Nagar, K.Pet, Ch-21.

WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
• பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
• இடங்கள்:
• பெருங்குடி, துரைப் பாக்கம்
• காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
• விருகம்பாக்கம்
பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ, வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம், மேட்டுக்குப்பம்- சென்னை-97

செக்யூரிட்டி கார்டுகள் தேவை
கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம் கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை
அணுகவும்: 9840861539

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Euro Kids Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081

just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary · Unilevel · Matrix · Board · Generation · ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com



# பல்சுவை களஞ்சியம்




# TNPSC பற்றி தெரிந்துகொள்வோம்

அன்பார்ந்த பெற்றோர்களே! இளைஞர்களே, மாணவ மாணவியர்களே! TNPSC பற்றி தெரிந்துகொண்டு சிறப்பான முறையில் மேலும் பல கல்வி பயின்று முன்னேற சில வழிகாட்டும் குறிப்புகள் தெரிந்து கொள்வோம்.

TNPSC. இல் எத்தனை குரூப் உள்ளது? உங்களுக்கு தெரியுமா?
குரூப் 7, 8 பற்றி தெரியுமா? மற்றும்
TNPSC-தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் குரூப் சேவைத் தேர்வுகள்/பதவிகள் அது என்னென்ன என்று உங்களுக்கு தெரியுமா? தெரியவில்லை என்றால் அதன் முழுவிவரங்கள் பின்வருமாறு?

How Many Groups in TNPSC?

குரூப் 1,
குரூப் 2,
குரூப் 3,
குரூப் 4,
குரூப் 5,
குரூப் 6,
குரூப் 7,
குரூப் 8



குரூப் 1 சேவைகள் (Group-I)

1)துணை கலெக்டர் (Deputy Collector)
2)துணை போலீஸ் சூப்பிரண்டு (வகை I) (Deputy Superintendent of Police)
3)மாவட்ட பதிவாளர், பதிவுத் துறை (District Registrar, Registration Department)
ஊரக வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் (பஞ்சாயத்து)
4)கலெக்டருக்கு தனிப்பட்ட உதவியாளர் (மேம்பாடு) (Assistant Director of RD Dept (Panchayat) /Personal Assistant (Development) to Collector)
5)மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (District Employment Officer)
6)தீயணைப்பு மற்றும் மீட்பு சேவைகளில் பிரதேச அலுவலர் (Div. Officer in Fire and Rescue Services)
7)உதவி ஆணையர் (சி.டி.) (Asst Commissioner)
8)கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர் (Deputy Registrar of Co-operative Societies)

குரூப் 1A சேவைகள் (Group-I A)

1)உதவி காடுகளின் பாதுகாவலர் (Assistant Conservator of Forests)

குரூப் 1B சேவைகள் (Group-I B)
1)உதவி ஆணையர் H.R & C.E (Assistant Commissioner, H.R. & C.E)

குரூப் 1C சேவைகள் (Group-I C)

1)மாவட்ட கல்வி அலுவலர் DEO (District Educational Officer)
2)ஒருங்கிணைந்த சிவில் சர்வீசஸ் தேர்வு -2

குரூப் 2 சேவைகள் (நேர்முகத்தேர்வு பதவிகள்) (Group-II)
1)துணை வணிக வரி அதிகாரி
2)நகராட்சி ஆணையர், தரம் -2
3)இளைய வேலைவாய்ப்பு அதிகாரி (வித்தியாசமாக இல்லாதவர்)
4)இளைய வேலைவாய்ப்பு அதிகாரி (வித்தியாசமாக திறமையானவர்)
5)துணை பதிவாளர், தரம் -2
6)தொழிலாளர் உதவி ஆய்வாளர்
7)உதவி பிரிவு அதிகாரி (சட்டம் மற்றும் நிதி தவிர துறை)
8)உதவி பிரிவு அதிகாரி (சட்டத்துறை)
9)உதவி பிரிவு அதிகாரி (நிதித்துறை)
10)தமிழ்நாடு பொது சேவையில் உதவி பிரிவு அதிகாரி ஆணைக்குழு உதவி பிரிவு அதிகாரி-கம்-புரோகிராமர்
11)உதவி பிரிவு அதிகாரி, தமிழ்நாடு சட்டமன்றம் செயலக சேவை
12)நன்னடத்தை அலுவலர், சமூக பாதுகாப்பு நன்னடத்தை அலுவலர், 13) சிறைத் துறை தொழில்துறை கூட்டுறவு அதிகாரி, கைத்தொழில் ஆணையர் மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தக இயக்குநர்
14)பெண்கள் நல அலுவலர், சமூக பாதுகாப்பு
15)சர்வே இயக்குநர் மற்றும் தீர்வுகளுக்கான Reg.Co-op Society இல் உள்ள கூட்டுறவு சங்கங்களின் மூத்த ஆய்வாளர்
16)வரவேற்பாளர், தமிழகம் விருந்தினர் மாளிகை,
17)உதகமண்டலம் தொழில்துறை கூட்டுறவு தொழில்துறை மேற்பார்வையாளர் 18) கமிஷனர் மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தக இயக்குநர் துறை
19)திட்ட உதவியாளர் ஆதி-திராவிடர் மற்றும் ....
பழங்குடியினர் நலத்துறை தணிக்கை பிரிவில் உள்ள தணிக்கை ஆய்வாளர்
இந்து மத மற்றும் அறக்கட்டளை நிர்வாகத் துறை உள்ளூர் நிதி தணிக்கைத் துறையின் உதவி ஆய்வாளர் மற்றும் உள் தணிக்கைத் துறை
மேற்பார்வையாளர் / மூத்த எழுத்தர் / தலைமை கணக்காளர் / ஜூனியர்தமிழ்நாடு வேளாண் சந்தைப்படுத்தல் கண்காணிப்பாளர் துணை சேவை
உதவி ஜெயிலர், சிறைத்துறை.
வருவாய் துறையில் உதவியாளர் டவுன் பஞ்சாயத்துத் துறையில் நிர்வாக அதிகாரி, தரம் -2 டி.வி.ஐ.சியில் சிறப்பு உதவியாளர்
கைத்தறி ஆய்வாளர் பொலிஸ் திணைக்களத்தின் புலனாய்வு பிரிவில்
சிறப்பு கிளை உதவியாளர்.
பால் உற்பத்தியில் கூட்டுறவு சங்கங்களின் மூத்த ஆய்வாளர் மற்றும் பால் மேம்பாடு
தொழிலாளர் உதவி ஆய்வாளர்
தணிக்கை உதவியாளர்
நெடுஞ்சாலைத் துறையில் கணக்கு கிளையில்.

குரூப் 2A சேவைகள் (நேர்முகத்தேர்வு இல்லாத பதவிகள்) (Group-II A)

கருவூல மற்றும் கணக்குத் துறையில் கணக்காளர்
ஜூனியர் கூட்டுறவு கணக்காய்வாளர்
செயலகத்தில் உதவியாளர் (சட்டம் மற்றும் நிதி தவிர)
இளைய தொழில்நுட்ப உதவியாளர், சிவில் சப்ளைஸ் துறை
தனிப்பட்ட எழுத்தர் (சட்டம் மற்றும் நிதித் துறை தவிர)
தனிப்பட்ட எழுத்தர் (சட்டத்துறை)
தனிப்பட்ட எழுத்தர் (நிதித்துறை)
தமிழ்நாடு பொது சேவையில் தனிப்பட்ட எழுத்தர் ஆணைக்குழு
தனிப்பட்ட எழுத்தர், தமிழ்நாடு மாநில திட்டமிடல் ஆணையம்
தமிழக சட்டசபையில் ஸ்டெனோ-டைப்பிஸ்ட் செயலக சேவை
உதவியாளர் பல்வேறு துறைகள்
செயலகத் துறையில் உதவி (நிதித்துறை)
தமிழ்நாடு பொது சேவை ஆணையத்தில் உதவியாளர்
தமிழக சட்டசபையில் கீழ் பிரிவு எழுத்தர், செயலகம் திட்டமிடல் இளைய உதவியாளர்
வரவேற்பாளர் (சிறு சேமிப்புத் துறை)
சட்டத்துறையில் உதவியாளர்
தமிழ்நாடு சட்டமன்ற சட்டசபை சேவையில் உதவியாளர்
ஒருங்கிணைந்த சிவில் சர்வீசஸ் தேர்வு 3

குரூப் 3 சேவைகள் (Group-III)
தீயணைப்பு நிலைய அதிகாரி

குரூப் 3A சேவைகள் (Group-III A)
கூட்டுறவு சங்கங்களின் ஜூனியர் இன்ஸ்பெக்டர்
தொழில்துறை கூட்டுறவு சங்கங்களின் உதவி மேற்பார்வையாளர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி (பயிற்சி பிரிவு) துறையில் கடை வைத்திருப்பவர்
கைத்தொழில் மற்றும் வணிகத் துறையில் ஸ்டோர்-கீப்பர், கிரேடு -2

குரூப் 4 சேவைகள் (Group-IV)
ஜூனியர் உதவியாளர் (பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு அல்லாத)
பில் கலெக்டர்
தட்டச்சு செய்பவர்
ஸ்டெனோ-டைப்பிஸ்ட், கிரேடு -3
கள ஆய்வாளர் 6. வரைவாளர்

குரூப் 5A சேவைகள் (Group-V A)

செயலகத்தில் உதவியாளர் (இடமாற்றம் மூலம் ஆட்சேர்ப்பு) (சட்டம் மற்றும் நிதித் துறை தவிர)

குரூப் 6 சேவைகள் (Group-VI)
வன பயிற்சியாளர்

குரூப் 7A சேவைகள் (Group-VII A)
நிர்வாக அதிகாரி, தரம் -1

குரூப் 7B சேவைகள் (Group-VII B)
நிர்வாக அதிகாரி, தரம் 3

குரூப் 8 சேவைகள் (Group-VIII)
நிர்வாக அதிகாரி, தரம் 4

இத்தனை தேர்வுகள் பற்றிய நம்மில் பலருக்கு முறையான வழிகாட்டல் இல்லாததால் நம்மில் பலர் TNPSC தேர்வுகளைப் பற்றி தெரிந்துகொள்ளாமல் இருந்து வருகிறோம். இதன் விபரப்படி நமது வெற்றிப்பாதையை உறுவாக்குவது நமது கடமை! வெற்றிபெறுவோம்! வாழ்த்துக்கள்!

# மீம்ஸ்

பிப்-14 நாடெங்கும் காதலர் தினம் சிறப்பாக கொண்டாடப்படுகிறது - செய்தி.







Single லா சைக்கிள் ல போறது என்னா சுகம்.

பிப்-14 உலகெங்கும் காதலர் தினம் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. - செய்தி







மசால் வடை,மசால் வடை தான்யா.




| | |
|---|---|
| வெயிலில் மலரும், காற்றில் உலரும். அது என்ன? | வியர்வை |
| காற்று இல்லாத கண்ணாடிக் கூண்டில் மஞ்சக் கோழி மயங்கி கிடக்குது அது என்ன? | முட்டை |
| காலையில் ஊதும் சங்கு, கறி சமைக்க உதவும் சங்கு அது என்ன? | சேவல் |
| அள்ளவும் முடியாது, கிள்ளவும் முடியாது. அது என்ன? | காற்று |
| குண்டு குள்ளனுக்கு குடுமி நிமிர்ந்தே இருக்கும் அவன் யார்? | கத்தரிக்காய் |
| அந்தரத்தில் தொங்குவது சொம்பும் தண்ணீரும் அது என்ன? | இளநீர் |



# ஜோக்ஸ்

1)"தலைவர் சரியான ஞான சூன்யம்ன்னு ஏன் சொல்றே?!"

" வறுமைக் கோட்டை கிழிச்சது யாருன்னு கேட்கிறாரே?!"

2) “நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வறுமைக் கோட்டை அழி ரப்பர் கொண்டு அழித்து விடுவோம் என்பதை..."


3)“தலைவரே! பட்ஜெட்டை பத்தி என்ன நினைக்கறீங்க?!”

“அதுல விழற துண்டை யாருக்குக் கொடுப்பாங்கன்னு நினைச்சுக்கிட்டு இருக்கேன்!"

4)“ டாக்டர் ஏன் ஆபரேஷன் தியேட்டர்ல ’லைட்ஸ் ஆ◦◦ப்’னு சொல்றாரு?!"

" இன்னைக்கு காலைல தான் அவருக்கு மேரேஜ் ஆச்சு. ’◦◦பர்ஸ்ட் நைட்’ ஞாபகத்துல சொல்லிட்டாரு போல!"

5)“டாக்டர் ஸ்டெத்தை கழுத்துல போட்டிருந்தா ஆபரேஷன் சக்சஸ். தலையிலே போட்டிருந்தா..."



" சொல்லாதீங்க சிஸ்டர். புரியுது... புரியுது!"

6)”ஜோசியரே! இந்தச் சட்டையை இனிமே போட வேணாம்னு ஏன் சொல்றீங்க?!"

" ’கட்டம்’ சரியில்லே தம்பி!"

7)“பாம்பைக் கண்டு பயந்து ஓடி வருகிறீர்களா மன்னா...பாம்பு எங்கே இருக்கிறது?!"

"பரமபதத்தில் அமைச்சரே!"

8)“அமைச்சரே! நல்ல விலைக்கு வந்தால் சொல்லுங்கள். அரண்மனையை விற்றுவிடலாம்..."

" அந்தப்புரம் மட்டும் தான் நல்ல விலைக்குப் போகும் போல் தெரிகிறது மன்னா!"

9)“நிலவில் வடை சுடும் பாட்டிக்கும் நிவாரணம் அளிப்போம் என்பதை...”

“தலைவர் எப்படி வாயில வடை சுடறார் பாத்தீங்களா?!"

10)“நாங்கள் ஆட்சிக்கு வந்தால் கானல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் கொண்டு வருவோம் என்பதை..."



# வாங்க சம்பாதிக்கலாம்

## தேசிய தகவல் மையத்தில் 243 சயின்டிஸ்ட் பணியிடங்கள்



தேசிய தகவல் மையத்தில் காலியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.
'சயின்டிஸ்ட்' பணியில் கம்ப்யூட்டர் சயின்ஸ் 168, எலக்ட்ரானிக்ஸ் கம்யூனிகேசன் 25, டேட்டா சயின்ஸ் 50 என மொத்தம் 243 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பி.இ., / பி.டெக்.,
வயது: 18–30 (31.3.2026ன் படி)
தேர்ச்சி முறை: GATE (2024 / 2025 / 2026) தேர்வு மதிப்பெண்
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லை ன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 800. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 24.4.2026
விவரங்களுக்கு: recruitment.nic.in

## ஆயுத தொழிற்சாலையில் வேலை




மஹாராஷ்டிராவின் பந்தராவில் உள்ள ஆயுத தொழிற்சாலையில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
'அப்ரென்டிஸ்' பிரிவில் எலக்ட்ரிக்கல் 15, எலக்ட்ரானிக்ஸ் 15, மெக்கானிக்கல் 10, கெமிக்கல் 10 என மொத்தம் 50 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: டிப்ளமோ
ஸ்டைபண்டு: மாதம் ரூ. 10,900
தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு
விண்ணப்பிக்கும் முறை: இணையதளத்தில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
The Chief General Manager, Ordnance Factory Bhandara (Unit of Munitions India Ltd.) At + Post- Jawaharnagar, Tah + Dist- Bhandara, Maharashtra - 441 906.
கடைசிநாள்: 11.4.2026
விவரங்களுக்கு: ddpdoo.gov.in

## மருத்துவமனையில் நர்ஸ் வாய்ப்பு




டாடா மெமோரியல் மருத்துவ மையத்தில் (டி.எம்.சி.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
நர்ஸ் 54, கன்சல்டன்ட் 28, சயின்டிபிக் ஆபிசர் 4, மெடிக்கல் பிசிஸ்ட் 4, டெக்னீசியன் 2 உட்பட மொத்தம் 96 இடங்கள் உள்ளன.
வயது, கல்வித்தகுதி: பிரிவு வாரியாக மாறுபடும்.
தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு.
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 300. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 10.4.2026
விவரங்களுக்கு: tmc.gov.in

## வங்கியில் மேனேஜராக விருப்பமா



பொதுத்துறையை சேர்ந்த பரோடா வங்கியில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
சீனியர் ரிலேசன்ஷிப் மேனேஜர் 70, வெல்த் மேனேஜர் 13, டெரிடரி ஹெட் 17, குரூப் ஹெட் 4 என மொத்தம் 104 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பட்டப்படிப்பு / டிப்ளமோ
வயது: 31–45 (1.3.2026ன் படி)
அனுபவம்: தொடர்புடைய பிரிவில் 3 - 10 ஆண்டு பணி.
தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு நேர்முகத்தேர்வு.
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 850. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 175
கடைசிநாள்: 16.4.2026
விவரங்களுக்கு: bankofbaroda.bank.in

## அழைக்கிறது உர நிறுவனம்



பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு உர நிறுவனத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
இன்ஜினியர் 17, மேனேஜர் 3, ஆபிசர் 3, சேப்டி ஆபிசர் 1 உட்பட மொத்தம் 25 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பி.இ., / பி.டெக்., / எம்.பி.ஏ., / சி.ஏ.,
வயது: 18 - 40, 18 - 48 (16.4.2026ன் படி)
தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 200. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 16.4.2026
விவரங்களுக்கு: bvfcl.com

## கடற்படையில் பணியிடங்கள்




கடற்படை கப்பல் பழுதுபார்க்கும் தளம், கடற்படை விமான தளத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
'அப்ரென்டிஸ்' பிரிவில் பிட்டர் 31, கம்ப்யூட்டர் ஆப்பரேட்டர் 21, எலக்ட்ரீசியன் 29, எலக்ட்ரானிக் மெக்கானிக் 18, இன்ஸ்ட்ருமென்ட் 15, வெல்டர் 14 உட்பட மொத்தம் 240 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: ஐ.டி.ஐ.,
வயது: 18–60 (1.6.2026ன் படி)
தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு, நேர்முகத்தேர்வு.
விண்ணப்பிக்கும் முறை: இணைய தளத்தில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
The Admiral Superintendent (for Officer- in-Charge ATS), Apprentices Training School, Naval Ship Repair Yard, Naval Base, Kochi - 682 004
கடைசிநாள்: 17.4.2026
விவரங்களுக்கு: rdsdekerala.dgt.gov.in

# பதற்றம் தணியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பங்குச் சந்தை எழுச்சி; நிஃப்டி 348, சென்செக்ஸ் 1,186.77 புள்ளிகள் உயர்வு!

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே நிலவி வரும் பதற்றங்கள் தணியத் தொடங்கியதற்கான அறிகுறிகளின் ஆதரவுடன், இந்தியப் பங்குச் சந்தை தனது இரண்டு நாள் சரிவுப் போக்கை முடித்து கொண்டு, புதிய வர்த்தகத் தொடரின் முதல் அமர்வை உயர்வுடன் நிறைவு செய்தன.

இந்திய பங்குச் சந்தையானது, புதிய நிதியாண்டின் (ஏப்ரல் 01), முதல் பல்வேறு துறைகளில், பரவலான கொள்முதல் நடவடிக்கைகளுக்கு மத்தியில், நிஃப்டி குறியீடு 22,900 புள்ளிகள் என்று உயர்ந்த நிலையில் தொடங்கி, வர்த்தக நேரத்தின் இடையில் லாபப் பதிவு இருந்த போதிலும், வலுவான நிலையில் வர்த்தகத்தை நிறைவு செய்தன.

வர்த்தக முடிவில், சென்செக்ஸ் குறியீடு 1,186.77 புள்ளிகள் உயர்ந்து 73,134.32 புள்ளிகளாகவும், நிஃப்டி குறியீடு 348 புள்ளிகள் உயர்ந்து 22,679.40 புள்ளிகளாக நிலைபெற்றது.

இன்று பங்குச் சந்தைகள் சிறப்பாகச் செயல்பட்டன. நிஃப்டி மிட்கேப் குறியீடு 2.2 சதவீதமும், ஸ்மால்-கேப் குறியீடு 3.3 சதவீதமும் உயர்ந்தன.

மும்பை பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் சந்தை மூலதனம், திங்கள்கிழமை பதிவான ரூ.412.41 லட்சம் கோடியிலிருந்து, சுமார் ரூ.10 லட்சம் கோடி உயர்ந்து ரூ.422.23 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது.

சென்செக்ஸில் ட்ரென்ட், இன்டர்குளோப் ஏவியேஷன், அதானி போர்ட்ஸ், பாரத் எலக்ட்ரானிக்ஸ், ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா மற்றும் எட்டர்னல் உள்ளிட்ட பங்குகள் உயர்ந்தும் மறுபுறம் என்டிபிசி, சன் பார்மா, பவர் கிரிட், அல்ட்ராடெக் சிமெண்ட் மற்றும் பார்தி ஏர்டெல் ஆகிய நிறுவனங்கள் பங்குகள் சரிந்தன.

நிஃப்டி-யில் இன்டர்குளோப் ஏவியேஷன், அதானி எண்டர்பிரைசஸ், ட்ரென்ட் மற்றும் பாரத் எலக்ட்ரானிக்ஸ் உள்ளிட்ட பங்குகள் உயர்ந்தும் மறுபுறம் டாக்டர் ரெட்டீஸ் லேப்ஸ், எச்.டி.எஃப்.சி. லைஃப், சிப்லா, என்.டி.பி.சி., சன் பார்மா ஆகிய பங்குகள் சரிந்தன.

மருந்துத் துறை 1% சரிந்த நிலையில், மற்ற அனைத்துத் துறைசார் குறியீடுகளும் ஏற்றத்துடன் வர்த்தகத்தை நிறைவு செய்தன. இதில் பாதுகாப்புத் துறை குறியீடு 5 சதவீதக்கும் அதிகமாகவும், மூலதனப் பொருட்கள், ஊடகம் மற்றும் பொதுத்துறை வங்கி குறியீடுகள் தலா 3 சதவீதம் உயர்ந்தன. அதே சமயம் ஆட்டோமொபைல், நுகர்வோர் பொருட்கள், தகவல் தொழில்நுட்பம், உலோகம், ரியல் எஸ்டேட், எப்எம்சிஜி, தொலைத்தொடர்பு மற்றும் தனியார் வங்கித் துறை குறியீடுகள் தலா 1 முதல் 2 சதவீதம் வரை உயர்ந்தன.

முன்னாள் நிர்வாகியான வில்லி வால்ஷ், புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இன்டர்குளோப் ஏவியேஷன் (இண்டிகோ) நிறுவனத்தின் பங்குகள் 6 சதவீதம் உயர்ந்தன. என்டிபிசி நிறுவனத்திடமிருந்து ரூ. 494.5 கோடி மதிப்பிலான ஆர்டரைப் பெற்றதன் விளைவாக பேஸ் டிஜிடெக் நிறுவனத்தின் பங்குகள் 10 சதவீதம் உயர்ந்தன. 2027 நிதியாண்டில் சுமார் 40 சதவீத வளர்ச்சியை எட்டும் என்று கணித்துள்ளதால், ஜாகில் ப்ரீபெய்ட் ஓஷன் சர்வீசஸ் நிறுவனத்தின் பங்குகள் 16 சதவீதம் உயர்ந்தன.

ஆசியச் சந்தைகளில், தென் கொரியாவின் முக்கியக் குறியீடான கோஸ்பி, ஜப்பானின் நிக்கி 225 குறியீடு, ஷாங்காயின் எஸ்எஸ்இ காம்போசிட் குறியீடு மற்றும் ஹாங்காங்கின் ஹாங் செங் ஆகிய குறியீடுகள் கணிசமாக உயர்தன.

கோஸ்பி குறியீடு 8.44 சதவீதம் உயர்ந்த நிலையில், நிக்கி 225 குறியீடு 5.24 சதவீதம் வரை ஏற்றம் கண்டது. இதனை தொடர்ந்து, ஐரோப்பியச் சந்தைகளும் உயர்ந்து வர்த்தகமானது.

தரவுகளின் அடிப்படையில், நேற்று (திங்கள்கிழமை) வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் 11,163.06 கோடி ரூபாய் மதிப்பிலான பங்குகளை விற்பனை செய்துள்ள நிலையில், உள்நாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் 14,894.72 கோடி ரூபாய் மதிப்பிலான பங்குகளை வாங்கியுள்ளனர்.

ப்ளூ ஸ்டார், என்.டி.பி.சி. லைஃப், சிப்லா, ஹேவெல்ஸ் இந்தியா, எஸ்பிஐ கார்டு மற்றும் ப்ளூ டார்ட் உள்ளிட்ட 200-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இன்று மும்பை பங்குச் சந்தில் 52 வாரம் இல்லாத அளவு குறைந்தபட்ச விலையை எட்டியது.

கச்சா எண்ணெயின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியும் சந்தையின் நம்பிக்கையை வெகுவாக வலுப்படுத்தியது. இதனை தொடர்ந்து, சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை 0.22 சதவீதம் சரிந்து பீப்பாய்க்கு ஒன்றுக்கு 103.7 அமெரிக்க டாலராக நிலைபெற்றது.





இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No
8122664699

# அபிதகுஜாம்பாள் குமரக்கோயில் புறப்பாடு





**திருவண்ணாமலை ஏப்.02:**
அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு திருக்கல்யாணம் உற்சவத்தில் அபித குஜாம் பாள் வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, தங்க ஆபரணங்களுடன், மங்கள வாத்தியங்கள் இசைக்க, அரோகரா அரோகரா என்று முழக்கமிட்டு அபிதகுஜாம்பாள் குமர கோவிலுக்கு புறப்பாடு. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அபித குஜாம்பாளை வேண்டி அருள் பெற்றனர்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# சென்னை கிரீம்ஸ் சாலையில் அமைந்துள்ள லலித் கலா அகாடமியில் தேசிய அளவிலான ஓவியப் போட்டி





**சென்னை, ஏப்.02:**
சென்னை சூளைமேடு பகுதியில் செயல்பட்டு வரும் தர்ஷினி கலைக்கூடத்தின் ஏற்பாட்டில், சென்னை கிரீம்ஸ் சாலையில் அமைந்துள்ள லலித் கலா அகாடமியில் தேசிய அளவிலான ஓவியப் போட்டி மற்றும் கண்காட்சி நடைபெற்று வருகிறது. இக்கண்காட்சியின் துவக்க விழா கடந்த மார்ச் 29 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முன்னாள் சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் ரகுபதி, லலித் கலா அகாடமியின் மண்டல செயலாளர் சோவன்குமார் உள்ளிட்ட பல்வேறு துறையைச் சேர்ந்த முக்கியப் பிரமுகர்கள் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். அவர்கள் தங்களது உரைகளில், கண்காட்சியில் இடம்பெற்றுள்ள ஓவியங்கள் மிகுந்த தரத்துடன் அமைந்துள்ளதாக பாராட்டி, ஓவியர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

பெரும் திரளான ஓவியர்களும், கலை ஆர்வலர்களும் கலந்து கொண்ட இந்த விழாவில், இறுதியாக நன்றியுரை ஆற்றிய ஓவியர் தர்மலிங்கம், கண்காட்சியின் வெற்றிக்கு அனைத்து ஓவியர்களின் ஒத்துழைப்பே காரணம் எனக் குறிப்பிட்டு நன்றியைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சர்வதேச பிரிண்ட் மேக்கர் ஆர்.எம். பழனியப்பன், தேசிய விருது பெற்ற ஓவியர் விஸ்வம், கலை இயக்குனர் ஜே.கே., உலகப் புகழ் பெற்ற ஓவியர் ஆதிமூலத்தின் புதல்வரும் தேசிய விருது பெற்றவருமான ஓவியர் ஆபரசித்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு ஓவியங்களை பார்வையிட்டு மாணவர்களுடன் கலந்துரையாடினர்.

இந்தக் கண்காட்சியில் இந்தியாவின் 21 மாநிலங்களைச் சேர்ந்த 260 ஓவியர்களின் 350 கலைப் படைப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஓவியமும் தனித்துவமான சிந்தனை, வண்ணப் பயன்படுத்தும் திறன் மற்றும் கலை நுணுக்கத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. கண்காட்சியை ஏற்பாடு செய்த ஓவியர் தர்மலிங்கம், சென்னை ஓவியக் கல்லூரியில் முதுகலை பட்டம் பெற்றவர். மேலும் தற்பொழுது நொய்யல் ஆற்றங்கரை கிராமிய தெய்வங்கள் என்ற பெயரில் முனைவர் பட்ட ஆய்வு மாணவரும் ஆவார்.

இவர் பல திறமையான ஓவியர்களை உருவாக்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும், தமிழக அரசின் சிறந்த கலையாசிரியர் விருது மற்றும் மாநில அளவிலான கலை விருதுகளை பெற்றுள்ளார்.

அகில இந்திய அளவில் பல விருதுகளையும் பெற்றுள்ளார்.தேசிய இளைஞர் வார விழாவை கடந்த 21 ஆண்டுகளாக தொடர்ந்து நடத்தி வரும் அவர், பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த ஓவியர்களை ஒன்றிணைக்கும் பணியிலும் ஈடுபட்டு வருகிறார்.

ஓவியப் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 81 ஓவியர்களுக்கு ரொக்கப் பரிசுகள் மற்றும் விருதுகள், வரும் ஏப்ரல் 4 ஆம் தேதி நடைபெறும் விழாவில் வழங்கப்பட உள்ளன. ஏப்ரல் 4 வரை நடைபெறும் இந்த தேசிய அளவிலான ஓவியக் கண்காட்சியை கலை ஆர்வலர்கள் நேரில் வந்து பார்வையிடலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# கள்ளழகர் திருக்கல்யாண உத்ஸவம்




கள்ளழகர் திருக்கல்யாண உத்ஸவம் மூன்றாம் திருநாள். அச்சோ ஒருவர் அழகியவா! முத்து பாண்டியன் கொண்டை கிரிடத்துடன் செங்கோல் ஏந்தி திவ்ய அலங்கார சேவையில் ஸ்ரீசுந்தரராஜ பெருமாள் உபயநாச்சிமார்கள் மடிசாரில் சேவை சாதித்தனர்.

# பசுமலை பௌர்ணமி கிரிவலம் மகிமை






**விழுப்புரம், ஏப்.02:**
விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் மேல் ஒலக்கூர் குன்றுகள் தோறும் வீற்றிருந்து பக்கர்களுக்கு அருள்பாலிக்கும் முருகப்பெருமான் மகிமை நிறைந்ததும் சித்தர்களும் ஞானிகளும் வணங்கும் புண்ணிய திருத்தலம் பசுமலை என்று அழைக்கப்படும் கோகிரி சுப்பரமணியசுவாமிகள் திருக்கோவில் பிரமோற்சவ விழா கடந்தபங்குனி மாதம் 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் அன்றுமுதல் தொடங்கி 29.03.2026 நாயிற்றுகிழமை திருக்கல்யாணம் நிகழ்ச்சியும் அதனைத்தொடர்ந்து 30.03.2026 திங்கட்கிழமை மாலை திருத்தேரோட்டமும் பதினொன்று நாட்கள் வெகுவிமர்சையாகநடைபெற்றது நிறைவு நாளான புதன்கிழமை பிரதி மாத பௌர்ணமியும் வருவதால் கிரிவலம் வரும் பக்தர்கள் ஏராளமானோர் நேர்த்திகடன் செலுத்தி முருகன் அருளை தரிசித்தனர் வருகை தந்த பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

**அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

# ஸ்ரீ ரங்கநாதப் பெருமாளுக்கு தீர்த்தவாரி வைபவம்...!





**வந்தவாசி, ஏப் 02:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ ரங்கநாயகி தாயார் சமேத ரங்கநாதப் பெருமாள் கோவிலில் நேற்று பிரம்மோற்சவ விழாவில் தீர்த்தவாரி வைபவம் நடைபெற்றது. இந்த வைபவத்தில் சக்கரத்தாழ்வாருக்கு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது. மேலும் உற்சவ மூர்த்திகள் மேளதாளத்துடன் வீதியுலா வந்தனர். முன்னதாக, பெருமாள் போர்வை களையும் வைபவம் நடைபெற்றது. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

# பொதுத் தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை குறித்து ஓட்டு வில்லைகளை ஆட்டோக்களில் ஒட்டி விழிப்புணர்வு



திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி வட்டாட்சியர் அலுவலகம் அருகில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஒட்டுவில்லைகளை ஆட்டோக்களில் ஒட்டி பொதுமக்களுக்கு தேர்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தினார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# கஜா குழு நண்பர்கள் சார்பில் கிரிவலம் செல்லும் பக்தர்களுக்கு தண்ணீர் பாட்டில் வழங்கும் நிகழ்ச்சி





**திருவண்ணாமலை, ஏப்.02:**
திருவண்ணாமலை பங்குனி மாத பௌர்ணமியை முன்னிட்டு கிரிவலம் செல்லும் பக்தர்களுக்கு மன்னார்குடியை தலைமையிடமாகக் கொண்ட கஜா நண்பர்கள் குழு சார்பாக 37 -வது மாதமாக திருவண்ணாமலை பிரிவு கஜா நண்பர்கள் குழு மூலம் கிரிவலம் செல்லும் பக்தர்களுக்கு தாகம் தனிய தண்ணீர் பாட்டில்கள் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# ஆண்டாள் திருக்கல்யாணம் உற்சவத்தை முன்னிட்டு புஷ்ப பல்லாக்கு



ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கல்யாணம் உற்சவத்தை முன்னிட்டு எட்டாம் திருநாள் புஷ்ப பல்லாக்கு புறப்பாடு.

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிரசாரம்





திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் ஜனாப்.எஸ் எஸ். பி. பாருக் அவர்களை ஆதரித்து மாண்புமிகு தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஏணி சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்ய பரப்புரை ஆற்றினார்




# ராசிபுரத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தேர்தல் பணிமனை திறப்பு 40 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி: கே.ஆர்.என். இராஜேஸ்குமார் நம்பிக்கை

**ராசிபுரம், ஏப்.02:**
ராசிபுரம் பழைய பேருந்து நிலையம் அருகே தேர்தல் பணிமனை திறப்பு விழா விமர்சையாக நடைபெற்ற நிலையில், கூட்டணி வேட்பாளர் மா. மதிவேந்தன் வேட்புமனு தாக்கல் செய்ய உள்ளார்; 40 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவோம் என திமுக கிழக்கு மாவட்ட செயலாளர் கே.ஆர். என். இராஜேஸ்குமார் தெரிவித்தார்.



நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் பழைய பேருந்து நிலையம் அரசமரத்து விநாயகர் கோவில் அருகில், நாமக்கல் கிழக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தேர்தல் பணிமனை ( தலைமை தேர்தல் அலுவலகம்) திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவில், ராசிபுரம் (தனி) தொகுதி வேட்பாளர் மா. மதிவேந்தன் முன்னிலையில் நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் கே.ஆர். என். இராஜேஸ்குமார் தேர்தல் பணிமனையை திறந்து வைத்தனர்.

நிகழ்ச்சியில் நிகழ்ச்சியில் தொகுதி பார்வையாளர் நன்னீயூர் ராஜேந்திரன், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், தொகுதி பொறுப்பாளர்கள், ஊராட்சி பொறுப்பாளர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், வார்டு கழக செயலாளர்கள்,நகர்மன்ற உறுப்பினர்கள், மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியை சார்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கே.ஆர்.என். இராஜேஸ்குமார், “நாளை வேட்பாளர் மா. மதிவேந்தன் வேட்புமனு தாக்கல் செய்கிறார். தொடர்ந்து ஆத்தூர் சாலையில் உள்ள தனியார் மண்டபத்தில் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற உள்ளது. இதில் கூட்டணியினர் திரளாக பங்கேற்க வேண்டும்” என்று தெரிவித்தார்.

மேலும், இந்த தேர்தலில் நாமக்கல், ராசிபுரம், சேந்தமங்கலம் தொகுதி வேட்பாளர்கள் 40 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவார்கள் என்ற நம்பிக்கையையும் அவர் வெளியிட்டார்.

# பொது தேர்தல் 2026 கல்லூரி மாணவிகளுக்கு விழிப்புணர்வு



திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி வட்டம் ஆகாரம் எஸ்.எஸ். எஸ். மகளிர் கல்லூரியில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெற உள்ளது முன்னிட்டு 100 % வாக்குப்பதிவு திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் வாக்குப்பதிவு இலக்கை அடையும் நோக்கத்தில் கல்லூரி மாணவிகளுக்கு தேர்தல் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# சுற்றுலா: ஏழைகளின் ஊட்டி ஏற்காட்டில் அவசியம் காணவேண்டிய இடங்கள்!






ஏற்காடு மலை சேலத்தின் அருகே கிழக்கு தொடர்ச்சி மலை பகுதியில் உள்ள ஒரு மலைவாச தலமாகும். இது சேர்வராயன் மலைத்தொடரின் ஒரு பகுதியாக உள்ளது. கடல் மட்டத்திலிருந்து 1515 மீட்டர் சுமார் 5000 அடி அடி உயரத்தில் உள்ளது. பசுமையான மலைகள் காப்பி தோட்டங்கள் இதமான சூழ்நிலை என பிரமிக்க வைக்கிறது இது சிறந்த சுற்றுலா தலமாக செயல்பட்டு வருகிறது. இவன் பரப்பளவு 4382 சதுர கிலோமீட்டர். ஏழைகளின் ஊட்டி என பெயர் பெற்றுள்ளது.

சேலத்தில் இருந்து ஏற்காடு செல்ல பேருந்து வசதிகள் உள்ளது.

இங்கு கோடை விழாவின்போது மலர் கண்காட்சி நாய் கண்காட்சி படகு போட்டி ஆகியன சிறப்பாக நடைபெறும் இதை காண்பதற்காக ஏராளமான சுற்றுலா பயணிகள் இங்கு வருகை தருவார்கள். இங்குள்ள ஜப்பானிய பூங்கா பார்க்கவேண்டிய ஒரு இடமாகும். இங்கு பல வகையான தாவர கன்றுகள் விற்பனைக்கு கிடைக்கும் மணிப்பாறை என்ற இடத்தில் கல்லால் மோதினால் மணி சத்தம் கேட்கும். இதை பார்ப்பதற்கு வினோதமாக இருக்கும்.

ஏற்காட்டில் இருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் கிள்ளியூர் நீர்வீழ்ச்சி உள்ளது. இந்த இடத்தில் குளிப்பதற்கு சுகமாக இருக்கும். ஏராளமான சுற்றுலா பயணிகள் இந்த கிள்ளியூர் நீர்வீழ்ச்சியில் குளித்து மகிழ்ச்சி அடைகின்றனர். இங்குள்ள பாறைகள் அழகாக இயற்கையாக அமைந்துள்ளது. சேர்வராயன் கோவில் பெருமாள் குகை கோவில் சிறப்பாக உள்ளது.

இதை சுற்றி மான் பூங்கா பொழுதுபோக்கு பூங்கா அண்ணா பூங்கா மற்றும் படகு சவாரி உள்ளது. படகு சவாரி செய்ய காலை 9 மணி முதல் 5 மணி வரை செயல்படும் எட்டு நபர்களுக்கு 320 நான்கு நபர்களுக்கு 110 ரூபாய் வசூல் செய்கிறார்கள். இதை ஒட்டி பக்கோடா காட்சி முனை உள்ளது. ஏற்காடு கிழக்கு முனையில் அமைந்துள்ளது பிரமிடு பாய்ண்ட். இந்த இடத்தில் ராமர் கோவில் உள்ளது. இங்கிருந்து அயோத்தியா பட்டணம் முழுவதையும் அருமையாக பார்க்கலாம். இவை ஏற்காட்டில் இருந்து 5 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

ஏற்காட்டில் இருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் ராஜராஜேஸ்வரி அம்மன் கோவில் உள்ளது. இங்குள்ள பட்டுப் பண்ணை கண்ணை கவரும் விதத்தில் உள்ளது. மல்பெரி செடிகள் அதிகம் காணப்படுகிறது. இந்தப் பூங்காவில் பல வண்ணங்களில் ரோஜா மலர்களை காணலாம். தமிழக கேரள எல்லைப் பகுதியில் இருப்பதால் ஏராளமான சுற்றுலா பயணிகள் இங்கு வருகை தருகின்றனர். ஏற்காடு ஏரி சீமாட்டி இருக்கை பக்கோடா, டாப் சிகரம் காவேரி சிகரம் போன்றவை பார்க்க வேண்டிய இடங்கள்.

சேலம் பஸ் நிலையத்தில் இருந்து 32 கிலோமீட்டர் தொலைவில் ஏற்காடு உள்ளது. அக்காலத்தில் பிரிட்டிஷ்காரர்கள் இந்த இடங்களில் கோடை காலத்தில் குடும்பத்துடன் வசித்து வந்தனர். பார்க்க வேண்டிய இடங்கள் என எடுத்துக்கொண்டால் மரகதை ஏரி லேடிஸ் சீட் பக்கோடா பாயிண்ட் சேர்வராயன் கோவில் நல்லூர் அருவி கிள்ளியூர் அருவி கரடி முனை காட்சி லலிதா திரிபுரசுந்தரி அம்மன் கோவில் முதலியவற்றையும் சுற்றி வரலாம்.

இங்கு கோடை விழாவின்போது மலர் கண்காட்சி நாய் கண்காட்சி, மூலிகை கண்காட்சி படகு பட்டி ஆகியவை சிறப்பாக நடைபெறும்.

இதனைக்காண பல்லாயிரக்கணக்கான மக்கள் கோடைகாலத்தில் இங்கு வருகை தருவார்கள். இங்கு தங்குவதற்கு ஏற்றபடி விடுதிகளும் உணவகங்களும் உள்ளன. ஊட்டிக்கு போனால் அதிக செலவாகும் ஆனால் ஏற்காடு போனால் செலவு கம்மியாகும்

எனவே இதனை ஏழைகளின் ஊட்டி என அழைக்கின்றனர்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### நெய்வேலி நிலக்கரி கழகத்தில் சுகாதார ஆய்வாளர்



பணி: சுகாதார ஆய்வாளர்: 16 இடங்கள் (பொது-7, பொருளாதார பிற்பட்டோர்-1, ஒபிசி-5, எஸ்சி-3).

சம்பளம்: ரூ.38,000. வயது: 01.02.2026 தேதியின்படி 30க்குள்.

தகுதி: பிளஸ் 2 தேர்ச்சியுடன் சேனிட்டரி இன்ஸ்பெக்டர்/ஹெல்த் இன்ஸ்பெக்டர் பிரிவில் டிப்ளமோ தேர்ச்சியுடன் குறைந்தபட்சம் ஒரு வருடம் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

கட்டணம்: பொது/ஒபிசி/பொருளாதார பிற்பட்டோர் பிரிவினருக்கு ரூ.450/-. எஸ்சி/எஸ்டி/முன்னாள் ராணுவத்தினர்/மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.200/-. இதை ஆன்லைனில் செலுத்த வேண்டும்.

அதிகபட்ச வயது வரம்பில் எஸ்சி/எஸ்டி யினருக்கு 5 ஆண்டுகளும், ஒபிசியினருக்கு 3 ஆண்டுகளும் தளர்வு அளிக்கப்படும்.

எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வு மற்றும் சான்றிதழ் சரிபார்த்தல் மூலம் விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். எழுத்துத் தேர்வில் பொது அறிவு, லாஜிக்கல் ரீசனிங், நியூமரிக்கல் ஏபிலிட்டி மற்றும் ஹெல்த் இன்ஸ்பெக்டர் பாடப்பிரிவுகளிலிருந்து கேள்விகள் கேட்கப்படும்.

https://www.nlcindia.in என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பிக்க கடைசி நாள்: 02.04.2026.

# சென்னையில் 2,205 துப்பாக்கிகள் காவல் துறையிடம் ஒப்படைப்பு



**சென்னை, ஏப்.2:**

தேர்தலை முன்னிட்டு, உரிமம் பெற்று வைத்துள்ள 2,205 பேர், தங்களது துப்பாக்கிகளை போலீஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.


பாதுகாப்பு கருதி தொழில் அதிபர்கள், அரசியல் பிரமுகர்கள், திரை பிரபலங்கள் உள்பட பல்வேறு தரப்பினர் போலீஸாரின் அனுமதி பெற்று துப்பாக்கிகள் வைத்திருப்பார்கள்.

அதன்படி, சென்னையில் 2,735 பேர் வைத்துள்ளனர். இவர்களில் 500 பேர் விளையாட்டு மற்றும் பாதுகாப்பு சேவை உள்பட பல்வேறு காரணங்களுக்காக வைத்துள்ளனர்.

தேர்தல் நேரங்களில் உரிமம் பெற்று வைத்துள்ளவர்கள் அந்த துப்பாக்கிகளை காவல்துறையிடம் ஒப்படைக்க வேண்டும். ஆனால், விளையாட்டு மற்றும் சேவை துறையில் வைத்திருப்பவர்கள் துப்பாக்கிகளை ஒப்படைக்க தேவையில்லை.

இதற்கிடையே, 2,205 பேர் துப்பாக்கிகளை ஒப்படைத்த நிலையில் 30 பேர் தங்களிடமுள்ள துப்பாக்கிகளை உடனடியாக ஒப்படைக்க வேண்டும்என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# க்யூஎஸ் உலகப் பல்கலைக்கழகத் தரவரிசையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்



**கோவை, ஏப்.2:**

க்யூஎஸ் உலகப் பல்கலைக்கழகத் தரவரிசையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளது.

பிரிட்டிஷ் நிறுவனமான Quacquarelli Symonds வெளியிடும் க்யூஎஸ் உலகப் பல்கலைக்கழகத் தரவரிசைகள், உலகளாவிய அளவில் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் செயல்திறனை மதிப்பீடு செய்யும் முக்கியமான தரவரிசையாகும். 2026-ஆம் ஆண்டுக்கான தரவரிசையில் மொத்தம் 6,273 கல்வி நிறுவனங்கள் பங்கேற்றன. அவற்றில் 1,908 நிறுவனங்கள் 55 கல்வித் துறைகளில் அதிகாரப்பூர்வமாக தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளன.

வேளாண்மை மற்றும் வனவியல் துறைசார் தரவரிசையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2023-ஆம் ஆண்டு 401420 இடத்திலிருந்து 2026-ஆம் ஆண்டு 201250 இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இந்த முன்னேற்றம், கற்பித்தல், ஆராய்ச்சி, விரிவாக்கப் பணிகள், வேளாண் வணிகம் மற்றும் திறந்த மற்றும் தொலைதூரக் கல்வி (ஓடிஎல்) போன்ற துறைகளில் பல்கலைக் கழகம் மேற்கொண்ட செயல்பாடுகளின் விளை வாகக் கருதப்படுகிறது.

பல்கலைக்கழக விஞ்ஞானிகளின் முயற்சியால், விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் 948 பயிர் வகைகள் மற்றும் கலப்பினங்கள், 171 பண்ணை இயந்திரங்கள் மற்றும் கருவிகள், மேலும் 1,500-க்கும் மேற்பட்ட மேலாண்மைத் தொழில்நுட்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த சாதனைக்காக பேராசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்களை துணைவேந்தர் பாராட்டியதுடன், எதிர்காலத்தில் மேலும் உயர்ந்த தரவரிசையை அடைய தொடர்ந்து முயற்சி மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

# எழும்பூர் ரெயில் நிலையத்தில் பணிகள் நிறைவு.. பயணிகளுக்கு வெளியான மகிழ்ச்சியான செய்தி..!

**சென்னை, ஏப்.2:**

சென்னையின் முக்கிய ரெயில் நிலையமாக எழும்பூர் ரெயில் நிலையம் உள்ளது. அதிகரித்து வரும் பயணிகளின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், ரெயில் நிலையத்தில் ரூ.734.91 கோடி மதிப்பீட்டில் கடந்த 2023-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் மறுசீரமைப்பு பணிகள் தொடங்கி நடந்து வருகிறது.

அதன்படி, ரெயில் நிலைய வளாகத்தில் பன்னடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைக்கும் பணி, பார்சல் அலுவலகம், நுழைவுவாயில், ரெயில்வே ஊழியர்கள் அறை உள்பட பல்வேறு பணிகள் தொடர்ச்சியாக நடந்து வருகிறது. இதேபோல, எக்ஸ்பிரஸ் ரெயில் நடைமேடை மறுசீரமைப்பு பணிகளும், மின்சார ரெயில் நடைமேடை 10, 11 ஆகியவற்றிலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த பணிகளை குறிப்பிட்ட தேதிகளுக்குள் முடிக்கும் வகையில், 600-க்கும் மேற்பட்ட பணியாளர்கள் சுழற்சி முறையில் இரவு பகலாகப் பணியமர்த்தப்பட்டனர். தற்போது, தண்டவாளங்கள் மறுசீரமைப்பு, நடைமேடையில் கூடுதல் வசதி போன்ற பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று முடிந்துள்ளது.

இந்தநிலையில், ரெயில் இயக்க தொடங்குவதற்கான அனைத்து இறுதிகட்ட பணிகளும் நேற்று விறுவிறுப்பாக நடைபெற்றது. அதாவது, நடைமேடையை சுத்தம் செய்தல், நகரும் படிக்கட்டு இயக்கி பார்ப்பது, தண்டவாளங்களுக்கு கிரீஸ் தடவும் பணி, பயணிகள் அறிவிப்பு பலகை அமைப்பது, மின் அழுத்த வயர்களை சரிசெய்தல் உள்பட அனைத்து பணிகளும் மும்மரமாக மேற்கொள்ளப்பட்டது.

இதற்கிடையே, எழும்பூர் ரெயில் நிலைய பழைய நடைமேடையில் இருந்து விரைவில் மின்சார ரெயில்கள் இயக்கப்பட இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து, ரெயில்வே அதிகாரிகள் கூறுகையில், "எழும் பூர் ரெயில் நிலையத்தில் நடைமேடை 10, 11-ல் இருந்து மின்சார ரெயில்கள் இயக்கும் வகையிலான அனைத்து முக்கிய பணிகளும் நிறைவடைந்துவிட்டது. சிறு சிறு பணிகள் மட்டும் தற்போது நடைபெற்று வருகிறது. அந்த பணிகள் விரைவில் முடிவடையும். (புதன்கிழமை) முதல் 5-ந்தேதிக்குள் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் இந்த நடைமேடையில் இருந்து புறநகர் மின்சார ரெயில் சேவைகளை தொடங்கலாம். ரெயில்களை இயக்க தொடங்கிய பின்பும், இதில் மேற்கொள்ள வேண்டிய எஞ்சிய பணிகள் தொடர்ச்சியாக நடைபெறும். இதனால் பயணிகள் மற்றும் ரெயில் சேவைக்கு எந்த இடையூறும் இருக்காது" என்று தெரிவித்தார்.

# தேர்தல் நடத்தை விதிமுறைகளால் சந்தையில் மாடுகள் விற்பனை குறைந்தது - 50 சதவீத வர்த்தகம் பாதிப்பு

**கோவை, ஏப். 2:**

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் வாரந்தோறும் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் மாட்டு சந்தை நடைபெறும். சந்தைக்கு கோவை மாவட்டம் மற்றும் வெளிமாவட்டங்கள், வெளிமாநிலங்களில் இருந்து மாடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. இங்கிருந்து பெரும்பாலும் கேரளத்துக்கு மாடுகள் இறைச்சி தேவைக்கு கொண்டு செல்லப்படுகிறது. இதை தவிர உள்ளூர் விவசாயிகளும் விவசாய தேவைக்கு மாடுகளை வாங்கி செல்கின்றனர். இந்த நிலையில் வருகிற 3-ந்தேதி புனித வெள்ளி கடைப்பிடிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு புனித வெள்ளியையொட்டி மாடுகள் வரத்து அதிகரித்து காணப்பட்டது. மேலும் விற்பனையும் அதிகரித்தது. தற்போது தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருப்பதால், ரூ.50 ஆயிரத்திற்கு மேல் கொண்டு வரும் வியாபாரிகளிடம் ரொக்கம் பறிமுதல் செய்யப்படுகிறது. இதனால் மாடுகள் விற்பனை குறைந்ததோடு. வர்த்தகமும் பாதிக்கப்பட்டு உள்ளது. இதுகுறித்து வியாபாரிகள் கூறியதாவது:-

பொள்ளாச்சி சந்தைக்கு கடந்த ஆண்டு புனித வெள்ளி பண்டிகையின் போது 4 ஆயிரத்து 500 மாடுகள் வரை விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. வர்த்தகமும் ரூ.10 கோடி வரை நடந்தது. இந்த ஆண்டு சட்டமன்ற தேர்தல் காரணமாக தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருப்பதால், வியாபாரிகள் பணம் கொண்டு வருவதில் சிரமம் ஏற்பட்டு உள்ளது. இதனால் மாடுகள் வரத்து குறைந்து, 3 ஆயிரம் மாடுகள் தான் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. இதனால் வர்த்தகம் ரூ.5 கோடிக்கு தான் நடைபெற்றது. மேலும் எக்சப் ரக மாடுகள் கர்நாடகா மாநிலத்தில் இருந்து கொண்டு வரப்படும். இதில் இனப்பெருக்க ரக காளை மாடு அதிகபட்சமாக ரூ.2 லட்சத்து 10 ஆயிரத்துக்கு விற்பனை ஆனது. இந்த மாடு 900 கிலோ எடை இருக்கும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

# 1000 பேருந்து நிறுத்த நிழற்குடைகளில் 100% வாக்களிப்பு குறித்து விழிப்புணர்வு

**சென்னை, ஏப்.2:**

சென்னை மாவட்டத்தில் 13 எல்இடி தொலைக் காட்சிகளுடன் கூடிய தேர்தல் விழிப்புணர்வு கண்காட்சிப் பேருந்து, வீடுகள் தோறும் திடக் கழிவுகள் சேகரிக்கும் பேட்டரியால் இயங்கக் கூடிய மூன்று சக்கர வாகனங்கள், காம்பாக்டர் பெரிய வாகனங்கள் மற்றும் அரசு பேருந்துகளில் 'நம்ம தங்கா' எனும் காகம் சின்னத்தை மையப்படுத்தி தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள், எனது வாக்கு எனது உரிமை என்ற சுயபுகைப்பட பதாகை, கடற்கரையில் மணற் சிற்பம், பொம்மலாட்ட நிகழ்ச்சி, பாரா க்ளைடிங், மனிதச் சங்கிலி, ரங்கோலி, நாட்டுப்புற கலைஞர்கள் மூலம் விழிப்புணர்வு கரகாட்டம், கானா பாடல்கள், கும்மிபாட்டு, தப்பாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகள், திடீர் குழு நடனம் மற்றும் தேர்தல் தொடர்பான விநாடி வினா, கையெழுத்து இயக்கம் உள்ளிட்ட பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 1,000 பேருந்து நிறுத்த நிழற்குடைகளில் 'நம்ம தங்கா' எனும் காகம் சின்னத்தை மையப்படுத்தி தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழுள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

# தஞ்சாவூரில் கடன் வழங்குவதாக ரூ.30 லட்சம் மோசடி: நிதி நிறுவன பணியாளர்கள் டி.ஐ.ஜி. அலுவலகத்தில் புகார்



**தஞ்சாவூர், ஏப்.2:**

தஞ்சாவூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் செயல்படும் தனியார் நிதி நிறுவனம் கடன் வழங்குவதாக வாடிக்கையாளர்களையும், வேலை பார்த்தவர்களையும் ஏமாற்றி விட்டதாக அங்கு பணியாற்றிய பணியாளர்கள் ராஜா கிட்டப்பா என்பவரது தலைமையில் தஞ்சாவூர் சரக டி.ஐ.ஜி.அலுவலகத்தில் புகார் மனு அளித்தனர்.

அம் மனுவில் கூறியிருப்பதாவது: தஞ்சாவூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் தனியார் நிதி நிறுவனம் பொதுமக்களுக்கு தனிநபர் கடன் ரூ.30 ஆயிரம் வழங்குவதாக அறிவித்தனர். இதை 18 தவணையாக மாதந்தோறும் செலுத்த வேண்டுமெனவும், உறுப்பினர் கட்டணம் ரூ. 500/= செலுத்த வேண்டும் எனவும் அறிவித்திருந்தது. இதற்காக ஆதார், பான் அட்டைகள் உள்ளிட்ட வற்றை வாங்கி நிதி நிறுவனத்துக்கு கொடுத்தோம். ரூ.30 லட்சம் ரொக்கம்: மாவட்டத்தில் கும்பகோணம், மாரியம்மன் கோயில், செங்கிப்பட்டி, திருக்காட்டுப்பள்ளி என பல இடங்களில் செயல்பட்ட இந்த நிதி நிறுவனம் சார்பில் 6 ஆயிரம் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு ரூ.30 லட்சம் ரொக்கத்தைப் பெற்று நிதி நிறுவனத்திடம் வழங்கினோம். நிதி நிறுவனம் கூறியபடி கடன் தொகை தரவில்லை. பணம் கொடுத்தவர்கள் நாள்தோறும் நிறுவனங்களுக்கு வந்து எங்களை மிரட்டி ரொக்கம் மற்றும் ஆதார் உள்ளிட்ட ஆவணங்களைக் கேட்டு நெருக்கடி கொடுத்து வருகின்றனர்.

ரொக்கத்தைப் பெற்றுக்கொண்ட நிதி நிறுவன உரிமையாளர்களை நாங்கள் தொடர்புகொள்ள முடியவில்லை. இதேபோல, 100-க்கும் அதிகமான பணியாளர்களுக்கு 2 மாதங்களாக ஊதியம் தரவில்லை. எனவே, மோசடியாக பெறப்பட்ட தொகையை மீட்டுத் தர வேண்டும். மேலும், பொதுமக்களின் ஆவணங்களைக் கைப்பேசி செயலியில் பதிவேற்றம் செய்துள்ளதால், அதை வேறு முறைகேடுகளுக்கு பயன்படுத்தக்கூடும் என்பதால், நிதி நிறுவனத்தினர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

## விளையாட்டு செய்திகள்

### “சிஎஸ்கேவில் இருந்து வெளியேறியது உணர்ச்சிகரமான தருணம்” - மனம் திறக்கும் ரவீந்திர ஜடேஜா

**குவஹாத்தி, ஏப்.2:**

ஐபிஎல் தொடரில் நேற்று முன்தினம் குவாஹாட்டியில் நடைபெற்ற ஆட்டத்தில் 2008-ம் ஆண்டு சாம்பியனான ராஜஸ்தான் ராயல்ஸ் அணி 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் 5 முறை சாம்பியனான சிஎஸ்கேவை வீழ்த்தியது. இந்த ஆட்டத்தில் முதலில் பேட் செய்த சிஎஸ்கே அணி 127 ரன்களுக்கு ஆட்டமிழந்தது.

சிஎஸ்கே அணியில் இருந்து டிரேடிங் முறையில் ராஜஸ்தான் அணிக்கு சென்றிருந்த ஆல்ரவுண்டரான ரவீந்திர ஜடேஜா முக்கியமான கட்டத்தில் ஒரே ஓவரில் சர்ஃபராஸ் கான், ஷிவம் துபே ஆகியோரது விக்கெட்களை வீழ்த்தியிருந்தார். போட்டி முடிவடைந்ததும் ரவீந்திர ஜடேஜா கூறியதாவது: 12 முதல் 13 ஆண்டுகள் விளையாடிய சிஎஸ்கே போன்ற ஒரு அணியை விட்டு வெளியேறுவது ஆரம்பத்தில் சற்று கடினமாக இருந்தது. அது மிகவும் உணர்ச்சிகரமான தருணம். ஆனால் இது போன்ற மாற்றங்களும் பயணத்தின் ஒரு பகுதிதான் என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன். ஒரு நல்ல விஷயம் என்னவென்றால், நான் முதன்முதலில் ஐபிஎல் கோப்பையை வென்ற அதே அணிக்கு இப்போது திரும்பியுள்ளேன். அந்த நினைவுகள் எப்போதும் என்னுடனேயே இருக்கும். யு-19 உலகக் கோப்பைக்குப் பிறகு, எனது ஐபிஎல் வாழ்க்கையை ராஜஸ்தான் அணியில்தான் தொடங்கினேன், எனது முதல் சீசனிலேயே கோப்பையையும் வென்றேன். அந்த நினைவுகளையும் நேர்மறையான எண்ணங்களையும் சுமந்து வந்துள்ளேன். இந்த புதிய குழுவுடன் என்னால் முடிந்தவரை கற்றுக்கொள்வதும், எனது அனுபவத்தை அணியுடன் பகிர்ந்து கொள்வதுமே எனது லட்சியம். இவ்வாறு ரவீந்திர ஜடேஜா கூறினார்.

### ஐபிஎல் 2026: குஜராத்தை வீழ்த்தி பஞ்சாப் கிங்ஸ் த்ரில் வெற்றி

**சண்டிகர், ஏப்.2:**

ஐபிஎல் 2026 தொடரின் நான்காவது லீக் ஆட்டத்தில், குஜராத் டைட்டன்ஸ் அணியை 3 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி பஞ்சாப் கிங்ஸ் அணி தனது முதல் வெற்றியைப் பதிவு செய்தது. முல்லன்பூரில் உள்ள மகாராஜா யாதவீந்திர சிங் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில், டாஸ் வென்ற பஞ்சாப் கேப்டன் ஸ்ரேயாஸ் ஐயர் முதலில் பந்துவீச்சைத் தேர்வு செய்தார். முதலில் பேட்டிங் செய்த குஜராத் அணிக்கு கேப்டன் சுப்மன் கில் (39 ரன்கள்) மற்றும் ஜோஸ் பட்லர் (38 ரன்கள்) ஜோடி ஓரளவு சிறப்பான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது.

இருப்பினும், பஞ்சாப் அணியின் விஜய் குமார் வைஷாக் துல்லியமாகப் பந்துவீசி 3 விக்கெட்டுகளை வீழ்த்தி குஜராத்தின் ரன் வேகத்தைக் கட்டுப்படுத்தினார். இதனால் 20 ஓவர்கள் முடிவில் குஜராத் அணி 6 விக்கெட் இழப்பிற்கு 162 ரன்கள் மட்டுமே எடுத்தது. யுஸ்வேந்திர சஹால் 2 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார்.

பஞ்சாப் அணி 19.1 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 165 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. குஜராத் தரப்பில் பிரசித் கிருஷ்ணா 3 விக்கெட்டுகளை வீழ்த்தியும் அந்த அணியால் வெற்றியைத் தடுக்க முடியவில்லை. அறிமுகப் போட்டியிலேயே அரைசதம் அடித்து அணியை வெற்றி பெறச் செய்த கூப்பர் கோனொலி ஆட்டநாயகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# சுங்கச்சாவடிகளில் கட்டண உயர்வால் விழி பிதுங்கும் அரசு போக்குவரத்து கழகம்

**சென்னை, ஏப்.2:**

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் சார்பில் இயக்கப்படும் டவுன் மற்றும் வெளியூர் பஸ்களும் இந்த சுங்க கட்டண உயர்வால் பாதிப்புக்கு ஆளாகியுள்ளன. அரசு போக்குவரத்து கழகத்தின் மதுரை மண்டலத்தை பொறுத்தமட்டில், மதுரை, விருதுநகர், திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் இருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், கேரள மாநிலத்திற்கும் பஸ்கள் இயக்கப்படுகின்றன. அதாவது, சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட டவுன் மற்றும் வெளியூர் பஸ்கள் தினமும் இயக்கப்படுகின்றன. இதில் டவுன் பஸ்கள் மட்டும் 1,200 உள்ளன. இந்த பஸ்கள் தினமும் சுமார் 37 சுங்கச்சாவடிகளை கடந்து செல்கின்றன. அதாவது தமிழகத்தில் உள்ள 72 சுங்கச்சாவடிகளில் 37 சுங்கச்சாவடிகளை மதுரை மண்டல அரசு பஸ்கள் தினமும் கடந்து செல்கின்றன.

மதுரை மாவட்டத்தை பொறுத்தமட்டில், கப்பலூர், பாரபத்தி, கத்தப்பட்டி, கொடைரோடு ஆகிய இடங்களில் சுங்கச்சாவடிகள் உள்ளன. இவற்றை வெளியூர் பஸ்களைவிட டவுன் பஸ்கள் அதிகளவு கடந்து செல்கின்றன. இதில், கப்பலூர் சுங்கச்சாவடியை மட்டும் தினமும் நூற்றுக்கணக்கான பஸ்கள் கடக்கின்றன. இதில் 20 பஸ்கள் மகளிர் இலவச பயணத்துக்கான பஸ்களாகும்.

அதன்படி, ஒரு நாளைக்கு கப்பலூர் சுங்கச்சாவடியை மட்டும் சுமார் 1,108 முறை பஸ்கள் கடந்து செல்கின்றன. இவற்றுக்கு ஒருமுறை கட்டணமாக ரூ.175 வசூலிக்கப்பட்டு வந்த நிலையில், ரூ.180 வசூலிக்கப்பட உள்ளது.

ஒரு தடவை மதுரையில் இருந்து திருமங்கலத்துக்கு பஸ் இயக்கப்பட்டால் ரூ.8,500 வருமானமாக கிடைக்கும். அதில் ரூ.1,200 சுங்கக்கட்டணமாக செலுத்த வேண்டும். இது தவிர பண்டிகை மற்றும் விடுமுறை காலங்களில் கூடுதல் பஸ்கள் இயக்கப்படும் போது, சுங்கக்கட்டணம் கூடுதலாக செலுத்த வேண்டும். மதுரை மண்டலத்தில் சுங்கக்கட்டணமாக மட்டும் ரூ.3 கோடி வரை செலவிடப்படுகிறது. இதில் கப்பலூர் சுங்கச் சாவடியில் மட்டும் ரூ.1 கோடி கட்டணமாக செலுத்தப்படுகிறது.

தற்போது சுங்கக்கட்டணம் சுமையாக வந்துள்ளது. கப்பலூர் சுங்கச்சாவடி விதிகளை மீறி திருமங்கலம் நகராட்சி எல்லைக்குள் அமைக்கப்பட்டுள்ளதாக வழக்கு தொடரப்பட்டது. ஆனால் எந்த பலனும் இல்லை.

சுமார் 2% கி.மீ. தூர 4 வழிச்சாலையில் சர்வீஸ் ரோட்டை மட்டும் பயன்படுத்தி வரும் டவுண் பஸ்களுக்கு ஒவ்வொரு முறையும் சுங்கக்கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. இதில் ஆண்டுதோறும் கட்டண உயர்வு செய்யப்படுகிறது.

இந்த நிலை தொடர்ந்தால் பொதுப்போக்குவரத்து சவாலாக அமைந்துவிடும். எனவே, சுங்கச்சாவடிகளில் அரசு டவுன் பஸ்களுக்கு கட்டண விலக்கு அல்லது கட்டண சலுகை வழங்க வேண்டும் என்றனர்.

# தூத்துக்குடியில் வளர்ப்பு நாய் கடித்ததில் பிளஸ்-1 மாணவி உயிரிழப்பு

**தூத்துக்குடி, ஏப்.2:**





தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் அருகேயுள்ள புதியம்புத்தூரைச் சேர்ந்தவர் செல்வகுமார். ரெடிமேட் பின்னலாடைத் தொழில் செய்து வரும் இவருக்கு, ஜோதி என்ற மனைவியும், செல்வசுஹாசினி (வயது 16) என்ற மகளும் உள்ளனர். செல்வசுஹாசினி தூத்துக்குடியில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் பிளஸ்-1 (11-ம் வகுப்பு) படித்து வந்தார்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு, வீட்டில் வளர்க்கும் நாயுடன் செல்வசுஹாசினி விளையாடிக்கொண்டிருந்தார். அப்போது அந்த நாயின் நகம் பட்டதில் மாணவிக்குக் காயம் (கீறல்) ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. நாய் கடித்த அல்லது கீறல் ஏற்பட்ட உடனே முறையான மருத்துவ ஆலோசனை பெறாமலும், 'ரேபிஸ்' தடுப்பூசி செலுத்திக்கொள்ளாமலும் மாணவி இருந்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த 28-ம் தேதி செல்வசுஹாசினிக்கு திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டது. உடனடியாக அவர் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், நாய் கடித்ததன் மூலம் விஷம் (RABIES) உடல் முழுவதும் பரவி இருப்பதை உறுதி செய்தனர்.

இதனைத் தொடர்ந்து மேல் சிகிச்சைக்காக அவர் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டும் பலனின்றி, நேற்று முன்தினம் செல்வசுஹாசினி உயிரிழந்தார்.

மாணவியின் உயிரிழப்பால் அதிர்ச்சியடைந்த பெற்றோர்கள், உடலைப் பெற்றுக்கொள்ள முன்வரவில்லை எனக் கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து, மதுரை தத்தனேரி மயானத்தில் அரசு சார்பிலேயே மாணவியின் உடல் முறைப்படி தகனம் செய்யப்பட்டது. இந்த சம்பவம் புதியம்புத்தூர் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# விஜய்க்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படுவது இல்லை: : உள்துறை அமைச்சகத்திடம் தவெக புகார்

**சென்னை, ஏப்.2:**



நடிகரும் தவெக தலைவருமான விஜய் பெரம்பூர் தொகுதியில் போட்டியிடுவதையொட்டி, வியாசர்பாடி தேர்தல் அலுவலகத்தில் கடந்த 30 ஆம் தேதி தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்தார். தொடர்ந்து பெரம்பூர் பகுதியில் தனது பிரசாரத்தைத் தொடங்கி மக்களிடையே வாக்கு சேகரித்தார்.

பெரம்பூரைத் தொடர்ந்து கொளத்தூர் பகுதியில் தவெக தலைவர் விஜய் பிரசாரம் மேற்கொண்டார். ஆனால், பிரசாரத்தை திடீரென நிறுத்திவிட்டு விஜய் வீடு திரும்பினார். தவெக தலைவர் விஜய் பிரசாரம் மேற்கொள்ளும் பகுதிகளில் விஜய்யின் வாகனத்திற்கு போதிய காவல்துறை பாதுகாப்பு இல்லை என்றும் போக்குவரத்தைச் சரி செய்யாமல் இருப்பதால் பிரசாரம் முடங்கும் சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் தவெக குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக தமிழக தலைமைதேர்தல் அதிகாரியை சந்தித்தும் தவெக நிர்வாகிகள் புகாரளித்த நிலையில் மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு தவெக நிர்வாகி சிடிஆர் நிர்மல் குமார் கடிதம் எழுதியுள்ளார். அதில், விஜய்க்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படுவது இல்லை என்றும் ஒய் பிரிவு பாதுகாப்பில் உள்ள விஜயிக்கு போதிய பாதுகாப்பு வழங்க அறிவுறுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## க்ரைம் கார்னர்

### கிரைண்டர் ஆப் மூலம் மிரட்டி பணம் பறிப்பு: 2 பேர் குண்டர் சட்டத்தில் கைது

**நெல்லை, ஏப்.2:**

திருநெல்வேலி மாநகரம், பேட்டையைச் சேர்ந்த அந்தோனி என்பவரின் மகன் சக்திசுரேஷ் (வயது 23), முத்துமாலை என்பவரின் மகன் இசக்கிராஜா(19) ஆகிய 2 பேரும் நெல்லை மாநகரப் பகுதியில் “கிரைண்டர் ஆப்” மூலம் மிரட்டி பணம் பறித்த வழக்குகளில் சம்பந்தப்பட்டு பொது ஒழுங்கு பராமரிப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் செயலில் ஈடுபட்டு வந்தனர். இதனையடுத்து திருநெல்வேலி மாநகர போலீஸ் கமிஷனரின் உத்தரவுப்படி நேற்று மேற்சொன்ன 2 பேரும் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் தடுப்புக்காவலில் அடைக்கப்பட்டனர்.

### சொத்து பிரச்சினையில் தம்பியை தாக்கி கொலை முயற்சி; அண்ணன் கைது

**நெல்லை, ஏப்.2:**

திருநெல்வேலி மாநகரம் பாளையம்கோட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியை சேர்ந்த முத்துராமசந்திரன் (வயது 46) என்பவருக்கும், அவரது சகோதரர் மணிகண்டன்(47) என்பவருக்கும் இடையே உள்ள சொத்து பிரச்சினையில் முன் பகை இருந்து வந்தது.

இதன் காரணமாக மணிகண்டன், முத்துராமசந்திரனை அவதூறு வார்த்தைகளால் பேசி, அச்சுறுத்தி, தாக்கி, கொலை செய்ய முயற்சி செய்துள்ளார். இதுகுறித்து முத்துராமசந்திரன் கொடுத்த புகாரின் பேரில் பாளையம்கோட்டை காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, மணிகண்டனை போலீசார் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்.

### நெல்லையில் தடை செய்த புகையிலை பொருட்கள் வைத்திருந்தவர் கைது

**நெல்லை, ஏப்.2:**

திருநெல்வேலி மாநகரம் சந்திப்பு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் போதை பொருட்கள் தடுப்பு பணியில் காவல் துறையினர் ரோந்து சென்றனர். அப்போது சந்திப்பு பகுதியில் உள்ள ஒரு தனியார் மெடிக்கல் அருகில் சென்று கொண்டிருந்த சிந்துபூந்துறையை சேர்ந்த பூமணிசேட் (வயது 42) என்பவரை பிடித்து போலீசார் சோதனை செய்தனர். அதில் அவரிடமிருந்து அரசால் தடை செய்யப்பட்ட உயிருக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய சுமார் 7 கிலோ 875 கிராம் எடையுடைய புகையிலை பொருட்களை பறிமுதல் செய்து, சந்திப்பு காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, மேற்சொன்ன நபரை போலீசார் கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

### கல்வி உதவி தொகை என்ற பெயரில் ரூ.99 ஆயிரம் மோசடி: டெல்லியில் 3 பேர் கைது

**திருநெல்வேலி, ஏப்.2:**

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரிடம், தொலைபேசியில் தொடர்பு கொண்ட அடையாளம் தெரியாத நபர்கள், அவரது மகளுக்கு கல்வி உதவி தொகை வத்துள்ளது என ஆசை வார்த்தைகள் கூறி, ஏமாற்றி நம்ப வைத்து, அவரது வங்கி கணக்கு எண் மற்றும் PIN நம்பரின் விவரங்களை பெற்றுள்ளனர். பின்னர் அவருக்கு QR CODE ஒன்றை அனுப்பி அதை ஸ்கேன் செய்யுமாறு கூறி, அவரது வங்கி கணக்கிலிருந்து ரூ.99 ஆயிரத்து 743 பணத்தை ஏமாற்றி மோசடி செய்துள்ளனர். மேற்சொன்ன மோசடி செயல் தொடர்பாக, பாதிக்கப்பட்ட நபர் திருநெல்வேலி மாவட்ட சைபர் கிரைம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் பேரில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணை மேற்கொண்டு, சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. பிரசண்ணகுமார் உத்தரவிட்டார். அதன் அடிப்படையில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில், வங்கி பரிவர்த்தனை தரவுகள் ஆய்வு செய்யப்பட்டு, மோசடியில் ஈடுபட்ட நபர்கள் டெல்லியில் இருப்பது கண்டறியப்பட்டது. அதன் பேரில் சைபர் கிரைம் போலீஸ் தனிப்படை, டெல்லி சென்று, குற்றவாளிகளான ராஜீ , ரிஷி , ராகுல் ஆகிய 3 பேரையும் கைது செய்து உரிய சட்ட நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

## வணிகச் செய்திகள்

### உலகின் டாப் 100 பட்டியலில் 5 இந்திய விமான நிலையங்கள்

**புதுடெல்லி, ஏப்.2:**

சர்வதேச விமானப் போக்குவரத்து தரவரிசை நிறுவனமான ‘ஸ்கைட்ராக்ஸ்’ 2026-ம் ஆண்டுக்கான உலகின் சிறந்த விமான நிலையங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. அதில் இந்தியாவைச் சேர்ந்த 5 விமான நிலையங்கள் உலகின் டாப்-100 பட்டியலில் இடம்பிடித்து சாதனை படைத்துள்ளன.

தலைநகர் டெல்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம், கடந்த ஆண்டை விட 4 இடங்கள் முன்னேறி 28-வது இடத்தைப் பிடித்துள்ளது. மேலும் இது, ‘இந்தியா மற்றும் தெற்காசியாவின் சிறந்த விமான நிலையம்’ என்ற விருதையும் தட்டிச் சென்றுள்ளது. அடுத்தபடியாக, பெங்களூரு கெம்பேகவுடா விமான நிலையம் 41-வது இடத்தை பிடித்துள்ளது. இதைத் தொடர்ந்து 3-வது ஆண்டாக ‘இந்தியா மற்றும் தெற்காசியாவின் சிறந்த பிராந்திய விமான நிலையம்’ என்ற சிறப்பையும் இது பெற்றுள்ளது. கோவா மனோகர் சர்வதேச விமான நிலையம் 64-வது இடத்திலும், மும்பை சத்ரபதி சிவாஜி மகராஜ் விமான நிலையம் 66-வது இடத்திலும் உள்ளன. கோவா மற்றும் மும்பை விமான நிலையங்கள் கடந்த ஆண்டை விட தரவரிசையில் முன்னேற்றம் கண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இந்த பட்டியலில் சிங்கப்பூரின் சாங்கி விமான நிலையம் மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளது. 2000-க்குப் பிறகு சாங்கி விமான நிலையம் இந்தச் சிறப்பைப் பெறுவது இது 14-வது முறையாகும்.

# உலகின் முன்னணி கல்வி நிறுவனமாக மீண்டும் நாளந்தா: குடியரசுத் தலைவர் முர்மு நம்பிக்கை

புதுடெல்லி, ஏப்.2:

உலக அளவில் முன்னணி கல்வி நிறுவனமான நாளந்தா பல்கலைக்கழகம் மீண்டும் உருவாகும் என்று குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பிகார் மாநிலம் நாளந்தா மாவட்டம் ராஜ்கிர் பகுதியில் உள்ள நாளந்தா பல்கலைக்கழகப் பட்டமளிப்பு நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு செவ்வாய்க்கிழமை கலந்துகொண்டு மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:




நிகழாண்டு நாளந்தா பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற மாணவர்களில் பாதிக்கும் அதிகமானோர் 30-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது மகிழ்ச்சியளிக்கிறது.

பண்டைய நாளந்தா பல்கலைக்கழகம் சுமார் 8 நூற்றாண்டுகளாக மாபெரும் அறிவு மையமாக விளங்கியது. அதன் வீழ்ச்சியானது இந்தியாவுக்கு மட்டுமின்றி, ஒட்டுமொத்த உலகுக்கும் பேரிழப்பாக அமைந்தது.

தற்போது இந்தப் பல்கலைக்கழகம் புத்துயிர் பெற்றுள்ளது, அதன் மரபை நவீனச் சூழலில் மீட்டெடுப்பதற்கான தேசிய மற்றும் சர்வதேச அர்ப்பணிப்பின் அடையாளமாகும். உலகம் பல சிக்கலான சவால்களை சந்தித்து வருகிறது. அதேவேளையில் கருணைமிக்க, சுதந்திரமான, எதையும் ஆராய்ந்து வலுவாக முடிவு எடுப்பதற்கான சிந்தனையும் தேவைப்படுகிறது. இந்தச் சூழலில் உலக அளவில் முன்னணி கல்வி நிறுவனமான நாளந்தா பல்கலைக்கழகம் மீண்டும் உருவாகும் என்ற நம்பிக்கை உள்ளது. அதே நேரத்தில், இந்தப் பல்கலைக்கழக முன்னேற்றத்தின் பலன்கள், பிகார் சமுதாயத்தையும் சென்றடைய வேண்டும் என்று தெரிவித்தார்.

## 11 முக்கிய கனிம வள பகுதிகளுக்கான ஏலம் ரத்து: மத்திய அரசு அறிவிப்பு

புதுடெல்லி, ஏப்.2:

மத்திய சுரங்க அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், '5 கனிம வள பகுதிகளை ஏலத்தில் எடுப்பதற்கு விண்ணப்பங்கள் பெறப்படவில்லை. மேலும் 5 பகுதிகளுக்கு மூன்றுக்கும் குறைவான நிறுவனங்களே ஏல விண்ணப்பத்தை சமர்ப்பித்தன. எனவே, 10 கனிம வள பகுதிகளுக்கான ஏலம் ரத்து செய்யப்படுகிறது. இத்துடன் மேற்கு வங்கத்தில் உள்ள பேகுவில் அரிய கனிம வள பகுதிக்கான ஏலமும் ரத்து செய்யப்படுகிறது' எனத் தெரிவிக்கப்பட்டது. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் ஆந்திரம், சத்தீஸ்கர், கர்நாடகம், ஜார்க்கண்ட், மகாராஷ்டிரம், தெலங்கானா உள்ளிட்ட 13 மாநிலங்களில் 23 கனிம வள பகுதிகளுக்கான 6-ஆம் சுற்று ஏல நடைமுறையை சுரங்க அமைச்சகம் தொடங்கியது. இந்தப் பகுதிகளில் லித்தியம், கோபால்ட், அரிய கனிமங்கள், நியோபியம், டான்டலம், வனேடியம் உள்ளிட்ட கனிமங்கள் உள்ளன. முன்னதாக, 46 கனிம வள பகுதிகளுக்கான ஏல நடைமுறை நிறைவடைந்தது. முந்தைய சுற்றுகளிலும் பல்வேறு கனிம வள பகுதிகளுக்கான ஏலம் ரத்து செய்யப்பட்டது.மத்திய இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் சமீபத்தில் ஒரு கேள்விக்கு அளித்த பதிலில், "சிவில் சர்வீஸ் முதல்நிலை தேர்வுக்கு பிறகு, அதற்கான தற்காலிக விடைக் குறிப்பை யுபிஎஸ்சி, தனது இணையதளத்தில் வெளியிடும். உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு இணங்க இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த புதிய நடைமுறை, 2026-ம் ஆண்டு நடைபெறும் சிவில் சர்வீஸ் முதல்நிலை தேர்வில் இருந்து தொடங்கும்" என்றார்.

## ரத்த வங்கிகளின் செயல்பாடு: தேசிய அளவில் கண்காணிக்கத் திட்டம்

புதுடெல்லி, ஏப்.2:

நாட்டில் உள்ள அனைத்து ரத்த வங்கிகளும், தங்கள் கையிருப்பில் உள்ள ரத்த அலகுகள் மற்றும் ரத்த கூறுகளை, 'இ ரக்த்கோஷ்' இணையதளத்தில் பதிவு செய்வதை மத்திய அரசு கட்டாயமாக்கி உள்ளது.

இந்தியாவில் உள்ள அனைத்து ரத்த வங்கிகள், சேமிப்பு நிலையங்களைக் கண்காணித்து ஒழுங்கு முறைப்படுத்துவதற்கான ஒழுங்குமுறை கூட்டம், மத்திய சுகாதார அமைச்சகத்தின் சார்பில் அண்மையில் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளைச் சுட்டிக்காட்டி, அனைத்து மாநில அரசுகளுக்கும் மத்திய சுகாதார துறை அமைச்சகம் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. அதில் கூறியிருப்பதாவது:

மாநிலத்தில் உள்ள ரத்த வங்கிகள் செயல்பாடுகளில் வெளிப்படை தன்மை இருப்பது உறுதி செய்ய வேண்டும். இருப்பில் உள்ள ரத்த அளவுகளின் விவரங்களைத் துல்லியமாக அறிந்து கொள்வதற்கும், உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.அதன்படி, மாநில அளவிலான சுகாதார அதிகாரிகள், அங்கீகாரம் பெற்ற அனைத்து ரத்த வங்கிகளையும், மத்திய அரசின், 'இ ரக்த்கோஷ்' என்ற இணையதளத்தில் பதிவு செய்வதை உறுதி செய்ய வேண்டும். குறிப்பாக, ரத்த அலகுகள் கையிருப்பு மட்டுமல்லாது, ரத்த கூறுகளின் இருப்புகளையும் உடனுக்குடன் பதிவு செய்வது கட்டாயம். இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் உரிய அறிவுறுத்தல் வழங்க வேண்டும். இதன் வாயிலாக, மருத்துவ சிகிச்சைகளுக்குப் பயன்படுத்தப்படும் ரத்தம், ஆக்கபூர்வமாக உபயோகப்படுத்தப்படுகிா என்பதை உறுதி செய்ய முடியும். மேலும், அவசர நேர ரத்த தேவைகளினால், நோயாளிகளையும் காப்பாற்ற முடியும் .

## 2026-27-ஆம் ஆண்டுக்கான வருமான வரி தாக்கல் படிவங்கள் வெளியீடு- தனிநபர்கள் தாக்கல் செய்ய ஜூலை 31 கடைசி

புதுடெல்லி, ஏப்.2:







சிறு மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான படிவம் 1 முதல் 4 வரையிலான வருமான வரிக் கணக்கு தாக்கல் படிவங்கள் திங்கள்கிழமை அறிவிக்கை செய்யப்பட்ட நிலையில், புதுப்பிக்கப்பட்ட வருமான வரி தாக்கல் செய்வதற்கான படிவங்கள் 2, 3, 5, 6 மற்றும் 7 வரையிலான படிவங்கள் செவ்வாய்க்கிழமை அறிவிக்கை செய்யப்பட்டன.

அதன்படி, தனிநபர்களும், வர்த்தகர்கள் மற்றும் பிற துறை சார்ந்தவர்கள் 2025-26-ஆண்டில் ஈட்டிய வருவாய்க்கான கணக்கைத் தாக்கல் செய்யத் தொடங்கலாம் என வருமான வரித் துறை தெரிவித்துள்ளது. தனிநபர்கள் மற்றும் தங்களின் கணக்கை தணிக்கை செய்யத் தேவையில்லாதவர்களும் வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்ய ஜூலை 31 கடைசி நாளாகும். ஆண்டு வருவாய் ரூ. 50 லட்சம் வரை உள்ள இந்தியாவில் வசிக்கும் தனி நபர்கள் படிவம் 1-ஐ (சஹஜ்) தாக்கல் செய்யலாம். இவர்கள் ஊதியம், ஒரு குடியிருப்பு, பிற வளங்கள் (வட்டி) மற்றும் ஆண்டுக்கு ரூ. 5,000 வரையிலான வேளாண் வருமானம் ஆகியவற்றின் மூலம் வருவாய் ஈட்டுபவர்களாக இருக்க வேண்டும். தொழில் மற்றும் பணிசார் சேவைகள் மூலம் ஆண்டுக்கு ரூ. 50 லட்சம் வரை வருவாய் ஈட்டும் தனிநபர்கள், ஹிந்து கூட்டுக் குடும்பங்கள் மற்றும் நிறுவனர்கள் படிவம் -4-ஐ (சுகம்) தாக்கல் செய்யலாம்.

வர்த்தகம் மூலம் கிடைக்கும் லாபம் மற்றும் ஆதாயங்களில் இருந்து அல்லாமல், மூலதன ஆதாயங்களிலிருந்து வருவாய் ஈட்டும் தனி நபர்கள் மற்றும் ஹிந்து கூட்டுக் குடும்பங்கள் படிவம் 2-ஐ தாக்கல் செய்ய வேண்டும். தனி உரிமையுடைய வர்த்தகம் அல்லது தொழில் மூலம் வருவாய் ஈட்டும் தனி நபர்கள் மற்றும் ஹிந்து கூட்டுக் குடும்பங்கள் படிவம் 3-ஐ தாக்கல் செய்ய வேண்டும். நிறுவனங்கள், வரையறுக்கப்பட்ட பொறுப்புகளுடன் கூடிய வர்த்தக பங்குதாரர்கள், கூட்டுறவு சங்கங்கள் படிவம் 5-ஐ தாக்கல் செய்ய வேண்டும். நிறுவனச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் படிவம் 6, அறக்கட்டளைகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் படிவம் 7-ஐ தாக்கல் செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கேரள சட்டமன்றத் தேர்தலில் முதல்முறை வாக்காளர்களுக்கு 'அல்வா'

திருவனந்தபுரம், ஏப்.2:





கேரளாவில் ஏப்ரல் 9ந் தேதி நடைபெறும் சட்டமன்றத் தேர்தலில் முதல் முறையாக வாக்களிக்கும் வாக்காளர்களுக்கு, தேர்தல் ஆணையத்தின் சார்பில் 'அல்வா' வழங்கப்பட உள்ளது.

கேரள மாநிலத்தில் சட்டமன்ற தேர்தல்களில் இளைஞர்களின் பங்கேற்பை ஊக்குவிக்கும் வகையில், 'வாக்கு இனிமையாக்கும் கேரளப் பிரச்சாரம்' என்ற சிறப்பு இயக்கத்தை கேரளா மாநிலத்தின் தலைமைத் தேர்தல் அதிகாரி (சிஇஓ) ரத்தன் யு கேல்கர் அறிவித்துள்ளார்.

இந்த உத்தரவின்படி, இளைஞர்களின் வாக்களிப்பு விகிதத்தை அதிகரிக்கும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, மாவட்டங்கள் முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட வாக்குச்சாவடிகளில் முதல் முறை வாக்களிப்பவர்களுக்கு பிரத்யேக பிராண்ட் அல்வா விநியோகிக்கப்படும். இந்த முன்னெடுப்பிற்காக வாக்குச்சாவடிகளை அடையாளம் காணும் மாவட்ட தேர்தல் அலுவலர்களின் அலுவலகங்களுக்கு 200 அல்வா பாக்கெட்டுகள் விநியோகிக்கப்படும் என்று அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்கள், முதல் முறை வாக்களிப்பவர்களைச் சரிபார்ப்பதற்கும், நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடிகளில் அல்வா பொட்டலங்கள் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்வதற்கும் பொறுப்பாவார்கள். விநியோகச் செயல்முறையானது தேர்தல் நடைமுறைகளுக்கு இடையூறு விளைவிக்கக் கூடாது என்றும், தேவைப்பட்டால் வட்டார விடுதலை அதிகாரிகளுக்கு உதவுவதற்காகக் கூடுதல் தன்னார்வலர்கள் பணியமர்த்தப்படலாம் என்றும் அந்த உத்தரவு மேலும் வலியுறுத்தியுள்ளது. பொது விழிப்புணர்வு மற்றும் அறிக்கையிடும் நோக்கங்களுக்காக, அல்வா விநியோகத்தை சுருக்கமாக புகைப்படம் அல்லது வீடியோ மூலம் ஆவணப்படுத்துவதை உறுதி செய்யுமாறு மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த உத்தரவில் மேலும் கூறப்பட்டுள்ளது. இளைஞர்கள் தேர்தலில் அதிகமாக வாக்களிக்க வேண்டும் என்பதற்காகவே இந்த நடவடிக்கை செயல்படுத்தப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது

# குஜராத்தில் ரூ.3,300 கோடியில் செமி கண்டக்டர் ஆலை: பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்

அகமதாபாத், ஏப்.2:

குஜராத் மாநிலம் அகமதாபாத் அருகே உள்ள சனந்த் ஜிஐடிசி வளாகத்தில், கெய்ன்ஸ் செமிகான் நிறுவனத்தின் ரூ.3,300 கோடி மதிப்பிலான செமி கண்டக்டர் உற்பத்தி ஆலையை பிரதமர் நரேந்திர மோடி நேற்று தொடங்கி வைத்தார்.



இந்திய செமி கண்டக்டர் திட்டத்தின் (ஐஎஸ்எம்) கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களில், மைக்ரான் டெக்னாலஜி நிறுவனத்துக்கு அடுத்தபடியாக வணிகரீதியிலான உற்பத்தியைத் தொடங்கும் 2-வது பெரிய ஆலை இதுவாகும். இது, இந்தியாவின் உற்பத்தித் திறனை வலுப்படுத்துவதோடு, சிப் உற்பத்தியில் நமது நாட்டை உலகளவில் முக்கிய மையமாக மாற்றுவதற்கான இலக்கை அடைவதை துரிதமாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து பிரதமர் மோடி தனது எக்ஸ் சமூக வலைதளத்தில் கூறியுள்ளதாவது: கெய்ன்ஸ் செமிகான் ஆலை திறப்பு, தற்சார்பு இந்தியா நோக்கிய நமது பயணத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது. இது நாட்டில் வலுவான செமி கண்டக்டர் உற்பத்திச் சூழலை உருவாக்குவதில் ஒரு மைல்கல்லாகும். இந்த ஆலையில் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. இது இந்தியாவின் செமி கண்டக்டர் கட்டமைப்பு எந்த வேகத்தில் வளர்ந்து வருகிறது என்பதற்கான சான்றாக அமைந்துள்ளது. இவ்வாறு பிரதமர் தெரிவித்துள்ளார். குஜராத்தில் ஆலையைத் தொடங்கி வைத்த பிறகு, அங்கு பணியாற்றும் பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களுடன் பிரதமர் கலந்துரையாடினார்.

தினமும் 63 லட்சம் யூனிட்: இந்த ஆலையில் முதற்கட்டமாக மேம்படுத்தப்பட்ட 'இன்டெலிஜென்ட் பவர் மாட்யூல்' (ஐபிஎம்) உற்பத்தி செய்யப்படவுள்ளது. இவை வாகனங்கள் மற்றும் தொழில்துறை பயன்பாடுகளுக்குத் தேவையான முக்கியமான பாகங்களாகும். ஒவ்வொரு மாட்யூலிலும் 17 சிப்கள் இருக்கும். இவை கலிபோர்னியாவைச் சேர்ந்த ஆல்பா மற்றும் ஒமேகா செமி கண்டக்டர் நிறுவனத்துக்கு விநியோகிக்கப்பட உள்ளன. இந்த ஆலையின் அனைத்துக் கட்டப் பணிகளும் நிறைவடையும் போது, நாளொன்றுக்கு 6.33 மில்லியன், அதாவது சுமார் 63 லட்சம் யூனிட்களை உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக விளங்கும்.

## கர்நாடக எம்.பி., எம்எல்ஏ.க்களுக்கு ஐபிஎல் டிக்கெட் இலவசம்

பெங்களூரு, ஏப்.2:

கர்நாடக சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவரும் மூத்த பாஜக தலைவருமான ஆர்.அசோகா பேசும்போது, "ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகளை சின்னசாமி மைதானத்தில் நடத்துவதற்கு நாம் அனுமதி தருகிறோம்.

இலவசமாக நீர், மின்சாரம், போலீஸ் பாதுகாப்பு கொடுக்கிறோம். ஆனால், கிரிக்கெட் போட்டிகளை பார்ப்பதற்கு நமக்கு இலவசமாக டிக்கெட் தருவதில்லை. ஆயிரக்கணக்கில் கட்டணம் வசூலிக்கிறார்கள்" என கூறினார். இந்நிலையில் கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமார் கூறுகையில், "ஆர்சிபி அணியின் ஐபிஎல் போட்டிகளுக்கு தலா 3 டிக்கெட்கள் எம்பி, எம்எல்ஏ.க்களுக்கு வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது" என்றார்.

## ஏழுமலையானை தரிசித்த ஆளுநர் அப்துல் நசீர்

திருமலை, ஏப்.2:

ஆந்திர ஆளுநராக அப்துல் நசீர் பொறுப்பேற்ற பிறகு அடிக்கடி திருப்பதி வந்து செல்கிறார். அப்போது திருப்பதி ஏழுமலையான் கோயில் மற்றும் திருச்சானூர் பத்மாவதி தாயார் கோயிலுக்கு சென்று பக்தியுடன் தரிசனம் செய்வதை வழக்கமாக கொண்டுள்ளார்.

இந்நிலையில் அவர் ஏழுமலையானை தரிசனம் செய்ய நேற்று காலையில் தனது குடும்பத்தாருடன் கோயிலுக்கு வந்தார். கோயில் வாசலில் அவருக்கு பூரண கும்பமரியாதை அளித்து அதிகாரிகள் வரவேற்றனர். இதையடுத்து ஏழுமலையானை ஆளுநர் அப்துல் நசீர் தரிசனம் செய்தார்.

## டெல்லியின் முக்கிய கோயில்களை தாக்க திட்டமிட்ட லஷ்கர் கமாண்டர் ஷபீர் அகமது லோன் கைது

புதுடெல்லி, ஏப்.2

இந்தியாவால் மிகவும் தீவிரமாக தேடப்படும் தீவிரவாதிகளில் ஒருவர் லஷ்கர்-இ-தொய்பா கமாண்டர் ஷபீர் அகமது லோன். இவர், தமிழ்நாட்டின் திருப்பூர், மேற்கு வங்கத்தின் மால்டா மற்றும் டெல்லியில் இருந்து இளைஞர்களைத் திரட்டியுள்ளார். சந்தேகத்தைத் தவிர்க்க, தென்னிந்தியாவில் வசிப்பவர்களை வட இந்தியாவில் தாக்குதல் நடத்தவும், வட இந்தியர்களை தெற்கில் பயன்படுத்தவும் அவர் திட்டமிட்டிருந்தார். அவர் நியமித்த நபர்கள் பல இடங்களை உளவு பார்த்துள்ளனர். நீண்ட கால இடைவெளியில் தொடர் குண்டு வெடிப்புகளை நடத்துவதே இவர்களது திட்டமாக இருந்துள்ளது. இதேபோல், மேற்கு வங்கத்தில் சட்ட விரோதமாக வசிக்கும் வங்கதேசத்தினரைத் திரட்டி, குறிப்பாகக் கோயில்களை உளவு பார்க்க அவர்களுக்கு உத்தரவிட்டிருந்தார். டெல்லி சாந்தினி சவுக்கில் உள்ள கவுரி சங்கர் கோயில் மற்றும் கல்காஜி கோயில்களை உளவு பார்க்க லோன் உத்தரவிட்டது விசாரணையில் உறுதியானது. நேபாளத்தில் இருந்து செயல்பட்டு வந்த லோன், தனது கூட்டாளிகளின் கைதால் அதிர்ச்சியடைந்து, நிலைமையைச் சீரமைக்க இந்தியாவுக்குள் நுழைய முயன்றுள்ளார். இதை கண்காணித்து வந்த டெல்லி போலீஸின் சிறப்புப் படையினர் காசிப்பூரில் வைத்து அவரை கைது செய்துள்ளனர். இதன் மூலம் மிகப்பெரிய அளவிலான தீவிரவாத தாக்குதல் முறியடிக்கப்பட்டுள்ளது.

## ஏப். 3-இல் பிரதமர் மோடி வருகை: புதுச்சேரியில் ட்ரோன்கள் பறக்க தடை

புதுடெல்லி, ஏப்.2

பிரதமர் நரேந்திர மோடி தேர்தல் பிரசாரத்துக்கு வெள்ளிக்கிழமை (ஏப்.3) வருவதை முன்னிட்டு, புதுச்சேரியில் ட்ரோன்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மோடி புதுச்சேரி வருகையின்போது ட்ரோன்கள் பறக்கத் தடை செய்யப்பட்ட மண்டலமாக அறிவிக்க, மாவட்ட நிர்வாகத்துக்கு காவல் கண்காணிப்பாளர் கோரிக்கை வைத்திருந்தார். அதன்படி, புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் அ.குலோத்துங்கன், பிரதமர் வருகை மற்றும் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் ட்ரோன் கேமராக்கள் மற்றும் ஆளில்லா வான்வழி கருவிகள் புதுச்சேரியில் பறக்க தடை விதித்து உத்தரவிட்டுள்ளார். மேலும், ட்ரோன்கள், பலூன்கள் போன்றவை மூலம் எவ்வித வான்வழி புகைப்படம் அல்லது விடியோ பதிவு மேற்கொள்ளவும் தடை செய்யப்பட்டுள்ளது. புதுச்சேரி மற்றும் உழவர்கரை நகராட்சிப் பகுதிகள் ட்ரோன்கள் பறக்கத் தடைசெய்யப்பட்ட மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை திங்கள்கிழமை இரவு ஆட்சியர் குலோத்துங்கன் பிறப்பித்துள்ளார்.

## சீனாவில் தயாரிக்கப்பட்ட சிசிடிவி கேமரா விற்பனைக்கு தடை

புதுடெல்லி, ஏப்.2:

இந்தியாவில் விற்பனை செய்யப்படும் சிசிடிவி. கேமராக்களில் மூன்றில் ஒரு பங்கு சீனா தயாரிப்புகள் ஆகும். குறிப்பாக ஹிக் விஷன், தகுவா மற்றும் டிபி-லிங்க் போன்ற சீன நிறுவனங்களின் தயாரிப்புகள் இந்திய சந்தையில் அதிகளவில் விற்பனையாகின்றன. இந்நிலையில், சிசிடிவி கேமராக்களின் பாதுகாப்பு தரத்தை கடுமையாக்குவதற்காக தர பரிசோதனை சான்றிதழ் (எஸ்டிக்யூசி) பெறுவது கட்டாயம் என்ற புதிய விதிமுறையை மத்திய அரசு நாளை முதல் அமல்படுத்த உள்ளது. சீன தயாரிப்பு சிப்கள் பொருத்தப்பட்ட சிசிடிவி கேமராக்களுக்கு, இந்த விதிமுறைப்படி தரச் சான்றிதழ் மறுக்கப்படும். எஸ்டிக்யூசி ஒப்புதல் இல்லாமல், சிசிடிவி கேமராக்களை இந்திய சந்தையில் விற்பதற்கு நாளை முதல் தடை விதிக்கப்படுகிறது. இந்த தடை சீன தயாரிப்புகளின் விற்பனைக்கு பலத்த அடியாக இருக்கும். இதனால் உள்நாட்டு தயாரிப்புகளின் விற்பனை அதிகரிக்கும். சிபி பிளஸ், க்யூபோ, பிரமா, மேட்ரிக்ஸ் மற்றும் ஸ்பார்ஷ் போன்ற உள்நாட்டு தயாரிப்பு சிசிடிவி கேமராக்கள் விற்பனை விரிவடையும். இந்த நிறுவனங்கள் சீனாவின் உதிரி பாகங்களை சார்ந்திருக்காமல், தைவான் சிப்கள் மற்றும் உள்நாட்டு பொருட்களை வாங்கும் நிலை ஏற்படும்.

## உடனடி போர் நிறுத்தம் : ஐ.நா வலியுறுத்தல்

**வாஷிங்டன், ஏப்.2:**

ஹிஸ்புல்லா-இஸ்ரேலுக்கு இடையிலான போர் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் இரு தரப்பும் உடனடி போர் நிறுத்தம் மேற்கொள்ள வேண்டும் என லெபனானுக்கான ஐ.நா சிறப்பு ஒருங்கிணைப்பாளர் ஜினின் ஹென்னிஸ்-பிளாஷார்ட் அழைப்பு விடுத்துள்ளார். இந்த மோதல் நீடித்தால் லெபனானின் பொருளாதார வளர்ச்சிக்கு ஈடுகட்ட முடியாத சேதம் ஏற்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். இஸ்ரேலின் தாக்குதலால் சுகாதாரப் பணியாளர்கள், பத்திரிகையாளர்கள், பொதுமக்கள், போரில் ஈடுபடாத லெபனான் ராணுவ வீரர்கள் என சுமார் 1,247 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

## அமெரிக்கத் தூதரகம் : வெனிசுலாவில் திறப்பு

வெனிசுலாவின் தலைநகரில் அமெரிக்கத் தூதரகம் ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. இது வெனிசுலாவுடனான எங்களது உறவில் ஒரு புதிய அத்தியாயம். தூதரகம் மீண்டும் திறக்கப்பட்டதன் மூலம், அங்குள்ள இடைக்கால அரசு, சிவில் சமூகம், தனியார் நிறுவனங்க ளுடன் நேரடித் தொடர்புகளை வலுப்படுத்த முடியும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவை அமெரிக்கா கடத்திய பிறகு இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை வெனிசுலா அரசு எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

## ரஷ்யாவுடன் ஒப்பந்த நீட்டிப்பு : செர்பியா அறிவிப்பு

ரஷ்யாவுடனான இயற்கை எரிவாயு விநியோக ஒப்பந்தத்தை மேலும் மூன்று மாதங்களுக்கு நீட்டிக்க செர்பியா ஒப்புக்கொண்டுள்ளதாக அந்நாட்டு ஜனாதிபதி அலெக்சாண்டர் வூசிக் தெரிவித்துள்ளார். ரஷ்ய ஜனாதிபதியுடனான தொலைபேசி வாயிலாக உரையாடிய அவர், அனைத்துத் துறைகள் குறித்து விவாதித்த தாகவும், பிறகு எரிவாயு ஒப்பந்தத்தை நீட்டித்ததாகவும் கூறினார். செர்பியா தனது தேவைகளுக்கு குறைந்த விலையில், சாதகமான விதிமுறைகளின் கீழ் எரிசக்தி வாங்குவதற்கு ரஷ்யாவையே பெரிதும் நம்பியுள்ளது.

## அமெரிக்கா போர் விமானங்கள் இறங்க இத்தாலியும் அனுமதி மறுப்பு



ஈரானை தாக்க மேற்கு ஆசிய நாடுகளுக்கு அனுப்பப்படும் அமெரிக்க ராணுவ விமானங்களை தன் நாட்டில் தரையிறங்க இத்தாலி அனுமதி மறுத்துள்ளது. அமெரிக்காவின் சில குண்டுவீச்சு விமானங்கள் (BOMBERS) மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் வழியில் கிழக்கு சிசிலியில் உள்ள இந்தத் தளத்தில் தரை யிறங்கத் திட்டமிட்டிருந்தன. இந்நிலையில் இத்தாலி அனுமதி மறுத்துள்ளதாக 'கொரியர் டெல்லா செரா' நாளிதழ் செய்தி வெளி யிட்டுள்ளது. இத்தாலியின் எதிர்க்கட்சிகள், ஈரான் மீதான போரில் அமெரிக்காவுக்கு இத்தாலி உதவக்கூடாது என அழுத்தம் கொடுத்த நிலையில் இம்முடிவை நோக்கி அந்நாட்டு அரசு நகர்ந்துள்ளது.

## பேட்டரி தொழில்நுட்பம்: இலங்கை முடிவு

சூரிய சக்தியை சேமித்து வைக்கும் பேட்டரி தொழில்நுட்பத்தை அவசரமாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசு முடிவெடுத்துள்ளது. உலகளாவிய எரிசக்தி விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதால், இலங்கையில் எரிபொருள்மற்றும் மின்சாரக் கட்டணங்கள் 40 சதவீதம் வரை உயர்த்தப்பட்டுள்ளன. இந்நிலையில் தான் சூரிய சக்தியை சேமித்து வைக்கும்பேட்டரி கட்டமைப்பு மற்றும் புதிய நீர்மின் திட்டங்களை அவசரமாக அமைப்பதற்கான திட்டங்களை செவ்வாயன்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.

# கூகுள், மைக்ரோசாப்ட் மீது தாக்குதல் நடத்துவோம்: அமெரிக்காவுக்கு அதிர்ச்சி கொடுத்த ஈரான்

**தெஹ்ரான், ஏப்.2:**

அணு ஆயுதக்கொள்கையைக் கைவிடக் கோரி ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கடந்த மாதம் 28 ஆம் தேதி தாக்குதல் நடத்தியது. ஒருமாதத்திற்கும் மேலாக இந்த தாக்குதல் நடைபெற்று வருகிறது. அமெரிக்காவின் தாக்குதலுக்கு பதிலடியாக வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மீது ஈரான் தாக்கி வருகிறது. இதனால், அபுதாபி, துபாய், பஹ்ரைன், கத்தார் உள்ளிட்ட இடங்களில் பதற்றமான சூழல் நிலவுகிறது. அமெரிக்கா தாக்குதலை தீவிரப்படுத்த




திட்டமிட்டுள்ளதாக கூறப்படும் நிலையில், அமெரிக்காவுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக ஈரானின் புரட்சிகர காவல் படையும் களத்தில் இறங்கியுள்ளது.

இது தொடர்பாக எச்சரிக்கை விடுத்துள்ள அந்த அமைப்பு, மேற்காசியாவில் உள்ள அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனங்களே இனி தங்களது இலக்கு என தெரிவித்துள்ளது. மைக்ரோசாப்ட், கூகுள், ஆப்பிள், இண்டெல், ஐபிஎம், டெஸ்லா, போயிங் உள்பட 18 நிறுவனங்களுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்கள் உடனடியாக வெளியேறுமாறும் ஈரான் அறிவுறுத்தியுள்ளது.

தங்கள் நாட்டின் மீதான தாக்குதல்களில் ஏ.ஐ.தொழில்நுட்பத்தை அமெரிக்கா பயன்படுத்துவதாக ஈரான் கருதுகிறது. உலகின் முன்னணி நிறுவனங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள தாக்குதல் எச்சரிக்கை சர்வதேச அளவில் பரபரப்பை ஏற்படுத்தியதுள்ளது. ஈரான் கூறியது போல தாக்குதல் நடந்தால் பெரிய அளவில் தொழில்நுட்ப துறையில் பல்வேறு சேவைகள் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

## 30 ஆயிரம் ஊழியர்களை பணி நீக்கம் செய்த ஆரக்கிள் நிறுவனம்: இந்தியர்கள் மட்டும் 12 ஆயிரம் பேராம்!

**வாஷிங்டன், ஏப்.2:**

அமெரிக்காவை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும் நிறுவனம் ஆரக்கிள் (Oracle). இந்தியா மட்டுமின்றி உலகின் பல்வேறு நாடுகளில் இந்த நிறுவனம் செயல்பட்டு வருகிறது. தகவல் தொழில்நுட்ப துறையில் உலகளவில் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாக இந்த நிறுவனம் உள்ளது. இந்த நிறுவனம் கடந்த ஆண்டு முதல் ஏஐ முதலீடுகளை அதிகரிக்க தொடங்கி உள்ளது. ஓபன் ஏஐ உள்பட பல நிறுவனங்களுடன் சேர்ந்து செயல்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக ஏஐ மையங்களுக்கு நிதி ஒதுக்குவதில் சிக்கலை சந்தித்தது.

இந்நிலையில் பிரபலமான ஆரக்கிள் நிறுவனம் உலகம் முழுவதும் 30 ஆயிரம் ஊழியர்களைப் பணிநீக்கம் செய்திருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. செயற்கை நுண்ணறிவு (AI) தொடர்பான மிகப்பெரிய முதலீடுகள் மற்றும் டேட்டா சென்டர் கட்டுமானத் திட்டங்களுக்காக அதிக செலவுகள் ஏற்பட்டுள்ளதால், நிறுவனத்தின் செலவினங்களை கட்டுப்படுத்தும் முயற்சியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த ஆட்குறைப்பு, இந்தியா மற்றும் மெக்சிகோ உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளன. இணையத்தில் பரவி வரும் தகவல்களின்படி, இந்தியாவில் உள்ள சுமார் 30 ஆயிரம் பணியாளர்களில் கிட்டத்தட்ட 12 ஆயிரம் பேர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகளவில், பணிநீக்கங்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 30 ஆயிரமாக இருக்கும் என மதிப்பிடப்படுகிறது. இது ஆரக்கிள் நிறுவனத்தின் மொத்தப் பணியாளர்களில் ஏறத்தாழ 18 சதவீதமாகும். இதுதொடர்பாக ஆரக்கிள் நிறுவனம், அதிகாலை 5-6 மணிக்குள் அனைத்து ஊழியர்களுக்கும் மின்னஞ்சல்களை அனுப்பியதாக கூறப்படுகிறது.

பணிநீக்கம் குறித்து ஆரக்கிள் தரப்பில், "ஏஐ தொழில்நுட்பம் வளர்ந்து வரும் நிலையில், சில வேலைகள் எதிர்காலத்தில் தேவையற்றதாக மாறக்கூடும் என்பதால் அந்த துறைகளில் பணியாளர் குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த மாற்றங்களின் காரணமாக, செயல்பாடுகளைச் சீரமைக்க ஒரு முடிவு எடுக்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளது. ஆரக்கிள் நிறுவனத்தின் இந்த பணிநீக்க அறிவிப்பு உலக அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே அமேசான் போன்ற முன்னணி நிறுவனங்களும் ஏஐ முதலீடுகளுக்காக இதே போன்ற ஆட்குறைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

## ரஷியா ராணுவ விமானம் விபத்து: 29 பேர் பலி

**மாஸ்கோ, ஏப்.2:**

கிரிமியா தீபகற்பத்தின் மீது பறந்துகொண்டிருந்தபோது ரஷியாவின் அன்டோனோவ்-26 ராணுவ விமானம் ஒன்று விபத்தில் சிக்கியது. இந்த விபத்தில் 29 பேர் உயிரிழந்தனர். விமான விபத்தில் 29 பேர் உயிரிழந்ததை ரஷியாவின் பாதுகாப்பு அமைச்சகம் உறுதி செய்துள்ளது.



நேற்று அங்கு உள்நாட்டு நேரப்படி மாலை 6 மணியளவில், கிரிமியன் தீபகற்பத்தின் மீது திட்டமிடப்பட்ட பயணத்தில் இருந்த ஏ.என்-26 ராணுவ போக்குவரத்து விமானத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டு விபத்துக்குள்ளானதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தேடல் மற்றும் மீட்புக் குழுவினர் ஏ.என்-26 விமானம் விபத்துக்குள்ளான இடத்தை கண்டுபிடித்துள்ளனர்.

சம்பவ இடத்தில் இருந்து கிடைத்த தகவல்களின்படி, விமானத்தில் இருந்த ஆறு பணியாளர்கள் மற்றும் 23 பயணிகளும் உயிரிழந்தனர் என அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. விமானத்தின் சிதறிய பாகங்களில் வெளிப்புற தாக்குதலுக்கான எந்த அறிகுறிகளும்காணப்படவில்லை என்றும், தொழில்நுட்பக் கோளாறே விபத்திற்கு காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது. விமான விபத்திற்கான காரணம் குறித்து விசாரணை தொடங்கி உள்ளது.

## அமைதிப்படை வீரர் படுகொலை : குட்டரெஸ் கடும் கண்டனம்

**நியூயார்க், ஏப்.2:**

லெபனான் மீது தாக்குதல் நடத்தி அதன் நிலப்பகுதியை இஸ்ரேல் ராணுவம் ஆக்கிரமித்து வருகிறது. இந்த போரில் ஹிஸ்புல்லா அமைப்பின் தளங்களை தாக்குவதாகக் கூறிக்கொண்டு, மக்கள் வசிப்பிடங்கள் மீது இஸ்ரேல் குண்டு வீசி வருகிறது. இத்தாக்குதலில் ஐ.நா அமைதிப்படை வீரர்கள் இருந்த பகுதியில் இஸ்ரேல் ஏவுகணை வீசியது. அத்தாக்குதலில் இந்தோனேசிய வீரர் ஒருவர் படுகொலை ஆகியுள்ளார். இச்சம்பவத்திற்கு ஐ.நா பொதுச்செயலாளர் அந்தோணியோ குட்டரெஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

## அமெ., இஸ்ரேலுக்கு அனுமதியில்லை : வான்வெளியை மூடியது ஸ்பெயின்

ஈரான் மீதான அமெரிக்கா-இஸ்ரேல் போருக்கு எதிராக உள்ள ஒரே ஐரோப்பிய நாடு ஸ்பெயின். சர்வதேச சட்டத்தை மீறி ஒருதலைப்பட்சமாகத் தொடங்கப்பட்ட இந்தப் போரில் பங்கேற்பதில்லை, ஆதரவளிப்பதில்லை என அந்நாட்டு பிரதமர் பெட்ரோ சான்செஸ் உறுதியாக உள்ளார். இதன் காரணமாக அந்நாடுகளின் போர் விமானங்கள் தங்கள் நாட்டு வான்வெளியில் பறப்பதற்கு தடை விதித்துள்ளார். இந்த தடை ஸ்பெயின் அண்டை நாடுகளின் ராணுவத்தலத்தில் உள்ள அமெரிக்கப் போர் விமானங்களுக்கும் பொருந்தும்.

## ஏசி மின் விளக்கு பயன்பாடு: வங்கதேசத்தில் புது கட்டுப்பாடு

அரசு அலுவலகங்களில் மின்விளக்குகளை அணைக்கவும், குளிர்சாதன வசதியைக் (AC) குறைக்கவும் வங்கதேச அரசு உத்தரவிட்டுள்ளது. குளிர்சாதனப் பெட்டிகளின் வெப்பநிலை 25 டிகிரி செல்சியஸ் அல்லது அதற்கு மேல் மட்டுமே இருக்க வேண்டும்.

அத்தியாவசியமான மின்விளக்குகள், மின்விசிறிகள் மற்றும் ஏசி-க்கள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தியுள்ளது. எரிபொருள் தேவையில் 95 சதவீதத்தை இறக்குமதிமூலமே பூர்த்திசெய்யும் வங்கதேசம் பெரும் நெருக்கடியை சந்தித்துக் கொண்டுள்ளது.

## ஈரான் விவகாரம்: முக்கிய அறிவிப்பை வெளியிடும் அமெரிக்க அதிபர் டிரம்ப்



ஈரான் அமெரிக்கா, இஸ்ரேல் இடையேயான போர் இன்று 33-வது நாளாக நீடித்து வருகிறது. இதில் ஈரான் முழுவதும் அமெரிக்காஇஸ்ரேல் படைகள் இணைந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

இதற்கு பதிலடியாக, இஸ்ரேல் மற்றும் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க தளங்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்துகிறது.

போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா ஒருபக்கம் அமைதி பேச்சுவார்த்தையுடன் கூடிய தாக்குதலை முன்னெடுத்து வருகிறது. மறுபக்கம், ஈரானின் முக்கிய நகரங்களை குறிவைத்து இஸ்ரேல் தாறுமாறாக தாக்கி வருகிறது.

ஈரான் மீது மிகப்பெரிய அளவில் தாக்குதல் நடத்த அமெரிக்கா தயாராகி வருவதாக சொல்லப்பட்ட நிலையில், அதற்கு பதிலடி கொடுக்கவும் ஈரான் தயாராகி வருகிறது. இந்த நிலையில், ஈரான் போர் விவகாரத்தில் முக்கிய அறிவிப்பை டிரம்ப் வெளியிடுவார் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

ஒப்பந்தம் எதுவும் ஏற்படாமலே ஈரானை விட்டு அமெரிக்கா வெளியேற உள்ளதா? அல்லது ஈரான் மீது கடுமையான தாக்குதலை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதா? என்பது பற்றி டிரம்ப் நாளை அறிவிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முன்னதாக, ஈரானில் இருந்து இரண்டு அல்லது மூன்று வாரங்களில் வெளியேறுவோம் என்று டிரம்ப் கூறியிருந்தார்

# 53 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் அமெரிக்கா

**வாஷிங்டன், ஏப்.2:**

பூமியின் ஒரே துணைக்கோளாக நிலவு உள்ளது. நிலவை ஆய்வு செய்வதில் விஞ்ஞானிகள் தீவிரம் காட்டு கிறார்கள் குறிப்பாக கடந்த நூற்றாண்டில் அமெரிக்காவும் ரஷ்யாவும் போட்டிப் போட்டுக் கொண்டு நிலா குறித்து ஆய்வுகளைச் செய்தன. இதற்காகத் தொடர்ச்சியாகப் பல சாட்டிலைட்களையும் அனுப்பின. ஆனால், அதன் பிறகு இரு நாடுகளுமே நிலவு குறித்த ஆய்வுகளை இரு நாடுகளுமே விட்டுவிட்டன. இந்நிலையில் அரை நூற்றாண்டுக்குப் பிறகு நாளை மனிதர்களை நிலவுக்கு அனுப்பவுள்ளது நாசா. இதற்காக ஆர்டெமிஸ் என்ற திட்டத்தை தொடங்கி, செயல்படுத்தி வருகிறது நாசா.



நிலவில் உள்ள கனிம வளங்களைப் பயன்படுத்துவது மற்றும் எதிர்காலத்தில் செவ்வாய் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்புவதற்கான ஒரு 'பயிற்சி மையமாக' நிலவைப் பயன்படுத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் திட்டமான 'ஆர்டெமிஸ்-2' திட்டத்தை ஆராய்ச்சி செய்து வருகிறது.


இதற்காக எலான் மஸ்கின் 'ஸ்பேஸ் எக்ஸ்' மற்றும் ஜெப் பெசோஸின் 'ப்ளூ ஆரிஜின்' போன்ற தனியார் நிறுவனங்களும் நாசாவுடன் கைகோர்த்துள்ளன. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சோதனையோட்டத்தில் 3 அமெரிக்க விண்வெளி வீரர்களும், ஒரு கனடா வீரரும் 53 ஆண்டுகளுக்கு பிறகு நிலவை நோக்கிப் பயணிக்கின்றனர். நாசாவின் 'ஓரியன்' விண்கலம் மற்றும் உலகின் சக்திவாய்ந்த 'எஸ்.எல்.எஸ்' ராக்கெட் மூலம் இவர்கள் விண்ணில் ஏவப்பட உள்ளனர்.

நிலவைச் சுற்றி வந்து மீண்டும் பூமிக்கு திரும்பும் இந்த 10 நாள் பயணம், மனித குலம் இதுவரை விண்வெளியில் சென்றிராத ஆழமான பகுதிக்கு அவர்களை அழைத்துச் செல்லும். கடந்த 1972-ம் ஆண்டு 'அப்பல்லோ 17' விண்கலத்திற்கு பிறகு, மனிதர்கள் நிலவில் கால் தடம் பதிக்கவில்லை. தற்போது சுமார் ரூ.7½ லட்சம் கோடி (93 பில்லியன் அமெரிக்க டாலர்) செலவில் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது. வரும் 2028-ம் ஆண்டு நிலவின் தென் துருவத்தில் மனிதர்களைத் தரையிறக்குவதே நாசாவின் இறுதி இலக்காகும்.

விண்வெளி ஆராய்ச்சியில் தனக்கு கடும் போட்டியாளராக உருவெடுத்துள்ள சீனா, 2030-க்குள் நிலவில் மனிதர்களைத் தரையிறக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்கா தனது ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்ட இந்த திட்டத்தை முடுக்கிவிட்டுள்ளது. வானிலை சாதகமாக இருந்தால் இன்று நிலவு நோக்கிய இந்த பயணம் தொடங்கும். இதனை ஒட்டுமொத்த உலகமே ஆவலுடன் எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கிறது.

இந்தியாவின் 40 சதவீத கச்சா எண்ணெய், 90 சதவீத சமையல் எரிவாயு ஹார்முஸ் நீரிணை வழியாக கொண்டு வரப்படுவது குறிப்பிடத்தக்கது.

# ராகுல் காந்திக்கு தோல்விகளின் சதம் காத்திருக்கிறது:மோடி



## இந்தியாவில் விமான எரிபொருள் விலை இரு மடங்கு அதிகரிப்பு



## பாஜகவுடன் திமுக கூட்டணி வைத்தது; இபிஎஸ் போல அடகு வைக்கவில்லை

## 8வது மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் தொடங்கியது

## சீனாவில் தயாரிக்கப்பட்ட சிசிடிவி கேமரா விற்பனைக்கு தடை

## ரஷியா ராணுவ விமானம் விபத்து: 29 பேர் பலி


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 02.04.2026 வியாழக்கிழமை இலவச இ-பேப்பர்